திருக்கோணமலை

## இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி

Tamil Programme Unit
Sri Lanka

அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய

# மகா கும்பாபிஷேக மலர்

ஈசுரவருடம் ஆவணி மாதம் 22ம் நாள் 1997-09-07



வெளியீடு இந்து மாணவர் மன்றம்

S. VANNIYAKULAM
Director (Tamil Programmes)
Tamil Programmes Unit
Sri Lanka Rupavahini Corporation
Colombo 07


உ
கணபதி துணை

திருக்கோணமலை

இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய

# மகா கும்பாபிஷேக மலர்



ஈசுர வருடம் ஆவணித்திங்கள் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமை

07 - 09 - 1997

*வெளியீடு:-*

**இந்து மாணவர் மன்றம்**

**ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி**

**திருக்கோணமலை.**

அன்பளிப்பு

# சமர்ப்பணம்





இறைவனுக்(கு) இனிய நல் கமலமே!
எண்ணங்கள் ஏந்திடும் கலசமே!
வரும் புகழ் மாணவ சந்ததி
மனங்களின் அருங்கலை அமுதமே
கருணையின் 'சாரதை' வரிசையின்
கவினுறு ஆலயத் தரளமே!
ஒரு புகழ்க் காவியப் புதுமை நீ!
உன் எழில்! விநாயக சமர்ப்பணம்!

மலர்வன! மலர்கள்! ஓராயிரம்!
வாஞ்சையின் பக்தர்கள் கரங்களே!
நலன் தரு விபுலா நந்தனின்
நற்றவ வழிபடு உருவென
பலன் மிகு ஆலயப் பேரெழில்
படையலில் கலந்திடும் இனியவள்!
உலவிடும் சாரதைப் புதுநிலா!
உயர் துதிக் கரந்தனில் சமர்ப்பணம்!





பிரதிஷ்டை செய்யப்பட்ட மூலவிக்கிரகம்

# பொருளடக்கம்

**அடக்கம்** **பக்கம்**


சமர்ப்பணம்
ஆசிச் செய்தி - **ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜீ அவர்கள்**
ஆசிச் செய்தி - **பிரம்மஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள்**
அதிபர் உரை - **திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள்**
வாழ்த்துச் செய்தி - **திரு. க. தங்கராஜா அவர்கள்** (பி. க. ப.)
வாழ்த்துச் செய்தி - **திரு. செ. சிவபாதசுந்தரம்** (செயலாளர் இ. இ. பே)
பொறுப்பாசிரியர் உரை - **திரு. செ. பத்மசீலன் அவர்கள்**
இதழாசிரியர் உரை - **செல்வன் சி. பிரேம் ஆனந் அவர்கள்**
பிரதி அதிபர் உரை - **திரு. மா. இராசரெத்தினம் அவர்கள்**
இந்து மாணவர் மன்ற செயற்குழுவும் வகுப்பு பிரதிநிதிகளும்

| | |
|---|---|
| விநாயகப் பெருமானும் கல்லூரியும் | 01 |
| கும்பாபிஷேகம் ஒரு விளக்கம் | 04 |
| ஆலயப்பிரதட்சணம் | 05 |
| புண்ணிய பூமியில் இன்னுமோர் ஆலயம் | 07 |
| திருக்கோணமலை மாவட்டத்தில் விநாயகர் வழிபாடு | 10 |
| விநாயக வழிபாட்டுத் தொன்மையும் சிறப்பும் | 12 |
| ஆலய வழிபாடும் நாமும் | 16 |
| ஆலய அமைப்பும் சிற்ப சாஸ்திரமும் | 18 |
| அந்தரங்க சுத்தி | 21 |
| விநாயகர் வழிபாடு | 23 |
| மனம் கவர்ந்த மூவர் | 26 |
| பிள்ளையார் | 27 |
| இசையும் கலையும் | 29 |
| காணாபத்தியம் | 31 |
| விநாயக விரதங்கள் | 32 |
| சொல்லாததும் இல்லை, இல்லாததும் இல்லை | 33 |
| இறைவன் - இசை - ஆலயம் | 35 |
| பழந்தமிழர் பண்டை நடுகல் வழிபாடு | 37 |
| அன்பு வழிகாட்டும் எமது சமயம் | 39 |
| விரதம் என்பது மனக்கட்டுப்பாடே | 40 |
| பாடசாலையில் சமயக் கல்வி | 41 |
| இந்து மதத்தின் நாகரிகம் | 42 |
| சைவ சமய சின்னங்கள் | 43 |
| சந்ததமும் இணைந்து பணிவோம் | 44 |

# சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின்

# ஆசிச் செய்தி

தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லாரி வளாகத்திலே, அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானுக்கு நூதன ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மகாகும்பாபிஷேக விழா, எதிர்வரும் ஞாயிறு 07 - 09 - 1997 அன்று நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயத்தை அமைப்பதற்கு, இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள், மிகுந்த பக்தி சிரத்தையுடன் உழைத்துள்ளனர் என்பதைக் காண முடிகின்றது. அவர்கள் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள். பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளும் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தன.

லௌகிகக் கல்வியோடு ஆன்மிகக் கல்வியைப் புகட்டுவதே ராமகிருஷ்ணப் பள்ளிகளின் சிறப்பம்சமாகும். தி/இந்துக்கல்லூரி மாணவர்கள் படிப்பிலும் விளை யாட்டிலும் இம் மாவட்டத்தின் பெருமைக்குரியவர்களாக, எப்பொழுதும் முதன்மை ஸ்தானத்தில் இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவர். அதே சமயத்தில், அவர்களது ஒழுக்கத்தையும், இறைபக்தியையும் வளர்ப்பதிலும் இக்கல்லூரி மிக்க கவனம் செலுத்தி வருகிறது. அதற்கென பல சமய நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயம் இக்கல்லூரி யில் ஏற்கெனவே அமைந்துள்ள இறைசூழலை இன்னும் அதிகப்படுத்தி, மாணவர்களது மனதைத் தூய்மைப்படுத்த வழிகோலும் என்பதில் ஐயமில்லை. இக் கோயிலை மையமாகக் கொண்டு, பல சமய நிகழ்ச்சிகள் நடைபெற்று மாணவர்களை நல் வழிப்படுத்த, எல்லாம் வல்ல அருள்மிகு சித்திவிநாயகப் பெருமானது திரு அருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**சுவாமி ஆத்மகனாநந்தா**

இராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு
05 - 09 - 97.

பிரதிஷ்டா பிரதமகுரு

"வேதாகமமாமணி பக்தகிரியாதிலகம்"

## பிரமஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள்

(திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா, பிரதமகுரு)

### அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

திருகோணமலை நகரின் கல்விச் செல்வம் கொழிக்கும், இ. கி. மி. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பல ஆண்டுகளாக வழிபாடியற்றி வரும் விநாயகப் பெருமானுக்கு நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடை பெற்றிருப்பது கல்லூரியின் வரலாற்றுச் சிறப்பாகும்.

ஆலய வழிபாடு மனஅமைதி, ஒழுக்கம், பிறஉயிர்களின் அன்பு என்ப வற்றை தோற்றுவிக்கின்றன. இப்பண்புகள் சிறப்புற்றோங்கும் தன்மையில் தான் பெற்ற கல்வியை தனக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக்க முடியும். இப் பதிபுண்ணிய கைங்கரிய திருப்பணி வேலைகள் கும்பாபிஷேக கிரியைகள் அனைவற்றிலும் முன்நின்று தொண்டாற்றிய அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், சமய நலன் விரும்பிகள், விநாயக அடியார்கள் அனைவருக்கும் வெவ்வினை யறுக்கும் விநாயகனின் திருவருளும், அன்னை பத்திரகாளி அம்பாளின் பேரரு ளும், பெற்று மங்களமாய் வாழ வாழ்த்துகின்றேன்.

சர்வே ஜ நாஸ் சுகினோ பவந்து

சுபம்

**சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

# அதிபரின் வாழ்த்துரை

சுவாமி விபுலாநந்தர் அவர்கள் எமது கல்லூரியில் அதிபராகக் கடமை யாற்றிய காலத்தில் மூன்று உருளையான கருங்கற்களை விநாயகர் விக்கிரங் களாகவைத்து வழிபட்டு வந்தார். இந்த மூன்று உருளையான கருங்கற்கள்தான் எமது அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் மூல விக்கிரங்களாகும். நாம் மாணவ ராக இருந்த காலத்தில் பழைய காளியப்பு மண்டபத்திற்கும் நடராஜானந்தா மண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் காளிகோவில் பக்கமாக சுவர் ஓரத்துடன் ஒரு சிறிய கோவிலில் இவ் விநாயகர் கற்கள் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது.

புதிய கட்டிடங்களின் அமைப்பினாலும், கால மாற்றங்களினாலும் இந்த சிறிய ஆலயம் சிதைந்து போகலாயிற்று. விநாயகர் இடம்பெயர்க்கப்பட்டு, அம்பல வாணர் அகத்துக்கு முன்பாக கொண்டு வரப்பட்டு ஒரு சிறிய மேடையில் பிரதிட்டை செய்யப்பட்டார்.

மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் எமக்கு அருள் செய்து கொண்டிருந்த விநாயகரை ஒரு அழகான ஆலயத்தில் அமரச் செய்ய எல்லோரும் விரும்பினோம். 1995ம் ஆண்டு மாசி மாதம் 3ந் திகதி ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் படிப்படியாக ஆலய அமைப்புப் பணிகளை நிறைவு செய்து, 1997ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ந் திகதி கும்பாபிஷேகத்தை நடாத்தி முடித்தோம்.

நாம் சார்ந்துள்ள சமூகத்தின் வரலாற்று அடையாளங்களையும், மரபுகளை யும், பெருமைகளையும் பேணிக்காத்து, எதிர்காலச் சமுதாயத்திற்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து ஒரு முன்னணிக் கல்வித்தாபனம் தவறிவிட முடியாது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றியிருக்கின்றோம்.

பிள்ளைகளின் நடத்தைகளில் சீலத்தை வளர்த்து செல்வதற்கு சமயப் போதனைகளும், வழிபாட்டு முறைகளும் உதவி செய்யும். எமது அருள் மிகு சித்தி விநாயகர் ஆலயம் வெறுமனே வழிபாட்டுக்குரிய இடமாக மாத்திரமல்லாது மாணவர் நல்ல போதனைகளைக் கேட்கக் கூடிய இடமாகவும் விளங்கும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் பூர்த்தியாகிச், சங்காபி ஷேகத்தைக் காணுகின்ற இவ்வேளையில் எமது இந்து மாணவர் மன்றம் கும்பாபி ஷேக மலர் ஒன்றை வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிக்கின்றேன். எம் எல்லோரையும் நல்வழி யில் செலுத்துமாறு விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்வோமாக.

★ **வணக்கம்** ★

**சி. தண்டாயுதபாணி,**
அதிபர்.

# திருக்கோணமலை பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளர்

# க. தங்கராசா அவர்களின்

# வாழ்த்துரை

வரலாற்றுப் புகழ் மிகுந்த நமது பழம் பெரும் நகரமான திருகோணமலை நகரம் தமிழும் சைவமும் ஒன்றிணைந்து களிநடம் புரியும் திவ்விய பூமியாகும் இப்புண்ணிய மண்ணினில் கல்விப் பயிரைக் கண்ணெனப் போற்றித் துதித்து வளர்த்து வரும் கல்லூரி தி/இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகும்.

தி/இ. கி. மி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருகோணமலை மாவட்டத்தின் சகல சிற்றூர்களிலும் உள்ள மாணவச் செல்வங்களுக்குப் புகலிடம் கொடுத்து கல்வி அபிவிருத்தியில் தனக்கென ஓரிடத்தை வகித்து வருவது நாம் யாவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

இக்கல்லூரியின் ஒவ்வொரு நகர்வும் கல்விச் சிந்தனையை அடியொட்டி யதாகவே உள்ளது. இங்கு தமிழோடு சைவம் இரண்டறக் கலந்து இனிதாக எழிலோங்கி நிற்பதையும் நாம் அறிவோம். இப்பேருண்மையை எடுத்தோதும் விதமாக இங்குள்ள அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம் கம்பீரமாக கல்லூரி முன்றலில் கனிவாக அமைந்துள்ளது. பேரருள் பாலிக்கும் இவ்வாலயத்தினைப் புதுமை மணம்பெற திருத்தியமைத்து, அதனையடுத்து இவ்வாலயத்தில் மகாகும் பாபிஷேகமும் இனிதே நடாத்தி முடித்த பெருமையில் இக்கல்லூரி இன்று திகழ்ந்து மகிழ்கிறது. இம்மகிழ்ச்சியின் உந்தலால் - இவ் அருள்மிகு சித்திவிநா யகரை உளமாரஏற்றுச் சிறப்பு மலர் ஒன்றும் இக்கல்லூரியால் வெளியிடுவதை யிட்டு அறிந்து பேருவகை அடைகின்றேன்.

தொடர்ந்தும் இக்கல்லூரி தமிழும் சைவமும் செழித்தோங்க ஆன பணி களை ஆற்றிவரும் என்ற நம்பிக்கை எமக்கு உறுதியாக உண்டு. அதற்கு எல் லாம்வல்ல அருள்மிகு சித்திவிநாயகர் பேரருள் பாலிப்பார் என்ற நம்பிக்கை யோடு எதிர்காலம் என்றும் ஒளிமயமாகட்டும் என நாமும் வாழ்த்துகிறோம்.

பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
திருக்கோணமலை.

**க. தங்கராசா**

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் 'சிவஞானச் செல்வர்' செல்லப்பா சிவபாதசுந்தரம்

## அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தேவாரப்பாடல் பெற்ற திருக்கோணேஸ்வர ஷேத்திரமாகிய திருக்கோண மலைத் திருநகரில் இராமகிருஷ்ண சங்க கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரால் வைத்துப் பூசித்து வணங்கப்பட்டு வந்த விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரப் பெருமானுக்கு நிரந்தர ஆலயம் அமைத்து அவ் ஆலயத்தின் திருக்குட முழுக்கு விழா என்று அழைக் கப்படும் கும்பாபிஷேகப் பெரு விழாவும் நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளமையை அறிந்து மிகுந்த ஆத்ம திருப்தியும் மனநிறைவும் அடைகின்றோம். திருக்கோணமலையில் இந்துமத வளர்ச்சிப் பணியில் இந்துக்கல்லூரிக்கு ஓர் தனிச்சிறப்பு இருக்கின்றது என்றால் அது மிகை யாகாது. எனவே அச்சிறப்புக்கு மிக இன்றியமையாததாக விளங்கப்போகின்ற மிக முக்கிய அம்சங்களில் ஒன்றான அருள்மிகு விநாயகர் ஆலயத்தினை நன்கு சிந்தித்து கலை அம்சத்துடன் நிர்மாணித்த குறளமுத வள்ளல் திரு. கா. விநாயகசோதி அவர்கட்கும், சிற்ப கலாநிதி திரு. கந்ததாஸ் இரவீந்திரதாஸ் அவர்கட்கும், பிரதம குருவாக முன்னின்று கிரியா காரியங்களைச் சிறப்பாக நிறைவேற்றிய வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள் அவர்கட்கும், எல்லா வற்றிற்கும் அச்சாணியாக இருந்து சேவை நோக்குடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்றி வருகின்ற அதிபர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்கட்கும், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், குறிப்பாக கல்லூரி இந்து மாணவர் மன்றத்தினருக் கும் மற்றும் இவ்வரிய முயற்சியில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் திருக் கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் மேலான வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

வணக்கம்

சிவஞானச் செல்வர்
செ. சிவபாதசுந்தரம்.

# பொறுப்பாசியரிடமிருந்து.........

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் நடபெறும். இவ்வேளையில் விநாயகரின் திருவருளால் அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத் திற்கான கும்பாபிஷேகம் நடைபெற்று அதன் சிறப்பு மலராக சமயக் கட்டுரைகள், சமயக் கருத்துக்களை தாங்கி பக்தி மனம் கமழும் கும்பாபிஷேக மலராக வெளிவருவதனயிட்டு அக மகிழ்வடைகின்றேன்.

எமது மன்றமானது பாடசாலை மட்டத்தில் நாயன்மார்கள் குருபூசை, நவராத்திரி விழா, யோகாசன வகுப்பு, சமய வகுப்புக்கள். சமய அறிவுப் போட் டிகள் என்பனவற்றை நடத்தி வருவதோடு மாணவர்களது சமய அறிவையும் எழுத்தாக்கத்தையும் விருத்தி செய்யும் நோக்கில் "சாரதை" என்னும் சமய சஞ்சிகையை வருடம் ஒருமுறை வெளியிட்டு வருகின்றோம்.

எமது கல்லூரியின் அருள்மிகு சித்தி விநாயகருக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றமையினால் இவ்வாண்டு சஞ்சிகையை "கும்பாபிஷேக மலராக" வெளியிடுகின்றோம். இதில் மாணவர்களதும் அறிஞர்களதும், ஆசிரியர்களதும், ஆக்கங்கள் இடம் பெறுகின்ற இவ்வேளையில் ஆக்கங்களை வழங்கிய வர்களுக்கு நன்றிகள்.

இம்மலர் மூலமாக ஆலய வரலாறு படைக்கப்படுவதுடன், விநாயகர் வழிபாடு, கும்பாபிஷேகம், சமயக் கருத்துக்கள் என்பனவறறை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு ஊரில் ஆலயமும், கல்விச்சாலையும் அறிவூட்டும் இரு கண்கள் எமது கல்லூரியில் இரண்டு உள்ளமையினால் மாணவர்கள் அன்பு. அறிவு, அடக்கம், நேர்மை, பணிவு என்பனவற்றை இவ் இளம்பராயத்திலே பெற்றுக் கொள்ள வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

எனவே இம்மலரை வெளியிடுவதில் பங்காற்றிய கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர், மாணவர்கள், மன்ற உறுப்பினர்கள், பெரியார்கள், நிதி உதவி வழங் கியோர், அச்சகத்தினர், புகைப்படப்பிடிப்பாளர் யாவருக்கும் எல்லாம் வல்ல சித்தி விநாயகர் அருள் பாலிக்க வேண்டும் எனவும், பிரார்த்தித்து இம்மலரானது எமது மாணவர்களது, பெற்றோர்களது இல்லத்தில் இருக்க வேண்டுமென பணிவுடன் கேட்டு நிறைவு செய்கின்றேன.

**செ. பத்மசீலன்**
பொறுப்பாசிரியர்
இந்து மாணவர் மன்றம்

# இதழாசிரியர் உரை

தாயினும் நல்ல தலைவரான, கோணேப் பெருமானின் பதியிலே சிறப்புப் பெற்றுத் தேசிய பாடசாலையாக மிளிரும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில், அதிபர் சுவாமி விபுலாநந்தர் காலந் தொடக்கம் எழுந்தருளி, சித்தி விநாயகப் பெருமான் அருள் பாலித்து வருகின்றார். இந்து மாணவ மன்றத்தினரின். "சாரதை" சஞ்சிகை வரிசையிலே, ஈசுர ஆண்டின் "சாரதை" கும்பாபிஷேக மலராக வெளிவருவதால் பேருவகை அடைகின்றோம்.

பல தரப்பினரதும் நிதியுதவியினால், சித்தி விநாயகருக்குப் புதுப் பொலிவுடன் ஆலயம் அமையப் பெற்று, மகாகும்பாபிஷேகம் 07 - 09 - 97 அன்று நிறைவேறுகிறது. ஆலயம் விரைவில் நிறைவேறியமை, சித்திவிநாயகரின் இன்னருளே

இம் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தும் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள் அவர்களுக்கும், ஏனைய சிவாச்சாரியர்களுக்கும், எமது சிரந் தாழ்ந்த நன்றிகள்.

கும்பாபிஷேகமலர் வெளியிட ஆலோசனை வழங்கிய அதிபர் அவர்களுக்கும் ஏனைய உதவிகளை வழங்கிய ஆசிரியர்களுக்கும், மன்றத்தின் பணிகளில் எம்முடன் ஒத்துழைத்த மன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய மன்ற நிர்வாகி களுக்கும், மாணவர்களுக்கும், எமது நன்றிகள்.

இம் மலர் சிறப்புற, ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள், வழங்கிய மதிப்புக்குரியவர் களையும், ஆக்கங்களை வழங்கிய அறிஞர்கள், சைவ, அன்பர்கள், ஆசிரியப் பெருந் தகைகள் , மாணவர்கள் யாவரையும் நன்றியுடன் நோக்குகின்றோம்.

மலருக்கான நிதியுதவியை வழங்கிய விளம்பரதாரர்கள், அன்பர்கள், புகைப்படம் எடுத்து உதவிய திரு. தா. பாக்கியநாதன், அட்டைப்படம் தயாரித்து உதவிய போகன்வில்லா அச்சக உரிமையாளர் திரு. எஸ் தயாளன், அவரின் உதவியாளர்கள், குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட உதவிய கணேசா அச்சக உரிமையாளர், அவரின் உதவியாளர்கள், இந்நூலுக்காக பல வழிகளில் உதவிய, முன்னாள் "சாரதை"இதழாசிரியர் செல்வன். கு. பாலமுரளி அவர்களுக்கும், தட்டச்சு பதித்தலில் உதவிய செல்வி. அ. கலாநிதி அவர்களுக்கும் எமது மேலான நன்றிகள்.

எம்பெருமானின் இன்னருளும், இந்து மாணவ மன்றத்தினரின் ஊக்கமும் எதிர்வருங் காலத்தில்"சாரதை" யின் உயர் வளர்ச்சிக்கு உதவச் சித்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திகின்றேன்.

நன்றி

**செல்வன். சிவயோகநாதன் பிரேம்ஆனந்**

# நாம் காணும் விநாயகர் ஆலயம்

எமது கல்லூரியில் அழகுற அமைந்து அருள் பரப்பிக் கொண்டிருக்கும் சித்தி விநாயகருக்கு இந்து மாணவர் மன்றத்தின் இவ்வருட சாரதை வெளியீடு கும்பாபிஷேக சிறப்பு மலராக வெளிவரும் இச்சந்தர்ப்பத்தில் ஆலய அமைவுச் செயற்பாடுகளை ஆங்காங் கே தொட்டுக் காட்டுவது பணிக்குழுவின் கடனாகின்றது.

பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது போன்று புனிதர்கள் பாதம்பட்டு புனிதமடைந்த இக் கல்லூரியில் வித்தகர் விபுலானந்தரால் பூசிக்கப்பட்ட அருவுருவ விநாயகரை அவ்வப்போது இடம்பெயர்த்த நிலை, அதற்கான ஒரு நிரந்தர இடத்தை அமைத்துக் கொண்டு வழிபட வேண்டும் என்ற எண்ணத்தை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகிய அனைத்துத் தரப்பினரது உள்ளங்களையும் அழுத்தியது.

இச் சந்தர்ப்பத்தில் தற்போது அம்பலவாணர் அகமாக அமைந்துள்ள அலுவலகக் கட் டிடத்திற்கான வெளிப்புறம் அமைந்த மாடிப்படி அகற்றப்பட்டு, காளியப்பு மண்டப மாடியுடன் இணைக்கப்பட்டமையால் ஏற்பட்ட வெற்றிடம் உரிய நிலையத்தை விநாயகரே இனங்காட்டி யதாக அமைந்தது. இவ் இடமே 01- 02 - 95இல் ஆலயத்தின் நிலையமாக உறுதி செய்யப் பட்டது.

இதனைத் தொடர்ந்து, உள்ளத்தின் அழுத்தங்களுக்கு உண்மை வடிவம் கொடுக்க கல்லூரி நிர்வாகம் ஒரு பணிக்குழுவை அமைத்துச் செயற்படத் தொடங்கியது.

சாஸ்திர ரீதியான ஆலோசனைகளை பத்திரகாளியம்பாள் தேவஸ்தான பிரதம குரு வேதாகமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்களிடமும், கட்டிட அமைப்புக்கான ஆலோ சனையை குறளமுத அதிபர் திரு. கா. விநாயகசோதி அவர்களிடமும் கோரிய போது அவர்கள் பெருமனதுடன் முன்வந்து ஆலோசனைகளையும், அமைப்பையும், முன்வைத்தனர். இந்நிலையில் சிற்பபானு ஸ்கந்ததாஸ் ரவீந்திரராஜா ஆசாரியர், அவர்களுடன் தொடர்பு கொண்ட போது அவரும் பாடசாலையில் அமையும் இவ் ஆலயத்தை சிறப்புற அமைத்துத் தர முன்வந்தார். இம் மூன்று பகுதியினரதும் உற்சாகம் எம்மை நடவடிக்கையில் இறங்க ஊக்கமளித்தது.

குறளமுதம் திரு. கா. விநாயகசோதி அவர்களால் அமைப்புப் படம் தயாரிக்கப்பட்டு, திணைக்களத்தின அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவரால் ரூபா. 25000 இட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட நிதியுடன் குறிப்பிட்ட சில நலன்விரும்பிகள், பெற்றோர், பழைய மாணவரின் உதவியை பணிக்குழு நாடிச் சென்ற போது பொருளாகவும், பணமாகவும் கிடைத்த உதவிகள் எங்களை உற்சாகப்படுத்தி செயற்பாட்டைத் தூண்டியது.

26 - 01 - 1995 திகதியன்று சுவாமி ஆத்ம கனானந்தாஜி அவர்கள் கல்லூரிக்கு வருகை தந்து போது ஆசிர்வதிக்கப்பட்ட கல்லை முதல் அத்திவாரக் கல்லாகப் பயன் படுத்தி 03 - 02 - 1995 திகதி காந்தி ஐயா என எல்லோரும் அன்புடன் அழைக்கும் முன்னாள் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்களால் அடிக்கல் நடப்பட்டது.

அடிக்கல் நடப்பட்ட போது அந்த வருடத்திலேயே ஆலயத்தை அமைத்து முடித்து விட நாம் ஆவல் கொண்ட போதும், ஆணைமுகத்தானின் ஆசி அந்தளவுக்கு அவசரப்பட்ட தாக அமையாது, ஆலயத்தை அழகுறச் செய்ய வாய்ப்பளிப்பதாகவே அமைந்தது. இதனால் 1995 இன் பிற்பகுதியிலும், 1996ம் ஆண்டிலும் தேக்க நிலையில் இருந்த அமைப்பு வேலைகள் முன்னைய எண்ணங்களிலும் மேலான கலையம்சங்களைக் கொண்டதாக 1997ல் வேகம் பெற்று ஆரம்பமானது.

இருப்பினும் இவ் இடைக்காலத்தில் மண்டப அமைப்பு நிறைவு செய்யப்பட்டதுடன், வவுனியாவைச் சேர்ந்த ஸ்தபதி சு. சண்முகவடிவேல் அவர்களால் வடிக்கப்பட்ட விநாயகர் சிலையும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நிதிப்பாற்றாக்குறை ஒரு பிரச்சனையாக எழுந்த போது திருக்கோண மலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்க நிதியுதவியைத் தக்க தருணத்தில் அளித்தமையும், சிரமதானப் பணிகள் மூலம் தன்னலமற்ற பெறுமதி மிக்க சேவைகளை வழங்கியுள்ளமையும் அப்பிரச்சனை இலகுவாக நீங்க வழிவகுத்து, திருப்பணி வேலையும் முற்றுப்பெறும் நிலையை அடைந்தது.

05 - 09 - 1997ம் திகதியன்று சுவாமி ஆத்மகானானந்தாஜீ அவர்களுடன், இந்தியாவில் இருந்து வருகை தந்த சுவாமி தன்மயானந்தா அவர்களும், மட்டக்களப்பு இராம கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி அவர்களும் இணைந்து மூன்று புனிதர் களாலும், விநாயகரைப் பிரதிஷ்டை செய்யக் கிடைத்தமை பெறும் பேறான நிகழ்வாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து 06 - 09 - 1997ம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு நிகழ் வும், 07 - 09 - 1997ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேக நிகழ்வுமாக அணைத்துக் கிரியைகளையும் பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் அவர்கள் தானே பொறுப்பேற்று நிறைவாக நடத்தி வைத்தார்கள். அவரது மேலான பணியை பணிக்குழு நன்றியுடன் பாராட்டுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இவ் ஆலயத்தை அழகுற அமைப்பதில் நேரடியாக முழுக் கவனத் தையும், உழைப்பையும், நிதி ரீதியாக பெரும் பங்களிப்பையும் நல்கிய குறளமுதம் திரு.கா. விநாயகசோதி அவர்களுக்கும், சிற்ப வர்ண வேலைகளை சிறப்பாக நிறைவேற்றித் தந்த ஸ்தபதி ஸ்கந்ததாஸ் இரவிந்திரராஜா குழுவினருக்கும் சிறப்பான நன்றிகளை உரித்தாக்கிக் கொள்வதுடன், பல்வேறு வகையிலும் பங்களிப்பை வழங்கிய அணைத்துத் தரப்பினருக்கும் சித்தி விநாயகரின் அருளை வேண்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்செயற்பாடுகளின் போது பல்வேறு தரப்பினரையும் நெறிப்படுத்தி இயையுபடுத் தியமைக்காக, கல்லூரி அதிபருக்கு பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள் ளும் பணிக்குழு அவரது பணி சிறக்க விநாயகர் அருளையும் வேண்டுகின்றது.

முடிவாக இவ் ஆலயம் அலங்கார உற்சவங்களுக்குரிய ஆலயமாக அமையாது, எமது மாணவச் செல்வங்களின் உள்ளக் கமலங்களைத் தூய்மைப் படுத்தும் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கும் நாதத்தின் மையமாக செயற்பட்டு எதிர்கால சந்ததியினரின் நல் லொழுக்க வாழ்க்கைக்கு அத்திவாரமிட்டு ஆசியும் வழங்கும் சின்னமாகத் திகழ சித்தி விநாயகர் அணைவருக்கும் அருள்பாலிக்க வேண்டும். என வேண்டுகின்றோம்.

வணக்கம்

திருப்பணிக் குழு சார்பில்,
**மா. இராசரெத்தினம்.**

# தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
## திருக்கோணமலை.

## இந்து மாணவர் மன்றம் - 1997/1998.

### செயற்குழு

காப்பாளர்கள்: திரு. சி. தணடாயுதபாணி (அதிபர்)
திரு. அ. அருணகுமார் (பிரதிஅதிபர்)
திரு. மா. இராசரெத்தினம் (பிரதி அதிபர்)

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திரு. செ. பத்மசீலன் |
| தலைவர் | : | செல்வன். ந. அபிராம் |
| உபதலைவர் | : | செல்வன் ஏ. உதயன் |
| செயலாளர் | : | செல்வன் கௌ. செந்தில் குமரன் |
| உபசெயலாளர் | : | செல்வன் ஜெ. ஜெகசுதன் |
| பொருளாளர் | : | செல்வன் ஸ்ரீ. வாகீசன் |
| பத்திரிகையாசிரியா | : | செல்வன் சி. பிரேம் ஆனந் |
| உறுப்பினர்கள் | : | செல்வன் பா. பிரசாந்தன் |
| | | செல்வன் ச. லாவண்ஜன் |
| | | செல்வன் மு. மங்களராஜ் |
| | | செல்வன் பா. பிரணவன் |
| | | செல்வன் ஜெ. மதிக்கிருஷ்ணா |

ஆசிரியர் குழு :
திரு. நா. பாலசுந்தரம்
செல்வி. ந. நற்குணம்
திரு. இ. முருகதாஸ்
திரு. சா. பாஸ்கரன்
திருமதி. அ. கார்த்திகேயன்
செல்வி சு. ரவிச்சந்திரிகா
திருமதி. கி. உதயகுமார்
திரு. பி. சுந்தரராஜன்
திருமதி. ம. ரவிதாஸ்
செல்வி மீ. இராமச்சந்திரன்
செல்வி சு. விக்னேஸ்வரி
செல்வி த. குகனேஸ்வரி

# இந்து மாணவர் மன்ற வகுப்புப் பிரதிநிதிகள்

## ஆண்டு 6

ப. சகீலன்
வி. சுகீசன்
பொ. வினோத்
ச. கிஷாந்
ஜெ. மயூரிபிரஷாத்
து. சுகந்தலிங்கம்
தா. பிரணவசொரூபன்
சி. மயூரன்

## ஆண்டு 7

இ. பரிமேலழகன்
ஸ்ரீ. பிரசாத்
சி. சயிந்தன்
ஸ்ரீ. தர்ஷன்
நா. பகீரதன்
கி. கிருஷாந்
ந. வசீகரன்
இ. பிருத்திவிராஜ்

## ஆண்டு 8

இ. சதீஸ்குமார்
மு. முருகதாசன்
ச. கிருஷாந்தகுமார்
ப. பிரஷாந்தன்
ச. லாவண்யன்
அ. அருள்நேசன்
த. பவீந்தர்
பொ. ஜெகதாசன்

## ஆண்டு 09

வி. பிரஷாந்தன்
செ. கஜேந்திரன்
நி. ராஜ்சங்கர்
த. தங்கேஸ்குமார்
ஜெ. மதிக்கிருஷ்ணா
த. ஜெயகாந்
பா. பிரஷாந்தன்
ப. சிவசாந்தன்

## ஆண்டு 10

மு. நர்மதன்
ஞா. ஜெயரூபன்
தி. தரணிதரன்
சி. கஜராஜ்
ச. சஞ்சுதன்
அ. அச்சுதன்
கோ. பாலதரன்
ப. ருத்ரா
சி. பார்த்தீபன்
ஐ. உமாகரன்

## ஆண்டு 11

ப. நிஷாந்தன்
மு. மங்களராஜா
கே. ஆனந்தபிரஷாத்
சி. சிவஜாஜ்
பா. தேவகாந்தன்
பா. பிரணவன்
ஸ்ரீ. அகிலன்
சி. சஞ்ஜித்

## உயர்தரம் 98

| | | |
|---|---|---|
| மு. லவகுகதீசன் | - | உயிரியல் A |
| க. பிரதீபன் | - | உயிரியல் A |
| க. ஜெயகணேஷ் | - | உயிரியல் B |
| சொ. செந்தில்குமார் | - | உயிரியல் B |
| ஜீ. புவிராஜன் | - | கணிதம் |
| பு. ஜெயகாந்தன் | - | கணிதம் |
| பா. பாஸ்கரசிவம் | - | வர்த்தகம் A |
| ச. உதயன் | - | வர்த்தகம் A |
| வ. பிரஷாந் | - | வர்த்தகம் B |
| கு. பிரதீபன் | - | வர்த்தகம் B |
| மு. லிங்கேஸ்வரன் | - | கலை |
| சி. சிவகணேஷ் | - | கலை |

## உயர்தரம் 99

| | | |
|---|---|---|
| சி. பிரேம் ஆனந் | - | உயிரியல் |
| ந. அபிராம் | - | உயிரியல் |
| ஸ்ரீ. வாகீசன் | - | கணிதம் A |
| ஜெ. ஜெகசுதன் | - | கணிதம் A |
| ம. முரளீஸ்குமார் | - | கணிதம் B |
| பா. ஸ்ரீகாந் | - | கணிதம் B |
| ந. ஜெயகாந்தன் | - | வர்த்தகம் A |
| வீ. நவநீதன் | - | வர்த்தகம் A |
| பா. வசீகரன் | - | வர்த்தகம் B |
| ப. ராகுலன் | - | வர்த்தகம் B |
| ஆ. சுரேஷ்குமார் | - | கலை |
| வ. ஜெகதாஸ் | - | கலை |

# இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
## அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்
## திருப்பணிக்குழு

தலைவர்

திரு. சி. தண்டாயுதபாணி

உபதலைவர்கள்

திரு. அ. அருணகுமார்
திரு. மா. இராசரெத்தினம்

செயலாளர்

திரு. செ. பத்மசீலன்

பொருளாளர்

திரு. இ. முருகதாஸ்
திரு. கா. ஜீவரெத்தினம்

செயற்குழு


திரு. சா. பாஸ்கரன்
திரு. ப. சுந்தரராஜன்
திரு. சீ. மதியழகன்
திரு. ந. பாலசுந்தரம்

மழைத்தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடி வந்துவிடுகிறது. அதுபோல் இறையருள் தற்பெருமை யும் கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கிநிற்பதில்லை. பணிவுள்ள வர்களின் உள்ளத்தில்தான் இறையருள் தங்கி நிற்கும்.


- ராமகிருஷ்ண பரமஹம்ஸர் -



அதிபர், பிரதி அதிபருடன் இந்து மாணவ மன்ற ஆசிரியர்களும் செயற்குழுவும்



அதிபர், பொறுப்பாசிரியருடன் பிரதிநிதிகள் - 1997/98



சுவாமி விபுலாநந்தர் அவர்களால் வழிபடப்பட்ட தெய்வங்கள்



கொழும்பு இராமகிருஷ்ண சங்கத் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா, மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க கிளைத் தலைவர் சுவாமி ஜீவானந்தா அவர்கள் முன்னைய வழி பாட்டிடத்தில் வழிபடுதல்.




நல்லை திருஞானசம்பந்தர் குருமகா சந்நிதான குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமேஸ்வர சுந்தரலிங்க சுவாமிகள் வழி பாட்டிடத்தில் வழிபடுதல்.




முன்னைய வழிபாட்டு இடத்தில் இடம் பெற்ற பூசையினை முன்னாள் ஆசிரியரும், பூசகருமான சிவஸ்ரீ கனசபாபதி சர்மா ஐயா அவர்கள் நடத்துவதையும் அருகே ஆசிரியர்கள் மாணவர்கள்வழிபாடு ஆற்றுவதையும்காணலாம்.

ஆலய சிரமதானப் பணியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குகொள்கின்றனர்






1995 - 02 - 03ம் திகதி அன்று கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும் சமூகப் பெரியாருமான காந்திஐயா அவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது



புதிய மூலவிக்கிரகம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வருவதற்கு முன்னர் இடம் பெற்ற பூசை நிகழ்ச்சி

05 - 09 - 1997 அன்று புதிய மூலவிக்கிரகம் இராம கிருஷ்ண சங்க சுவாமிகளஷ் அதிபர், ஆசிரியர்கள், மாண வர்கள், பெற்றோர்கள், ஆகி யோரால் ஊர்வலமாக எடுத்து வரப்படும் காட்சி.





இந்தியாவைச் சேர்ந்த சுவாமி தன்மயானந்தாஜீ கொழும்பு இராகிருஷ்ண சங்க தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா மட்டக்களப்பு இராம கிருஷ்ண சங்க கிளையைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானநந்தா ஆகியோர்மூலவிக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதையும் அருகே பிரதிஷ்டா குரு வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களையும் காணலாம்.

# விநாயகப் பெருமானும் கல்லூரியும்

**திருமதி. இராசநாயகி கந்தையா**
முன்னாள் ஆசிரியை
தி/இ. கி. ச. இந்துக்கல்லூரி

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றுந் தா"

சங்கத் தமிழ் மூன்றையும் ஔவையார் விநாயகப் பெருமானிடம் வேண்டினார். சுவாமி விபுலாநந்த அடிகளார் முத்தமிழும் பெற்று முத்தமிழ் வித்தகரானார்.

இராமகிருஷ்ணசங்கம் அடிகளாரை கல்விப்பணிக்கு இக்கல்லூரிக்கு நியமித்ததன் பின்னர் கல்விச்சாலையில் விநாயகப் பெருமானின் அருவுருவத் திருமேனியை ஸ்தாபிதம் செய்து அறிவும் அருளும் கூடிய கலாசாலையாக மிளிரச் செய்தார்.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

பாரதியாரைப் பாரோர் புகழ்ந்தேத்த வைத்த அடிகளார் ஆலயம் அமைத்து ஏழைக்கு எழுத்தறிவித்தார்.

அடிகளாரின் திருவுருவச்சிலையும், நிறுவப்பட்டுள்ளது. விநாயகப் பெருமானை அன்று அருவுருவத் திருமேனியில் வழிபட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் இன்று உருவத் திருமேனியில் வழிபாடாற்றுகின்றார்கள்.

செயற்கரிய செய்வது பெரியோர் செயல், விபுலாநந்த அடிகளார் வேண்டியது யாது? "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" தூய துறவி வேண்டினார். விண்ணுலகத்திலிருந்து கொண்டு மண்ணுலகத்தை நோக்கினார், போலும். அடிகளாரின் இருள் நோக்கினால் விநாயகப் பெருமான் சோதி வடிவாக மனித உடல் தாங்கி திரு. விநாயகசோதியாகத் தோன்ற நேர்ந்தது எனலாம். உத்தமனார் வேண்டும் உள்ளக்கமலம் தத்துவரூபமாக அமைத்த குறளமுதம் திரு. விநாயகசோதி ஐயாவை நாமனைவரும் வணங்குகின்றோம். வாழ்த்துகின்றோம். அவர் பணி ஒன்றல்ல, இரண்டல்ல ஏழைச் சிறார்களையும் ஏழைமக்களையும் தன் பணிக்கு உரித்துடையவராக்குவதே!

தாமரைத் தடாகத்தில் தாமரைப்பூவில் சித்திவிநாயகராலயம் அமைத்தாரே! திருக் கோணமலை இராமக்கிருஷ்ண சங்க கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சைவ அடியார் அனைவரும் செய்த பெரும் பேறாகும்.

திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்கத்தரால் கையேற்கப்பட்ட இந்துக்கல்லூரிக் குக் கடமையின் பொருட்டு எழுந்தருளிய அடிகளார் ஆனைமுகப் பெருமானை அருவுருவத் திருமேனியுடன் எழுந்தருளச் செய்து தன்னைத் தெய்வப் பணிக்கு ஆளாக்கிக் கொண்டார்.

ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் காளியப்பு மண்டபத்தில் நடந்து கொண்டிருக்கும் போது அவ் வித்தியாலய அதிபராகிய பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் ஐயா அவர்கள் விளக் கேற்றித் தீபம் காட்டி மாணவர் சகிதம் வழிபாடாற்றிய திருக்காட்சி இன்றும் நமது கண்முன் நிலைத்து நிற்கின்றது.

ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் கல்லூரியின் பின்புறத்துக்கு மாற்றப்பட்டதும் அது நமது வழிபாட்டிற்குரியதாகியது. திரு. கணபதிப்பிள்ளை ஆசிரியர், திரு. இராசேந்திரம் ஆசிரியர்களின் உதவியோடு தினமும் விளக்கேற்றிக் கர்ப்பூரம் காட்டித் தேவாரமும், புராணமும் பாடி வழிபாடாற்றக் கிடைத்தது. அக்கால மாணவர்களாகிய செல்வன். சிவபாதசுந்தரம், செல்வன். சாம்பசிவம், செல்வன். இரமணீதரன், செல்வன். கேசவன், செல்வன். தவராஜா அவர்கள் இத் தின வழிபாட்டை நடத்த நமக்கு அருளிய அருட்செயலை மறக்கலாமா?

இக் காலல்லூரியில் கடமையாற்றிய திரு. குழந்தைவேல் ஆசிரியர், திரு. கதிரவேல் ஆசிரியர், திரு. சரவணமுத்துப் பண்டிதர் அவர்களும் கழகப் புலவர் திரு. சிவசேகரனாரும், அவரால் ஊக்குவிக்கப்பட்ட மாணவர்களும் விபுலாநந்த அடிகள் ஸ்தாபித்த விநாயகரை வழிபாடாற்றியதைச் சொல்லக் கேட்க மெய் சிலிர்க்கும்.

அடிகளார் தமது விடுதியில் இரவில் சிலப்பதிகாரம் தொல்காப்பிய வகுப்புகள் நடத்த முன் கல்லூரி விநாயகருக்கு விளக்கேற்றி வழிபாடு ஆற்றி வகுப்புகளை ஆரம்பிக்கும் தெய்வீக நிலையை கழகப் புலவர் அடிக்கடி கூறுவார். "இது வெறுங் கல் இல்லை. அறிவு, ஆனந்தம், அருள் யாவும் ஒன்றிணைந்த ஆனைமுகப் பெருமான். இத் தும்பிக்கையான் தான் நமது நம்பிக்கை" என்று அடிகளார் கூறும் அருள் மொழியை நினைவு படுத்துவார்கள்.

செவி வாயிலாக நாம் அறிந்த உண்மை. கல்லூரிக்கு அண்மையில் வசிக்கும் திரு. காளியப்பு ஐயா இடையிடையே நமக்குக் கூறுவார். கல்லூரி இன்று அமைந்திருக்கும் நிலப் பரப்பில் தோட்டச் செய்கை நடத்தியவர்கள் வழிபாடாற்றித் தமது தொழிலைத் தொடங்க விரும்பியதாகவும், ஆற்றங்கரையிலும், மரத்தடியிலும் எளிதாக வழிபடக் கூடிய விநாயகப் பெருமானை அமைத்து வழிபட்டனரெனவும், திருவேறிய கல்லாலாகிய அருவுருவத் திரு மேனியை வைத்து வழிபட்டார்களெனவும் கூறியிருந்தார்.

ஒரு நாட்டின் இரு கண்களாக அமைந்தவை ஆன்ம வழிபாட்டிற்குரிய ஆலயமும் கல்விச் சாலையாக அமைந்துள்ள வித்தியாலயமுமாகும். நாட்டின் ஆன்மீகத்தை வளர்க்கும் ஆலயம் சாலச் சிறந்தது. அதே போன்று அறிவுக் கண்ணைத் திறக்கும் கற்பித்தல் நிகழும் கட்டிடமே வித்தியாலயமும்.

விபுலானந்த அடிகளார் ஒரு தீர்க்கதரிசி; மெய்ஞ்ஞானி. வித்தியாலயத்தில் விநாய கரை அமைத்த ஞானதிருஷ்டி, இன்று திருக்கோணமலை இளஞ்சமுதாயத்தினருக்கு ஒரு வரப்பிரசாதமெனலாம்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாழ் தொழாரெனின்"

என்ற வள்ளுவ வாய்மொழியின் உண்மையை மாணவர்கள் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டுமென்றே விநாயகப் பெருமானின் அருவுருவத் திருமேனியை எழுந்தருளச் செய்தார், நமது முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார்.

இன்றைய கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உள்ளத்தில் உருவெடுத்த விநாயக உருவத் திருமேனி ஸ்தாபிக்கப்பட்டது. ஐங்கரனை - ஆனைமுகத்தனை எழுந்தருளச் செய்வதற்கு ஆலயம் வேண்டுமே! குறளமுதம் திரு. விநாயகசோதி ஐயா, தாமரைத் தடாகத் தில் தாமரைப்பூவில் விநாயகர் ஆலயத்தை உருவாக்க வேண்டுமென்று, தும்பிக்கையான் எண்ணமும் அடிகள் வேண்டிய உள்ளக் கமலமம் ஒருங்கிணைந்து விட்டன.

கல்விலும், முள்ளிலும் கொடிய விலங்குகளிலும் பறவைகளிலும் இறைவனைக் கண்ட ஆதியும் அந்தமுமில்லா நமது சைவம் எந் நாட்டவர்க்கும் உரித்தான இறைவனைக் கண்டு வழிபாட்டுக் குரியதாக்குகின்றது.

"திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுமந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்"

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும்"

"வெள்ளைக் கொம்பன் விநாயகரைத் தொழத்
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே"

"அப்ப மும்பழமும் அமுது செய்தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே"

❖❖❖

# சித்தி விநாயகா

சோமதேவா ராகுலன்
ஆண்டு 11சீ

வேழ முகனே! அருமை தலைவனே!
வேதனைகளைத் தீர்த்திடும் அரும்பொருளே!
காணக் கண்கோடி வேண்டுமே!
உன் தோற்றத்தை இறையே!

தித்திக்கும் கோணேஸ்வரா இந்து நீ!
சிறப்பிடம் ஒன்றினைப் பெற்றனை
பள்ளியில் உனை அமர்த்தி உயர்ந்தோம்!
பலவாறு புகழ்மாலை சூட்டுகின்றோம்.

கலைகளைக் காக்க வேண்டும் இறைவா!
கண்ணை இமை காப்பது போல் எமையும்
கணபதியே உனக்கு நாம் என்றும்
கண்ணியமாய்ச் சேவை செய்திடுவோம்.

குளத்திலொரு இதய தாமரையாம்
குவலய இதழினுள் ஓர் ஆலயமாம்
அழகிய மண்டபமாம் அவ் அரங்கினிலே
ஆனந்தக் கூத்து நீ ஆடிடுவாய்!

விவேகத்துடன் விபுலாநந்தன் பணி புரிந்த
விந்தையாம் பள்ளியாம் எம் பள்ளி
பிள்ளைகள் வேதனை போக்கிடும்
பிள்ளையே எம்முடன் அமர்ந்தனை!

திக்கெங்கும் எம்பள்ளி உயர வேண்டும்!
தினந்தினம் கல்லூரி வளர வேண்டும்!
மண்ணிலே பண்புகள் உறைவிடம்
மாட்சிமை பலநூறு பெறுவோமே!

சிவனின் மைந்தனாம் உனக்கு ஓர்
சித்தி விநாயகர் ஆலயம் இங்கு
குமரனின் தமையனே உன்னையே
கோடிமுறை கரம் கூப்பிடுவோம்.

கடவுள் வாழும் கோயிலிலே
கற்பூர தீபம் நினக்கு இறையே
எம் சிந்தைக்கு கல்வியின் ஒளி கொடுப்பாய்
என்றென்றும் உயர்ந்திட வழிசமைப்பாய்.

# கும்பாபிஷேகம் ஒரு விளக்கம்

பிரதம குரு
சிவன்கோவில்
கோவில்குளம், வவுனியா.

**சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்**

ஆதினகர்த்தா,
சிவன்கோவில்
புங்குடுதீவு.

கும்பாபிஷேகம் என்பது நான்கு வகையாகின்றன. ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம் என்பன அவை. புதிதாக ஆலயம் அமைத்துப் புதிய விக்கிரகம் வைத்துப் பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் என்றும், சிதைந்த ஆலயத்தைத் திரும்பவும் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தம் என்றும், ஸ்தூபியைப் பழுது பார்த்தும் அதில் இருக்கின்ற விக்கிரகங்களைத் திருத்தியும் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தம் என்றும் ஆலத்தினுள் தற்செயலாக மரணம் ஏற்படாலும், திருடர்கள் புகுந்து அநர்த்தங்கள் ஏற்பட்டாலும் அதற்காக உடனடியாகச் செய்வது அந்தரீதம் எனவும் கூறப்படுகின்றன.

அந்தரீதக் கும்பாபிஷேகத்திற்கு நாள் நட்சத்திரம், முகூர்த்தம் என்பன · பார்க்கத் தேவையில்லை. இதைப் பிராயச் சித்தம் கும்பாபிஷேகம் என்றும் அழைப்பர். இந்த வகையில் இப்போது நடைபெறுகின்ற இந்த விநாயகர் கும்பாபிஷேகம் ஆவர்த்தம் என்றே சொல்லலாம்.

கும்பத்திலே எம் பெருமானை எழுந்தருளச் செய்து, யாகத்திலே பிரதான வேதிகையின் நடுவே இருத்தி வலது புறத்திலே சக்தி குடும்பமும், எட்டுதிக்குகளில் அஷ்ட வித்யேஸ்வரரையும் வைத்து பூஜித்து ஓம் குண்டம் அமைத்து அதிலே சிவாக்கினியை உண்டாக்கி அந்த அக்கினியிலே எம் பெருமானை ஆவாகித்து மூல மந்திரத்தினாலும், காயத்திரி மந்திரத்தினாலும் சமித்து. நவதானியம், நெற்போரி அன்னம், நெய் என்பவற்றால் ஓமம் செய்து வழிபடுதல் யாகபூஜை எனப்படும்.

குடம் உடலாகவும் அதிலே சுற்றப்படுகின்ற நூல் நாடிகளாகவும், மாவிலை சடையாகவும், தேங்காய் தலையாகவும், கூர்ச்சம் கேசமாகவும், சுத்தப்படுகின்ற ஆடை தோலாகவும் நீர் இரத்தமாகவும் உள்ளே போடப்படடுகின்ற நவரெத்தினம், பவுண் என்பன பிரானாகவும் மந்திரங்கள் சக்தியாகவும் அமையும் கும்பாபிஷேகத்தின் முதனாள் மந்திரங்களோடு நிகழும் கடஸ்தாபனம் "இவற்றைத் தெளிவாகக் காட்டும்.

யாகத்திலே வைத்துப் பூஜித்த கும்பத்திலிருந்து கருவறையிலே அமைந்திருக்கின்ற எம் பெருமான் திருவுருவச் சிலைக்கும் நூல் போடப்பட்டு அஷ்டமூர்த்தி, மூர்த்திஸ்லரர் மூர்த்தீஸ்வரி ஆகியோரை அக்கினியிலே பூஜித்து ஓமம் செய்து எம்பெருமானது சிலையை, இடுப்பின் கீழுள்ள பகுதியை பிரம்ம பாகமாகவும், கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பகுதியை விஷ்ணு பாகமாகவும், கழுத்துக்கு மேலுள்ள பகுதியை ருத்திர பாகமாகவும், மூன்று பாகங்களாகப் பகுத்து யாகாக்கினியிலே ஆதி செய்து நூலின் மூலமாகக் கருறையிலே இருக்கின்ற பெருமானுக்கு மூன்று முறை சென்று ஆகுதி மூலமாக குடும்பத்திலும் அக்கினியிலும் ஆவாகித்த மூாத்தியைச் சேர்த்தல் "ஸ்பர்சாகுதி" என்று சொல்லப்படும்.

இவை முடிந்ததும் யாக கும்பத்திலே, அக்கினியிலே ஆவாகனம் செய்த மூர்த்தியை சேர்த்துப் பஷ்டிபாஞ்சலி செய்து, கும்பத்திற்குத் தீபாராதனை செய்து வேத ஸ்தோத்திர தேவாரப் பாராயணம் செய்து, சர்வ மங்கள வாத்திய சகிதம், சகல விதமான ராஜ உபசாங்களோடு வீதி வலமாக வந்து பெருமானுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும்.

இக் கும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே விநாயகர் திருவருள் எய்தப் பிரார்த்திப்பதோடு எனது மனமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்..

# ஆலய பிரதட்சண தத்துவம்

மு. சுந்தரலிங்க தேசிகர்
"சுத்த கணித ஜோதிடர்"
"சைவ சித்தாந்த சேகரம்"

திருக்கோயிலில் இராஜ போபுரத்தைக் க டந்து உள்ளே சென்றால் பிரகாரங்கள் உள்ளன. பொதுவாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பிரகார மதிற் சுவர்கள் மறைத்துக் கொண்டுள்ளன. எல்லாத் திசைகளிலிருந்தும் இறைவனைக் காண முடிவதில்லை. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே சென்று கண்டு வழிபட முடிகின்றது. இறைவனை மறைத்துக் கொண்டிருக்கும் பிரகார மதிற் சுவர்கள் மனிதன் தன்னிடத்தில் உள்ள ஆன்மாவை தான்! ஆன்மா என்ற உண்மையை எளிதில் அறிய முடியாத வகையில் அமைந்துள்ள உடம்பை உணர்த்துகின்றன. மதிற் சுவர்கள் இல்லையென்றால் இறைவனை எங்கிருந்தும் எப்பொழுதும் கண்டு வழிபடலாம். உடம்பு இல்லையென்றால் மனிதன் தான் "உடம்பல்ல, ஆன்மாதான்" என்ற உண்மையை எப்பொழுதும் சிந்தையில் கொண்டிருப்பான்! பிரகாரத்தின் மதிற்சுவர்களின் அமைப்பு, மறைப்பு, ஆகியவை உடம்பின் மறைப்பு ஆகியவற்றை உணர்த்துகின்றன. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே இறைவனைக் காண முடிகின்றது. இறை வழிபாட்டின் வாயிலாகவே "தான் ஆன்மா" என்பதை மனிதன் அறிய முடிகின்றது. பிரகாரத்து மதிற் சுவர்களின் மறைப்பு இறைவனுடைய ஐந்தொழில்கள் முறையில் மறைத்தல் என்னும் தொழில் முறையில் உள்ளது. இந்த மறைப்பால் உணர்த்தப்படுகின்ற உடம்பு ஆன்மாவை மறைப்பதால் தான் சான்றோர்கள் தமது உடல் பற்றி இறைவனிடம் முறையிட்டுள்ளனர்.

திருக்கோயில்களுள் ஐந்து பிரகாரங்கள் உள்ள கோயில்களும் மூன்று பிரகாரங்கள் உள்ள கோயில்களும் ஒரு பிரகாரம் உள்ள கோயில்களும் உண்டு.

திருக்கோயிலில் உள்ள ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம், என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன. திருக்கோயிலில் உள்ள மூன்று பிரகாரங்கள் ஐந்து • கோசங்களாலாவன தூலம், சூட்சமம், காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கின்றன.

கோயிலில் வழிபடுவோர் மூன்று அல்லது ஐந்து முறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டும் என்பது மூவகை உடம்புகளையும், ஐந்து வித கோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும். இந்த ஐந்து பிரகாரங்களையும் கடந்தால் இறைவனது சமீப்ய நிலையை அடையலாம் என்னும் உண்மையை உணர்தல் வேண்டும். திருக்கோயிலில் உள்ள ஒரே பிரகாரம் பொதுவான உடம்பைக் குறிப்பதாகும்.

பிரகாரத்தில் வலமாக வரும்போது கருவறையைச் சுற்றிலும் அர்த்த மண்டபம், மகாமண்டபம், அபிடேக மண்டபம் அலங்கார மண்டபம், சபாமண்டபம், ஆகியவை உள்ளன. கருவறை உடம்பில் உள்ள மூலாதாரத்தைக் குறிக்கும் பிறமண்டபங்கள் எல்லாம் சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை என்பவற்றைக் குறிக்கும்.

## வலம் வருவதில் உள்ள உண்மை

திருக்கோயிலில் உள்ள பிரகாரங்களில் வலம் வருவதற்கென்று நியதிகளும் வலம் வருவதால் உண்டாகும் பலன்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| **காலையில் வலம் வருதல்** | - | **நோய் தீர்க்கும்** |
| **பகலில் வலம் வருதல்** | - | **விருப்பம் அளிக்கும் (இஷ்டசித்தி)** |
| **மாலையில் வலம் வருதல்** | - | **எல்லாப் பாவத்தையும் அகற்றும்** |
| **அர்த்த சாமத்தில் வலம் வருதல்** | - | **மோட்ச சித்தியும் உண்டாகும்** |

| | | |
|---|---|---|
| **விநாயகருக்கு** | - | **ஒரு முறை வலம் வருதலும்** |
| **சூரியனுக்கு** | - | **இரண்டு முறை வலம் வருதலும்** |
| **சிவனுக்கு** | - | **மூன்று முறை வலம் வருதலும்** |
| **அம்பாளுக்கு** | - | **நான்கு முறை வலம் வருதலும்** |

இன்றியமையாதவை என்று கூறுவாரும் உளர். பிரகாரத்தில் வலம் வரும்போது பெண்கள் எண்ணெய்க் குடத்தை எடுத்துச் செல்வது போல் அடிமேல் அடிவைத்து பிறருடன் பேசாமல் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலிலுள்ள விநாயகர், முருகன், அம்பாள் முதலிய திருச்சந்நிதிகளைத் தனியாக வலம் வருதல் கூடாது. சேர்த்தே பொதுவாக வலம் வருதல் வேண்டும். ஏனெனில் மூல மூர்த்தியின் சாநித்தியம் குறைவு படும்.

கொடி மரத்துக்கு வெளியிலுள்ள இடங்களுக்கு இந்த நியதி இல்லை.

1. அடி தண்ட வலம் வருதல் - ஓர் அடிக்கு ஒரு முறை வணக்கம் செய்தவாறு வலம் வருதல் .

2. அங்கம் வலம் வருதல் - உடல் முழுவதும் நிலத்திற் படும்படி படுத்துக் கொண்டே உருண்டு வலம் வருதல் .

தெய்வீகம் வாய்ந்த ரிஷிகள் ஈசுவரனுடைய நெருங்கிய உரவினரைப் போன்றவர்கள். அவர்கள் அவனுடைய நண்பர்கள் போலவும், ஸகாக்கள் போலவும், உறவினர்கள் போலவும் இருக்கின்றனர். சாதாரண மனிதர்கள் எல்லாரும் எட்டிய உறவினர் போன்றவர்கள். அவர்கள் கேவலம் ஈசுவர சிருஷ்டிகள் மாத்திரமே.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர் –

# புண்ணிய பூமியில் இன்னுமொரு ஆலயம்

**குறளமுதம் கா. விநாயக சோதி**
நிர்மாண சிற்பி

உயர்ந்த அற நிலையத்தில் ஆலயம் அமைவது, ஓர் சாலச் சிறந்த கருமமாகும்.

ஒருநாள் இந்துக்கல்லூரி அதிபர் என்னை அழைத்து "மூன்று கருங்கற்களாலான, அருவுருவமான இறையுருவங்களைக் காட்டி, இவ் வடிவங்கள் விபுலாநந்த அடிகளார் காலத்திலிருந்து வழிபாடு செய்யப்பட்டு வந்ததாகவும், இப்புதிய மாடிக்கட்டடம் இவ்விடத்தில் அமைந்ததனால் அவ்விடத்திலிருந்து அவைகளை அகற்றி, எனது காரியாலயத்துக்கு முன்னால் திறந்த வெளியில் வைத்து வணங்கி வருகின்றோம். இவ் வழிபாட்டு முறையைப் பத்திரப்படுத்தி வைக்க ஏதாவதொரு வழிவகை செய்ய வேண்டும்" என வேண்டிக் கொண்டார்.

இது ஒரு வாய்ப்பான யோசனையாகவே எனக்குத் தென்பட்டது. இன்றைய கால கட்டத்தில் இளஞ்சந்ததியினரில் தொண்ணூறு வீதமானவர்கள் கோயிலுக்குச் செல்லும் வழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். இறைநம்பிக்கை குறைந்து விட்டது. ஆன்மபலம் அற்று விட்டது. வருங்கால சந்ததியினரிடையே இச்செயல், பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் மனிதனை அறிவூட்டிப் பூரண மனிதனாக்கும், இவ் அறநிலையங்களான பள்ளிகளிலேயே அறிவுடன் சேர்த்து, இறைநம்பிக்கையும் ஊட்டப்படுவது ஒன்றே, மாணவர்களிடையே ஏற்படும் இவ் இடைவெளியை நிரப்ப சிறந்த ஒரே மார்க்கமாகத் திகழுமென்றே கருதுகின்றேன்.

இதன் காரணத்தினால் எதுவித மாற்றுக் காரணங்களும் கூறாது, ஆலயம் ஒன்றை அமைப்போம்; அதற்கான வரைபடங்களையும், திட்டத்தையும் உடனேயே தயாரித்துத் தருவதாக கூறினேன். அதிபரும் மிக மகிழ்ச்சியுடன் ஒப்புதல் தந்தார்.

காலந்தாழ்த்தாது ஆழமாகச் சிந்தித்து, "ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி சித்தி விநாயகர் ஆலயம்" என்று எழுதி வைத்துக் கொண்டு வரைபடத்தை வரையத் தொடங்கினேன். தவறு செய்தவன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கையில், அக்கணமே அவனை மன்னித்து அருள் பாலிப்பதில், விக்னவிநாயகனைத் தவிர வேறு எத் தெய்வம் இருக்க முடியும்.

"தவறு செய்தவன் திருந்த வேண்டும்
தப்புச் செய்தவன் வருந்த வேண்டும்"

இதுவே வாழ்வின் நியதி இளம்பள்ளிச் சிறார்கள் தவறு செய்வது தவிர்க்க முடியாதது. எனவே, மாணவர்களுக்கு உகந்த தெய்வமாக விநாயகனே அமர்வது சிறந்ததாகத் தென்பட்டது. அத்துடன் மாணவர்களுடைய நோக்கு அறிவைப் பெறுவதும், சித்தியடைவதும் ஆகையினால், மாணவர்களுடைய விக்கினங்களை விலக்கிச் சித்தியடைய சித்திவிநாயக ராலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

சரி இனி கட்டட அமைப்பைப் பார்ப்போம். ஒவ்வொரு மனிதனும் சிறுக, சிறுக இறை வனைத் தன், தன் இதயதத்தில் குடியிருத்த முயற்சிக்க வேண்டும். இதயத்தை எவ்வளவுக்கு எவ்வளவு தூய்மையாக்குகின்றோமோ, அவ்வளவிற்கு அவ்வளவு, இறைவன் எம் இதயத் திலேயே குடியேறி விடுகின்றான். இதை இப் பாடசாலையை அமைத்த பெருமகனார் விபுலானந்த அடிகளார் இலகுவாக எமக்குத் தெளிய வைக்கின்றார்.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ.
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

இதிலிருந்து புரிவது இறைவன் எம்மிடம் வேண்டுவதெல்லாம் .இதயக்கமலத்தை மட்டுமே

அதன் காரணத்தால்தான், முப்பத்தாறு அடி சுற்றளவு கொண்ட முற்றும் முழுதாக கொங்கிறீற்றினால் வார்த்தெடுக்கப்பட்ட கமலத்தில் வீற்றிருக்கச் செய்தோம்.

அதனைத் தொடர்ந்து, தாமரையைச் சுற்றி, நீரை ஓடவைக்க விரும்பினோம் ஏனெனில் இறைவனுக்கு அடுத்ததாக நீரே இவ்வுலகில் உதித்த அத்தனை ஜீவராசிகளுக் கும் அமிர்தம் போன்றது என்பதை வள்ளுவம் காட்டி நிற்கின்றது. அத்துடன், அந்நீரே, குற்றங்களையும், அசுத்தங்களையும் கழையும் மூலமாகவும் பயன்படுகின்றது.

உயர்ந்த அறநெறிகளான,

"இன்னருங் கனி சோலைகள் செய்தல் - மரங்களை நாட்டுதல்
இனிய நீர் தண் சுனைகள் இயற்றல் - நீர்நிலைகளை ஏற்படுத்தல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் - ஏழைகளின் பசியைப் போக்குதல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல் - ஆன்மபலத்தை வளர்த்தல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பேர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்" - கல்வியறிவை ஊட்டுதல்

எம் குற்றங்கள் எதுவும் இறைவனைச் சேர்ந்து விடாது மூலஸ்தானத்தைச் சுற்றி இனிய நீர்த்தண்சுனை அமைக்கப்பட்டது. அத்தடாகமும் முற்றும் முழுவதுமாக வலுவூட்டப் பட்ட கொங்கிறீற்றினாலேயே இரு யானைகள் தூக்கி நிற்க பாலம் அமைக்கப்பட்டது.

மண்டபம் பாடசாலைக்குரிய அளவில் அம்சமாக வடிவமைக்கப்பட்டது. அதன் அத்தி வாரங்களும், தூண்களும் தாங்கிகளும், கூரையும் நீண்ட உறுதிப்பாட்டை நோக்கி வலு வூட்டப்பட்ட கொங்கிறீற்றினால் நிறுவப்பட்டது. கூரையின் தோற்றமும் மாணவர்களுடைய சிந்தனையைத் தூண்டத்தக்க வகையில் உருவாக்கப்பட்டது.

தரை கொங்கிறீற்றினால் நிரப்பப்பட்டு; அதன் மேல் பளிங்கு கற்களினால் பார்ப்பவர் கள் கவர்ந்திழுக்கக் கூடியவாறு கலையுணர்வும் சித்திர வேலைப்பாடுகளுடனும் செய்யப் பட்டது. விஞ்ஞானம் வளர்ச்சியடையும் அதே வேளையில், ஒவ்வொரு மாணவனது உள்ளத் திலும் கலையுணர்வும், ஆன்மபலமும் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அவன் இப் பிறப்பின் பயனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

இவ் வேலைகளுக்கு மகிழ்ச்சியுடனும், பூரண ஒத்துழைப்புடனும் மெருகூட்டிய சிற்பக் கலைஞன் திரு. ஸ்கந்ததாஸ் ரவீந்திரராஜா அவர்களையும், அவர்களது குழுவினரையும் நன்றியுடன் நோக்குகின்றோம். அத்துடன் இவ்வேலைகளை ஒருங்கமைப்பு செய்ததில் உப அதிபர் மா. இராஜரெத்திரனம் அவர்களின் பங்களிப்பு என்றும் மறத்தற்கரியது.

மொத்தத்தில் கூறுவதானால், ஓர் அடக்கமான, அம்சமான உறுதிமிக்க ஆலயமொன்று கட்டப்பட்டு விட்டது. இச் செயலையிட்டு இப் புண்ணிய பூமி வாழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கின்றோம். இச்சாதனையைப் புரிந்த இக்கல்லூரியின் அதிபர் சி. தண்டாயுதபாணி அவர்களும், உப அதிபர்களும், மற்றும் ஆசிரிய மணிகளும் மாணவச் சிறார்களும் என்றென்றும் நன்றிநவிலப்பட வேண்டியவர்கள்.

இச் சாதனையை முன்மாதியாகக் கொண்டு, மற்றையோரும் கல்வியறிவை ஊட்டுவதுடன் இறைநம்பிக்கையையும் ஊட்டி, மாணவர்களை ஆன்மபலமும் கொண்டவர்களாக ஆக்கித்தர வேண்டுமென்று சித்திவிநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

இறுதியில் ஒரு புதுமை! ஆலயத்தை அமைக்கும் பொழுது மேற்கூறப்பட்ட காரணங் களை முன்வைத்தே அமைத்தோம். ஆனால் கும்பாபிஷேகத்தன்று ஓர் பெரியவர் "யார் இந்த அற்புதமான செயலைச் செய்தது, எங்கும் விநாயகரை தாமரையில் அமர்த்தியதை நான் காணவில்லை.. விநாயகருடைய தோற்றம் ஐம்பத்திரண்டு வடிவங்களாகும். அதில் மூலத்தோற்றம் தாமரையில் வீற்றிருப்பதே" என்று கூறியமை பெரு வியப்பைத் தந்தது. இதிலிருந்து நாம் அறியக்கூடியதொன்று தூய உள்ளத்துடன் எக் காரியத்தைச் செய்தாலும், அது பெரு வெற்றியைத் தருவதுடன், இறை அருளையும் பெற்றுவிடுகின்றது.



"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

★

**இறைவன் திருநாமத்தை கேட்ட மாத்திரத்தில் எவனுக்கு மயிர்க்கூச்செறிந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுமோ அதுதான் அவனுக்கு கடைசிப் பிறவி.**

★

# திருக்கோணமலை மாவட்டத்தில் விநாயகர் வழிபாடு

ஞானசிரோன்மனி பண்டிதர்
**இ. வடிவேல்**

இந்து மதம் சனாதனதர்மக் கோட்பாட்டை உள்ளடக்கியது. இயற்கையை வழிபடத் தொடங்கிய மக்களின் உள்ளத்தில் அரும்பி, ஞானிகள், யோகிகள், முனிவர்களின் உள்ளத்தில் மலர்ந்து, உலகெங்கும் வியாபகமாகி விரிந்து பரந்து மலர்ந்திருப்பது இந்து மதம், இம் மதம் சுட்டும் முழுமுதற் பொருள் பரப்பிரம்மம்.

புலன்களை ஒடுக்கி மனத்தை ஒருமுகப்படுத்தி ஏகாக்கிர சித்தனாயிருப்பவர் எவரோ? அவரால் உணரப்பட்டு, அனுபவிக்கப்படவல்ல அருவமாகிய பரப்பிரம்மத்தை, புலனைந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்து மனம்போன போக்கெல்லாம் போகவிட்டுப் பிறந்திறக்கும் மனிதர்களும், ஒரு ஜென்மத்தில் பரப்பிரம்மத்தை உணர்ந்து அனுபவிக்கச் செய்வதற்காக மகா முனிவராகிய சங்கரர் இந்து மதவழிபாட்டை அறுவகை நெறிகளாக வகுத்துக் தந்துள்ளார். அந்த நெறிகள் சைவம், வைஷ்ணம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனப்பட்டன.

சிவனை வழிபடும் நெறி சைவம். விஷ்ணுவை வழிபடும் நெறி வைஷ்ணவம். சக்தியை வழிபடும் நெறி சாக்தம். கணபதியை வழிபடும் நெறி காணபத்தியம். குமரனை வழிபடும் நெறி கௌமாரம். சூரியனை வழிபடும் நெறி சௌரம். அறுவகை வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடிப்பதற்கு, வேத ஆகம சாஸ்திரங்களையும், தோத்திரங்களையும், புராண இதிகாசங்களையும் சான்றோர்கள் வகுத்துத் தந்துள்ளார்கள்.

திருக்கோணமலை மாவட்டத்தில் சூரிய வழிபாட்டைத் தவிர ஏனைய ஐவகை நெறிகளையும் கடைப்பிடித்து ஒழுகுவதற்குரிய ஆகமச் சார்புடைய பத்ததிகள் வகுக்கப்பட்டு ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கணபதியை வழிபடும் மார்க்கம் காணபத்தியம் என முன்னர் கூறினோம். மகா கணபதியைக் குறித்து அர்ச்சிக்கும் நாமங்கள் அனேகமுண்டு அவற்றுள் ஒன்று விநாயகர் என்பது (வி+ நாயகர் = விநாயகர்) தமக்கு மேலான ஒன்று இல்லாத ஒப்பற்ற முதல்வர் என்பது பொருள். எனவே விநாயகர் பரப்பிரம்மத்தின் திருவுருவாய் வழிபடப்படுகின்றார்.

பக்தி, யோகம், ஞானம், கர்ம நெறி நின்று வழிபடும் அனைவருக்கும் அவரவர் வழிபாட்டை ஏற்று அருள்பாலிக்கும் முழுமுதற் பொருளாகிய விநாயகர், ஓங்காரம் எனப்படும் பிரணவத்தின் உட்பொருளாய் விளங்குபவர். "ஓங்காரத்துள்ளே உதிக்கும் பரம்பொருளே" என்று துதிக்கப்படுகிறார். இவர் ஆலயத்துள் பிரதிஸ்டை செய்யப்பெற்றுள்ள விக்கிரகத்திலும் இருப்பார். அறுகம்புல் செருகப் பெற்ற சாணி உருண்டை, மண்ணுருண்டை, மஞ்சள் மா உருண்டையிலும் எழுந்தருளியிருந்து அருள் பாலிப்பார்.

பாமர மக்களும் பக்தியோடு வழிபட்டு உய்தியடைய அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்ட அற்புதமான ஆலயத்தில் பிரதிஸ்டை செய்து 07 - 09 - 97 இல் மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது.

தடாகத்துள் தாமரை. தாமரையின்மேல் கோவில், கோவிலினுள்ளே விநாயகர். இப்படி யான ஆலய அமைப்பு இலங்கையில் வேறெங்குமில்லை. இந்தியாவிலும் இல்லை.

திருக்கோணமலை மாவட்டத்தில் விநாயகப்பெருமானுக்கு வெருகல் தொடக்கம் தென்னமரவாடிவரை முப்பத்தொரு பேராலயங்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர அநேக கிராமங்களில் சிற்றாலயங்களுமிருக்கின்றன.

திருக்கோணமலை ஆலடி விநாயகர், வீரகத்திப் பிள்ளையார், கன்னியாய்ப் பிள்ளையார், கந்தளாய் கட்டளை பிள்ளையார் முதலிய கோவில்கள் வரலாற்றுப் பெருமைக்குரியவை. திருக்கோணமலை சமாதிப்பிள்ளையார். ஆலங்கேணி அருள்மிகு விநாயகர், குச்சவெளி சித்திவிநாயகர், திரியாய் வரதவிநாயகர் முதலிய கோவில்கள் அற்புதப் பெருமைக்குரியவை.

ஆகமப்படுத்தப்பட்ட ஆலயங்களில் விநாயகருக்கு அலங்கார உற்சவங்களும், விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் கதை எனப்படும் விநாயகர் விரதம், திருவெம்பாவை சித்திராபூரனை முதலிய நைமித்திய பூசைகளும், நித்திய பூசைகளும் நடைபெற்று வருகின்றன.


விநாயகப் பெருமானை மூலமூர்த்தியாகவுடைய ஆலயங்களைத் தவிர ஏனைய ஆலயங்களும் விநாயகருக்கு முதலில் பூசை செய்த பின்னரே ஏனைய மூர்த்திகளுக்கு பூசை செய்வது மரபு. ஆலயங்களில் நடைபெறும் யாகங்களும், கொடியேற்றம், தீர்த்தோற்சவங்கள் முதலியனவும் விநாயகரை வழிபட்ட பின்ரே ஆரம்பிக்கப்படுகின்றன. மக்கள் எந்த நற்காரியங் களையும் செய்யத் தொடங்கும்போதும் விநாயகரை வழிபட்ட பின்னரே ஆரம்பிப்பார்கள் பரக்கிரியை, அபரக்கிரியை யாவும் விநாயகரை வழிபட்டே ஆரம்பிக்கப்படுகின்றது.

விவசாயமோ? வியாபாரமோ? வித்தியாரம்பமோ? எதுவானாலும் "ஓம் மகா கணபதே" என்று துதித்து ஆரம்பிக்கப்படுவதையும், பாமர மக்கள் தாம் எந்தக் காரியத்தை செய்யத் தொடங்கும்போதும் "பிள்ளையாரப்பா" என்று துதித்துக் கொண்டே ஆரம்பிப்பார்கள் , என்பதை யும் திருக்கோணமலை மாவட்டமெங்கும் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

குளக்கோட்டு மன்னன் கந்தளாய்க் குளத்தை கட்டுவதற்கு முன் கட்டளைப் பிள்ளையார் கோவிலைக் கட்டி வழிபட்டே ஆரம்பித்தான் என்பது வரலாறு. பன்னாகம் எனப்படும் மாத்தளையிலிருந்து வரும் வியாபாரிகளும், திருக்கோணமலை வியாபாரிகளும் சங்கமமாகும் இடமாகிய ஐயனார் கேணிக்கும் திருக்கோணமலை ஆலடி விநாயகருக்கு முள்ள வரலாறு விநாயக வழிபாட்டின் பின்னணியைக் கொண்டது.

திரியாய் வரதவிநாயகர் கோவிலில் இருக்கும் மூலவிக்கிரகமாகிய லிங்கப்பிள்ளையாம் குச்சவெளி சித்திவிநாயகர் ஆலயத்திலிருக்கும் மூலவிக்கிரகமாகிய விநாயகரும் திருக் கோணமலை சமாதிப்பிள்ளையார் கோவிலின் மூல விக்கிரகமும் அற்புதப் பெருமைக்குரியவை. இவற்றின் விரிவான வரலாற்றை "திருக்கோணமலை மாவட்டத்திருத்தலங்கள்" எனும் நூலில் காணலாம்.

திருக்கோணேஸ்வரத் திருப்பணி செய்த் குளக்கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்ட மக்களின் பரம்பரையினர் வெருகல் தொடக்கம் தென்னமரவாடிவரை பரந்து வாழ்ந்தார்கள். அவர்கள் வழிபட்டு வந்த விநாயகர் வழிபாடும் கலாச்சாரமும் இன்றுவரை தொடர்கின்றது. இதனால்தான் விநாயகருக்குப் புதிய ஆலயங்களும் தோன்றுகின்றன. திருக்கோணமலை மாவட்ட மக்களின் விநாயகர் வழிபாடு மிகப்பழமையானதென்பதை ஆங்காங்குள்ள ஆலயங் களும், மக்களின் வாழ்க்கை முறையும், வழிபாட்டு நெறிகளும் உணர்த்துகின்றன.



# விநாயக வழிபாட்டுத் தொன்மையும் சிறப்பும்

திரு. செல்வரெட்ணம் பத்மசீலன்

எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறு. அவையே அறுவகைச் சமயங்களாகும். இறைவனை எந்த வடிவில் நாம் வழிபடுகின்றோமோ அந்த வடிவில் அருள் புரிவார். இவ் அறுவகைச் சமயங்களில் கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமே காணாபத்தியம். இவர்களை காணபதர் என அழைப்பர். எனினும் எமது நாட்டிலேயே இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் கணபதியை வழிபடுவதும், யாவா, பர்மா, கம்போடியா திபெத், மங்கோலியா, ஜப்பான், நேபாளம், சீனா போன்ற நாடுகளில் வெவ்வேறு நாமங்களில் ஆற்றப்படுவதும், காணாபத்தியம் குறிப்பிட்ட காணபதர்களுக்கு உரிய நெறியில் நின்றும் விரிவடைந்து பலராலும் போற்றப்படுவதையே காட்டுகிறது.

## விநாயகர் வழிபாட்டின் தொன்மையும், வளர்ச்சியும்.

விநாயகர் வழிபாடு சிந்துவெளியில் இடம்பெற்றமைக்கு இலக்கிய ஆதாரங்கள் இல்லை. எனினும் அங்கு காணப்பட்ட யானை உருவங்கள் இவ் வழிபாட்டுடன் தொடர்புடைய தாக இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

வேத இலக்கியத்திலே "கணாம் த்வாம் கணபதிம் அவாமஹே" எனும் யசுர் வேதத் திலுள்ள சத ருத்திரியமும், வாஜ சநேஜ சம்ஹிதை ஆகியவற்றில் விநாயகர் பற்றிய குறிப் புகளும், அதில் "கணபதிக்கு வணக்கம்" என்றும் கூறுகின்றது. மேலும் ஐதரேய பிராஹ் மணத்திலே விநாயகர் விக்கினங்களை ஏற்படுத்துபவர், சாந்தப்படுத்துபவர் என்ற குறிப்பும் உள்ளது. கணபதி உபநிடதத்திலே விநாயகரை பற்றி கூறும் போது எல்லாம் நீயே படைப் பவனும், காப்பவனும், அழிப்பவனும் என்றும், ஏரம்ப உபநிடதத்திலும் விநாயகரைப் பற்றி குறிப்புக்களை காணலாம்.

காயத்திரி மந்திரம் "ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்தோ தந்தி : பிரசோதயாத்"

எனக் கூறுகின்றது. இவ் மந்திரத்தை தினமும் 108 தடவை உச்சரித்தால் எல்லாத் தடைகளையும் கடந்த ஒருவன் செயல்களில் வெற்றி பெறலாம்.

இவ்வாறு விநாயகர் வழிபாடு தொன்மையாக இடம்பெற்றது எனினும், புராண இதி காசங்கள் மூலமே பிரசித்தி பெறுகின்றது எனலாம். இதனை விநாயகர் புராணம், முத்கல புராணம், கணேச புராணம், பவிஷ்ய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், போன்ற புராணங்களின் மூலம் அறியலாம். கணேச கீதை, கணேசகல்ப்பம், விநாயபரத்துவம், விநாயகர் கவசம், இராமாயணம், மகாபாரதம் போன்ற சமய இலக்கியங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

விநாயகரின் தோற்றத்தைப்பற்றி வெவ்வேறு புராணக்கதைகள் குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக இவரது தோற்றத்தைக் கந்தபுராணம் கயமுகன் உற்பத்திப்படலம் விரிவாக கூறும்.

திருக்கைலாசத்தில் ஒரு சமயம் சிவபெருமானும், உமாதேவியாரும் திருவுலா வந்து கொண்டு இருந்தார்கள். அங்கேயுள்ள மண்டபம் ஒன்றில் பிரணவம் சித்தரிக்கப்பட்டிருந்தது. அதனை உமையவள் பார்க்கிறாள். சிவ ஆணையால் அந்த பிரணவ எழுத்து இரண்டாகப் பிரிந்து ஆண்யானையாகவும், பெண் யானையாகவும் சேர்ந்து நின்றது. அவற்றின் மத்தியில் ஐந்து கரமும் யானை முகமும் இளம்பிறைச் சந்திரன் போலும் எயிறும் உடைய ஓர் குழந்தை தோன்றியது. இறைவன் அக்குழந்தையை எடுத்து வந்து இறைவியின் கரத்தில் கொடுத்து விநாயகர் என்று நாமகரணம் சூட்டினார். (வி - நாயகன்) தனக்குமேல் தலைவன் இல்லாதவன் என்பது இதன் கருத்தாகும்.

அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனருள்
முக்கணல் வாயினால் மும்மதத் தாறுபாய்
மைக்கருள் களிறெனும் மாமுகத் தாறுபாய்
செக்கர் வார் சடைய னோர்சிறுவன் வந் தருளினான்.
(கயமுகன் உற்பத்திப் படலம் 148)

சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்ற போது, சிவன் சென்ற தேர்ச்சில்லு முறிவடைந் தமையும், அதற்கு காரணம் விநாயகரை வழிபடாது சென்றமை என்ற கருத்து அருணகிரி நாதர் திருப்புகழில் "அச்சிவன் உறைதரு அச்சது பொடி செய்த அதிதீரா" வரிமூலம் எடுத்துக் காட்டுகின்றார்

வியாசர் மகாபாரதக் கதையைச் சொல்ல விநாயகர் எழுதியமையும், அவரது தந்தம் எழுத்தாணியாக பயன்படுத்தப்பட்டமையும் விநாயகர் வழிபாட்டை எடுத்துரைக்கின்றது.

அகத்திய முனிவர் வாதாபி என்னும் அரக்கர் இடையே அகப்பட்ட போது துன்பம் அடைந்ததாகவும், பின்னர் வாதாபி கடலினுள் மறைந்த போது அகத்தியர் கணபதியின் அருளால் கடலை வற்றச் செய்து., வாதாபியை வென்றதாகவும், இதன் பின்னர் அகத்தியரால் "வாதாபி கணபதி" பிரதிஷ்டை செய்து வழிபடப்பட்டார் எனவும் அறிய முடிகிறது.

தென்னக வரலாற்றின் ஆரம்ப நிலையில் விநாயகர் வழிபாடு இடம்பெற்றமைக்கு சான்று இல்லை எனினும், சங்கமருவிய காலத்தில் "கரகங் கவிழ்ந்த காவிரிப்பாவை" எனும் மணிமேகலை இலக்கியம் குறிப்பிடும் கருத்தில் விநாயகர் கமண்டலத்தை கவிழ்த்தார் என வும் அறிய முடிகின்றது.

பல்லவர் காலத்தில் திருமுறைகளில் விநாயகரை குறித்து பாடும் தன்மையினைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஞானசம்பந்தர் "பிடிய தனுருவுமை கொளமிகு கரியது" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் சிறுத்தொண்டர் நாயனார் விநாயகர் வழிபாடு ஆற்றினார் எனவும் அறிய முடிகின்றது.

சோழர் காலத்தில் விநாயகர் வழிபாடு சிறப்பிற்றிருந்தமைக்கு அக்கால விநாயகர் ஆலயங்கள் சான்று பகிர்கின்றன.

பொல்லாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, ஒளவையார், நக்கீரர், கபிலதேவர் போன்றறோர் விநாயகர் வழிபாடாற்றி அருள் பெற்றனர் எனவும் இலக்கியங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது.

மேலும் அக்கால மக்கள் பின்பற்றிய விநாயகர் விரதங்கள் விநாயக சதுர்த்தி; சங்கடஹரசதுர்த்தி விநாயக சஷ்டி என்பன விநாயக வழிபாட்டின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதோடு, தொடர்ந்தும்தற்காலத்திலும் மக்கள் எந்தக் காரியத்தையும் தொடங்க முன்னர் விநாயகரை வழிபட்டுத்தொடங்கும் மரபு காணப்படுகின்றது.

## ஈழத்தில் விநாயகர் வழிபாடு

பாரதப் பூமியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்ட ஈழத்தவர், அக்காலத்தில் இருந்தே விநாயகர் வழிபாட்டை பின்பற்றினர் என ஊகிக்க முடிகிறது. எனினும் விநாயகர் வழிபாட்டின் வளர்ச்சியும், தொடர்ச்சியுமாக இன்றைய ஆலயங்களான வடக்கே நல்லூர்-வெய்யிலு கந்த பிள்ளையார், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார், சுழிபுரம் கண்ணைக்

கோதி காக்கைப் பிள்ளையார், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார், பருத்தித்துறை தில்லையம்பலப் பிள்ளையார், மருதடி விநாயகர், முறிகண்டிப் பிள்ளையார் போன்றனவும், கிழக்கேமட்டு அமிர்தகழிப் பிள்ளையார், திருமலை ஆலடிப்பிள்ளையார் திருமலை கேணியடி சின்னத்தொடுவாய் பிள்ளையார், திருமலை பெரியதொடுவாய்ப் பிள்ளையார், மனையாவழிப் திருச்சிற்பலம் பிள்ளையார், மடத்தடி வீரகத்திப் பிள்ளையார், திருமலை சமாதுப் பிள்ளையார், இரெத்தினசிங்கப் பிள்ளையார் பத்தாம் குறிச்சி கடற்கரைப் பிள்ளையார் திரியாய் பிள்ளையார் சுண்டங்காட்டுப் பிள்ளையார், சாம்பல்தீவு வடலியம்பதிப் பிள்ளையார், நிலா வெளிப் பிள்ளையார், குச்சவெளி கடற்கரைப் பிள்ளையார் போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய விநாயகர் ஆலயங்கள் மக்களால் வழிபாடு ஆற்றப்பட்டு வருவதும், விநாயகர் சதுர்த்தி, விநாயக சஷ்டி சங்கடஹரசதுர்த்தி போன்ற விரதங்களை மக்கள் அனுஷ்டித்து வருவதும், விநாயகர் அகவல், பிள்ளையார் பெருங்கதை போன்றவற்றை மனனம் செய்யும் மரபும், தமது காரியங்களில் விநாயகரை முதன்மைப்படுத்தி வழிபாடாற்றுவதும், விநாயகர் வழிபாட்டை போற்றுவதையே காட்டுகிறது..

இதனை விட அநுராதபுரம், மிகுந்தலை பகுதியில் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயமும், பொலநறுவைப் பகுதியில் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட விநாயகர் திருவுருவங்களும் ஈழத்தின் விநாயகர் வழிபாட்டை எடுத்துக் காட்டுகின்றது.

## விநாயகரை வழிபடும் முறை

கடவுளின் திருவுருவத்தை அமைக்க கல், மண், மரம், செப்பு என்பன் பயன்படுத்தலாம். என ஆகமங்கள் கூறிய போதும் பிரணவ வடிவமான விநாயகரை வழிபடும் போது நினைத்த மாத்திரத்தில் இலகுவாக ஆவாகணம் செய்து வழிபட முடியும். பசுவின் சாணத்திலும், அரைத்த மஞ்சள் மாவிலும், சந்தனத்திலும், வெல்லத்திலும், அறுகம் புல்லிலும் இவரை ஆவாகணம் செய்து வழிபடலாம். நாம் பிள்ளையார் சுழி (உ) இட்டு எந்தக் காரியத்தை தொடங்குவதும், பிள்ளையார் வழிபாட்டையே கருதுகின்றது.

கோயிற் கிரியைகள், வித்தியாரம்பம், ஏர் பூட்டல் மனைபுகுதல், வீட்டுக் கிருத்தியங்கள், திருமணக் கிரியைகள், நூல்காப்புச் செய்தல் போன்ற இந்துக்களின் நற்கருமங்களுக்கு விநாயகர் பூசை செய்து "ஓம் கணபதி துணை" என உச்சரித்து வழிபடும் முறை உண்டு.

விநாயகர் வழிபாட்டுக்குரிய சிறப்பான நாள் வியாழக்கிழமை ஆகும். விநாயகரை வணங்கும் போது தோப்புக்கரணம் இட்டு வழிபடும் முறை புராணக் கதை ஒன்றுடன் தொடர்புடையதாகும்.

விநாயகரை வழிபடும் பொழுது மோதகம், பொங்கல், சுண்டல், என்பன படைத்து வழிபடுவர். இவ்வழிபாட்டினை ஔவையார் "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை" எனும் அடிகள் மூலம் எடுத்துக் காட்டி, விநாயகரை வழிபடுவதனால் சித்திகளைப் பெறலாம் என்பதை கூறுகின்றார்.

விநாயகருக்கு அறுகம்புல், வன்னி, மந்தாரை, என்பனவற்றடன் சிவ பூசைக்குரிய எல்லாப் பூக்களையும் பூசைக்கு பயன்னடுத்தலாம். பூசையின் போது அறுகம்புல் 21, பத்திரம் 21, புஷ்பம் 21, மோதகம் 21, பழம் 21, என இருபத்தொன்றாக வைத்து வழிபடுவர். இதற்குரிய காரணம் ஞானேந்திரியம் ஐந்து, அவற்றால் செயல்படும் காரியங்கள் ஐந்தும், அதுபோல கர்மேந்திரியங்கள் ஐந்தும், அவற்றால் செயல்படும் காரியங்கள் ஐந்தும் ஆக மொத்தம் இருபது இவற்றுடன் மனம் எனும் கருவியைகேர்த்து இருபத்தொன்று என்பது பொருளாகும்.

## விநாயகர் வடிவம் உணர்த்தும் தத்துவம்

தத்துவ ரூபமாகவே விநாயகர் அமைகிறார். இவரது அமைப்பில் எல்லாத் தெய்வங்களும் அடங்குகின்றன. எடுத்துக் காட்டாக நாபி - பிரம்ம ரூபம், முகம் - விஷ்ணு ரூபம், கண்- சிவரூபம், இடப்பாகம் - சக்தி ரூபம், வலப்பாகம் - சூரிய ரூபம். எனவே தெய்வங்களது கூட்டு அமைப்பாகவே இவர் உள்ளார். இதனால் "தத்வம் அஸி" எனும் பொருளாய் உள்ளார்.

முகம் மிருகம் போன்றது, உடல் தேவ உடலை ஒத்தது. கால்கள் பூதகணங்களை ஒத்தது, ஒற்றைக் கொம்பு ஆண் யானை, ஒடிந்த கொம்பு பெண் யானையை ஒத்தது. இப்படி யாக தேவ உடலை பெற்றிருப்பதனால் உயர் திணையாகவும், மிருக முகத்தால் அஃறிணை யாகவும் அதிசயிக்கத் தக்க வடிவத்தை உடையவர்.

இவரது பானை வயிறு உலகை அடக்கியுள்ளதாகவும், யானை முகம் ஓம் என்ற பிரணவப் பொருளையும், மோதகம் இன்ப வடிவானவன் என்பதையும், பெரிய செவி அன்பர் களது வேண்டுகோளை ஏற்பவன் என்பதையும், ஒற்றைக் கொம்பு தியாக உணர்வையும் காட்டுகிறது.

விநாயகர் ஐந்தொழில் வடிவமாக உள்ளார் என பெரியவர்கள் கூறுவர். எந்த மந்திரங்கட்கும் மூல சக்தி பெற்ற சிறப்பான மந்திரம் "ஓம்" என்பது அந்த "ஓங்கார" வடிவிற்கே உருவமாக அமைந்தவர் கணபதி. இதனாலேயே எழுத தொடங்க முன்னும் பிள்ளையார் சுழி இட்டுச் வணங்கி எழுத தொடங்குவர்.

பெரிய தோற்றத்தையுடைய விநாயகர் எலியை வாகனமாகக் கொண்டிருப்பது அறி வுக்கு பொறுத்தமற்றது எனினும், அது ஒரு தத்துவமாகும். எங்கும் வியாபகமாக இருக்கின்ற விநாயகக் கடவுள் அவ்ஆன்மாவின் அன்புக்கு கட்டுப்பட்டு, அந்த ஆன்மாவினது இதயக் கமலத்தில் வீற்றிருக்கின்றார். விநாயகரது திருவுருவமே தத்துவப் பொருள் எனலாம்.

## விநாயகரின் மூர்த்தங்கள் - காரணப் பெயர்கள்.

விநாயகருக்கு 16 வகையான மூர்த்தி பேதங்கள் கூறுகின்றார்கள். அவையாவன, பாலகணபதி, தருணகணபதி, பக்த கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிச கணபதி, பிங்கள கணபதி, உச்சிட்ட கணபதி, விக்கின கணபதி, ஹிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, இலட்சுமி கணபதி, மகா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, என்பனவாகும்.

விநாயகப் பெருமானின் திருநாமங்கள் அர்ச்சனை நாமாவளியில் காரணப் பெயர் களாய் உள்ளன. அவற்றுள் சில.

- கஜாநநன் - யானை முகத்தையுடையவர்
- ஸித்திப்ரதன் - எடுத்த கருமத்தை நிறைவேற்றுபவர்
- கணாதிபன் - கணங்களுக்குத் தலைவர்
- ஹேரம்பன் - போற்றுதலுக்குரிய வீரர்.
- பாலகப்பிரியன் - பிள்ளைகளுக்கு அன்பர்
- வித்தியாராஜன் - கல்விக்கு அரசர்
- மோதகபஷகன் - கொழுக்கட்டையுண்பவர்
- விநாயகன் - தலைமை வகிப்பவர்
- வீரகணபதி - வீரர்களுக்கு தலைவன்
- லம்போதரன் - தொந்தி வயிறுடையவர்

எனவே பல சிறப்புக்களையும், தத்துவக் கருத்துக்களையும், பழமையும் உடைய விநாயக வழிபாடு ஆனது, இன்று இந்து மதத்திற்குரிய வழிபாடு என்பதனை விட, ஏனைய மதத்தவர்களால் வழிபடும் அளவுக்கு சகோதர வழிபாட்டு நெறியாக போற்றப்பட்டு வருகின்றது.

சித்தி விநாயகர் சரணம் சரணம் என்று விநாயகரைப் பணிந்து யாவருக்கும் நன்மைகள அருள பிரார்த்தித்து கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

உசாத் துணை நூல்கள்:- இந்து நாகரிகம் ஜ க். சி. குலரத்தினம்
கடவுளின் வடிவவங்கள் - ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தா
ஆதிசங்கரர் அருளிய ஆறு சமயங்கள் - அநுராகம் வெளியீடு
இருபாலை கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர்
திருக்கோணமலை ஆலடி விநாயகர் ஆலய கும்பாபிஷேகமலர்

# ஆலய வழிபாடும் நாமும்

செல்வி. ரவிச்சந்திரிக்கா சுந்தரேஸ்வரஐயர்

"அரிது அரிது மானுடராதல் அரிது"
"வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்"
"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"
என்றெல்லாம் மனிதப் பிறவியின் மேன்மையைப் போற்றுவர்.

இவ்வாறான பெறுதற்கு அரியதான மானிடப் பிறவியை, முன் செய்த புண்ணிய தவத்தினால் நாம் பெற்றுள்ளோம். இம் மானிடப் பிறப்பினால் வரும் பயன், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று இறைவனை வழிபட்டு நித்தியானந்த முத்தியை அடைதலே.

அவ்வகையில் நாம் எமது இறுதி இலட்சியமாகிய முத்தியைப் பெறுவதற்கு ஏற்ற ஒரு சிறந்த சாதனமாக விளங்குவன ஆலயங்களாகும். இவ் ஆலயங்களுக்குச் சென்று இறையை வழிபடுவதன் மூலம் நாம் இறையருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இறைவனை நாம் ஏன் ஆலயங்களுக்குச் சென்று வழிபட வேண்டும்? ஆம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களில் கண்டு வணங்க வேண்டிய தேவை யாது?

பசுவின் உடம்பெல்லாம் பால் செறிந்து காணப்படினும், அதன் மடியின் மூலமாகவே பாலினைப் பெற்றுக் கொள்கின்றோம். நீரானது நிலத்தின் கீழ் எங்கும் பரந்து காணப்படுகின்றது. எனினும் நாம் கிணறு தோண்டி, கிணற்றிலிருந்தே நீரினை பெறுகின்றோம். அது போன்றதுதான், நாம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களிலே வழிபடுகின்ற முறைமையும் ஆகும். ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டுத் திருவுருவங்களில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயங்கள். எனின் இறைவன் இல்லாத இடங்களே கிடையாது. எனினும், ஆலய வழிபாடு இன்றியமையாததாகும்.

எம்மையெல்லாம் முத்தியாகிய கரையில், ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம் தீர்த்தம் என்னும் மூன்று வடிவாக இறைவன் விளங்குகின்றான். இவற்றை முறையாக வழிபடுவோர், உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர். இதனை

"மூர்த்தி தலந் தீர்த்த முறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனவரும் தாயுமான சுவாமிகள் அருள்வாக்கினால் உணரலாம்.

மேலும் இறைவனை வழிபடுவதற்கு மிக மிக முக்கியமானவை மன ஒருமைப்பாடும், அமைதியான சூழலுமாகும். இவற்றைத் தரக் கூடியவை ஆலயங்களே. ஆன்மாக்கள், இறைவனடைய திருவடியில் ஒடுங்குதற்கரிய இடங்கள் இவ் ஆலயங்களே ஆகும்.

ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை உள்ளத்திலே தியானித்து, அமைதியான சூழலிலே வழிபட உகந்த இடங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. சுருக்கமாகக் கூறின் ஆன்மாக்கள் லயப்படும் இடங்கள் ஆலயங்கள் எனலாம்.

எனவே எம்மையெல்லாம் இறைவனோடு சேர்ப்பிக்கின்ற இடங்களாக விளங்கும் ஆலயங்களுக்குச் சென்று இறையைத் துதிப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அது பெரும் சிறப்பையும் கொடுக்கும்.

இதனாற்றான் போலும்
"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றனர்
அது மட்டமல்லாது,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு"

"திருக்கோயிலில்லாத திருவிலூரும் .........
ஊரல்ல அடவி காடே"

ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
செத்துப் பிறப்பதற்கே தொழிலாகியிறக்கின்றாரே"

என்ற அடிகளெல்லாம் ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையையே எடுத்துக் காட்டி நிற்கின்றன.

அவ் வகையில், திருக்கோணமலையிலே சிறந்த பாடசாலையாகத் திகழும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பெருமைக்கும், சிறப்புக்கும் காரணமாக இருப்பவர் இப் பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் சித்தி விநாயகரே என்பது யாவரும் அறிந்ததே. அப் பெருமானுக்கு இன்று ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றபட்டுள்ளமை பாடசாலையின் பெருமையினைச், சிறப்பினை, மேலும் மெருகூட்டுவதாக உள்ளது.

எனவே இவ் ஆலயத்தை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் நாள்தோறும் பரிபாலித்துச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களின் வழிநின்று ஆலய வழிபாடு செய்து சித்தி விநாயகனின் அருட் கடாட்சத்தைப் பெறுவோமாக.

**உனக்குப் பைத்தியம் பிடிக்குமானால் அது**
**இறைவனிடம் கொண்ட அன்பால் உண்டாகட்டும்**
**உலகப் பொருள்களுக்காகப் பைத்தியம் கொள்ளாதே**



- ஸ்ரீ இராமகிருஷ்ணர் -

# ஆலய அமைப்பு சிற்ப சாஸ்திரம்

சிற்பகலா பானு ஸ்தபதி ஸ்கந்ததாஸ்
**ரவீந்திரராஜா**

எங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற பரம்பொருளை மிக எளிதில் அடையக்கூடிய இடம் ஆலயம், அனுபூதிமான்களாகிய சிவனடியார்களும். அனுபூதி மாண்களை நாம் நினைத்தபடி தரிசிக்க முடியாது. எனவே ஆலயம் எமக்கு இன்றியமையாததொன்றாகும். ஆலய அமைப்புக்கள் யாவும் உள் தந்துவ கருத்துகளின் அடிப்படையில்தான் நிர்மானிக்கப் படுகின்றன என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆலயம் என்பதன் பொருள் எல்லாம் ஒடுங்கும் இடம் என்பதைக் குறிக்கின்றது. ஆல யம் : ஆ - என்பது பசுவையும், லயம் - என்பது ஒடுக்கத்தையும் குறிக்கும். பசு என்பது ஆன்மா தன் மும்மலங்களையும் நீக்கி இறைவனிடம் ஒடுங்குவதற்குரிய இடமாக திகழ்வது ஆலய மாகும். ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. ஆலயம் அதன் கோபுரம் தேர் என்பது சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகின் றது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினை யும், மஹா மண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

யோக மார்க்கத்தில் ஆறாதாரஸ்தானங்கள் என மூலாதாரம், சுவாஸ்திஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்பனவற்றை முறையே கொடிஸ்தம்பத்தடி, பலி பீடம், தரிசன மண்டபம், மஹா மண்டபம், அர்த்த மண்டபம், கர்பக்கிரகம் என்பனவாக அமைகின்றன. சகஸீராரத்தை (ஆயிரமிதழ் கமலம்) நினைவூட்டவே கர்பக்கிரகத்தில் கமல விளக்கு அமைகின்றன.

ஸ்தம்ப மண்டபத்திலே கொடித்தம்பத்திற்கு அருகிலே பலிபீடமும், அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கும். இவை பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளை விளக்கி நிற்பவை.

நந்தியானது சிவனை நோக்கியவாறு (மூல மூர்த்தியை பார்த்தபடி) அமைகிறது. பலிபீடம் மலநீக்கத்திற்கு அறிகுறி. நந்தி, ஆன்மா. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை பலியிட்டு, பதியாகிய பரதத்தை நாடவேண்டும் என்பதை குறிக்கின் றது. ஆலய அமைப்புகள் ஒவ்வொன்றும் பல தத்துவங்களை உள்ளடங்கியுள்ளது. இவ் வாலயங்களை சாஸ்திர முறைப்படி அமைப்பதற்கு சிற்ப சாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன.

## ஆலய சிற்பக்கலை

நம் ஒப்புயர்வற்ற நுட்பக்கலையின் தனிச்சிறப்புடையது. அது இறைபாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. உள்ளத்தில் எழும் தோற்றத்தை உருவத்திலே வடித்து பார்க்கும் கலை.

## சிற்பக்கலை

எல்லாம் வல்ல இறைவனை பல உருவங்களில் நினைத்து சாஸ்திரங்களுக்கும், வேதங்களுக்கும் விளக்கம் தந்து, அழகுற அமைத்து தருவது ஆலய சிற்பக்கலை.

## கோபுர கட்டட அமைப்பும், அதன் பெயரும்.

1. வட்டமாயிருக்கும் கோபுரங்களுக்கு விருத்த விமானம்.
2. சதுரமாய் இருக்கும் கோபுரங்களுக்கு சதுரஷ விமானம்.
3. ஆறுபட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு சட்கோண விமானம்.
4. எட்டுப் பட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு அஃஷ்ட கோண விமானம்.
5. எதிர்புறம் மரமாடி போலும் மூலையாய் பின்னால் யானை முதுகு போலும் இருக்கும் கோபுரங்களுக்கு கெஜம் பிரஷ்ட விமானம், துங்கனை மாட விமானம், அத்தி புஷ்ட விமானம் என்று பெயர்.
6. இரண்டு பக்கம் மரமாடியும், ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இருக்கும் கோபுரங்களுக்கு சக்தி நீள, மகாதுவார கோபுரம் இராஜ கோபுரம் என்று பெயர்.

## விமான கட்டட அளவும், அதற்குரிய பெயரும்.

1. அகலம் கொண்ட அளவு உயரம் வைத்து கட்டிய விமானத்திற்கு யேகபூமம் (ஏகதள விமானம் எனப் பெயர்)
2. அகலம் ஏழு பங்கு செய்து, உயரம் 10 பங்கு வைத்து கட்டிய விமானத்திற் சாந்தீக விமானம் என்று பெயா.
3. அகலம் 1 பங்கு, உயரம் 1½ பங்கு வைத்து கட்டிய விமானத்திற்கு பவுஷ்டிக விமானம் எனப் பெயர்
4. அலகம் 1 பங்கு , உயரம் 1¾ பங்கு வைத்து கட்டிய விமானத்திற்கு விமானம் எனப் பெயர்.
5. அகலம் 1 பங்கு, உயரம் 2 பங்கு வைத்து கட்டிய விமானத்திற்கு அற்புத விமானம் எனப் பெயர்.

## கற்பக்கிரக கட்டட வேலை அமைப்புகள் 3 வகையாக உள்ளது.

1. உத்திர மட்ட வேலை அமைப்பு
2. இரட்டைப் பஞ்சாங்க வேலை அமைப்பு
3. முகபத்திர வேலை அமைப்பு.

உத்திர மட்ட வேலை அமைப்பு சாதாரணமான வேலை அமைப்புக்களைக் கொண்டது.

இரட்டைப் பஞ்சாங்க வேலை அமைப்பு, நடுத்தரமான வேலை அமைப்புக் கொண்டது.

முகபத்திர வேலை அமைப்பு, அதிக மடிப்பு வேலைகளுடன் முகபத்திர வேலைகளைக் கொண்டது. இது உன்னதமான வேலையமைப்பாகும்.

இவை கற்பக்கிரக கட்டட அமைப்புக்களாகும். இவ் வேலை அமைப்புக்கள் வியாள மட்டம் வரை செய்யப்படும்.

மேல் விமான அமைப்புகள் ஏகதளம், துபிதளம், திரிதளம், பஞ்சதளம் எனத் தொடர் கின்றது.

இவ்வேலைகளுக்கு தனித்தனியாக கணக்கீடுகள் உள்ளது, அக் கணக்கீடுகளை சரியான முறையில் பங்கீடு செய்து வேலைகளை அமைத்தல் வேண்டும்.

சாஸ்திர முறைப்படி ஆலயங்களை அமைத்து மூர்த்திகளை மூர்த்தி பதவிஞ்யாசப் படி ஸ்தாபனம் செய்து, சிலா விக்கிரகமாக இருந்தால் அஸ்ட பந்தனமும், தாமிர விக்கிர கமாக இருந்தால் திரிபந்தனமும் செய்தல் வேண்டும். இதில் முக்கியமாக அவ் மூர்த்தி களுக்குரிய யந்திரங்களை செப்பு, பொன், வெள்ளி தகடுகளில் வரைந்து 1 பட்சம் (1 பட்சம் 15 நாட்கள்) 2 பட்சம் அல்லது 1 மண்டலம் யந்திர பூசை செய்து, யந்திர ஸ்தாபனம் செய்ய வேண்டும். இவ் யந்திரங்கள் தான் அருட் செறிவை நோக்கி செறிய வைக்கும் சக்தி யுடையது. ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்கள், மந்திரங்கள், முத்திரைகள் என்பன இவற்றிற்கு மேலும் சக்தியுடையதாகின்றது. இவ் அருட்பலனை கொடுப்பதே ஆலயத்தில் நடைபெறும் நித்திய பூசைகளாகும்.

இங்ஙனம் ஆக்கப்படும் அருளானது ஆலயத்தைச் சுற்றி நாற்புறமும் பரவி நாட்டிற்கு பல நன்மைகளைப் பயக்கும். இந்த அறிவும், அன்பும் கலந்த உண்மையான பக்தியுடன் ஆலய தரிசனம் செய்வோர் அங்குள்ள அருள் நெறியினால் அடையும் பலன் அனுபவம் எனப்படும் ஆகவே,

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.




ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்று என்று நான் இறைவனைக் கேட்க மாட்டேன். ஆபத்தைச் சந்திக்கவும், பயமின்றிச் செயல்படவும் உள உறுதியைத் தா என்றே இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

– கவி தாகூர் –

பெரியோர்கள் பக்தியைக் கண்களில் தீட்டும் மைக்கு ஒப்பிட்டிருக் கின்றனர். ஸ்ரீமதி ராதை ஒரு சமயம் "தோழியரே நான் எனது கிருஷ்ணனை எல்லாவிடங்களிலும் காண்கிறேன் என்றாள்" அதற்குக் கோபியர்கள் தோழி! நீ பக்தியாகிய அஞ்சனத்தைக் கண்களில் இட்டுக் கொண்டிருக்கிறாய் ஆதலால் தான் அப்படித் தெரிகின்றது என்றார்கள்.

– ஸ்ரீ ராம கிருஷ்ணர் –



அருள்மிகு சித்தி விநா யகர் ஆலயத்தின் ஒரு பக்க தோற்றம்



இராமகிருஷ்ண சங்கசுவாமி மார்களுடன் இவ்வாலய திருப்பணிக் குழுவினரைச் காணலாம்.




ஆலய திருப்பணியில் பங்கு கொண்ட நிருமாண சிற்பி கா. விநாயகசோதி, பிரதிஷ்டா குரு வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள் சிற்ப கலாபானு க. இரவிந்திரராஜா ஆகியோருக்கு கும்பாபிஷேக தினத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததைக் காணலாம்



கும்பாபிஷேக கிரியைகளை பிரதிஷ்டா குரு வேதாக மமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள், ஏனைசிவாச்சாரியர்களும் நடத்துவதை காணலாம்



பிரதான கும்பம் ஊர்வலமாக எடுத்து வரப்படுதல்



ஸ்தூபிக்கு அபிஷேகம் இடம் பெறுதல்



மூலவிக்கிரகத்திற்கு கும்பாபிஷேகம் இடம் பெறுதல்

# அந்தரங்கசுத்தி

**சுவாமி ஸ்ரீமத் கெங்காதரானந்தா**
அவர்களின் அமிர்தவர்ஷம் எனும் நூலின் சிலதுளிகள்

**திருமதி. சி. பத்மநாதன்**
சே. ஆ. ஆலோசகர் தமிழ்மொழி

தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி ஆயிரக்கணக்கில் இளைஞர் சமுதாயத்தினர் பயின்று உயர் கல்விப் பெறுபேற்றினை உருவாக்கித்தரும் கலைக்கூடம் இங்கு கல்லூரி முகப்பில் இன்று வண்ணப் பொலிவுடன் காண்போரைக் கவர்ந்திருக்கும் வகையில் அமைந்த சித்தி விநாயகர் ஆலயம்.

கல்விக் கூட்டங்கள் இறைவன் உறையும் கோவிலுக்குச் சமமென்பதனால் அன்றோ அவை வித்தியாலயம் என அழைக்கப்படுகின்றன. வித்தைகள் கற்று வாழ்வியலில் உயர்ந்திட வித்தியாலயம் மெய்ஞ்ஞானம் பெற்று, ஆத்மா. உயர்ந்திட விநாயகராலயம் இவற்றைத் தக்கமுறையில் பேணி, தாமும் உயர்ந்து கல்லூரி பெயரையும் சுடர்த்திட வைக்க வேண்டியது. மாணவர் தம்கைகளில் அமைந்துள்ள பொறுப்பாகும்.

நளமகாராஜனின் கதை நாமனைவரும் அறிந்தது நிடத நாட்டு வேந்தன் நளன், விதர்ப்ப தேசத்தரசன் மகள் தமயந்தியை காதலித்துக் கரம்பிடித்தான் கலி தொடர்ந்ததால் சூதாடி நாடிழந்து மனைவியுடன் கான்புகுதான் துயரம் அங்கும் தொடர்ந்தது, தமயந்தியின் சபலத்தால் கட்டியிருந்த ஆடையும் ஒன்று பறிபோக, இருளில் அறிதுயிலில் இருந்த தமயந்தியை நளன் பிரிந்தான். துயரத்தில் ஆழ்ந்திருந்த தமயந்தியை கொடியமலைப்பாம் பொன்று விழுங்க வந்தது தமயந்தியின் அழுகுரல் கேட்டு அங்கு வந்த வேடன் ஒருவன் பாம்பைக் கொன்று பொன்மயில் தமயந்தியைக் காத்தான்.

தமயந்தியின் பேரெழில் அவனை மயக்கிற்று தன் அடிமையாகவேண்டுமென அச்சுறுத்திய வேடனிடம் தமயந்தியின் நியாயமான இரங்கல் உரைகள் எவ்வித பயனும் விளைவிக்கவில்லை பலன் தன் உயிரைப் பாதுகாத்து உபகாரஞ் செய்தவனையே தன் கற்பின் கனலால் எரித்துச் சாம்பராக்க வேண்டிய நிலைக்குத் தமயந்தி தள்ளப்பட்டாள். தமயந்தியின் செயல் நியாயமானதா? தவறு எங்குள்ளது? உயிரைக் காக்க வந்த வேடனின் உள்ளம், உள்நோக்கம். உத்தமமாக இல்லாதால் அவன் கதி அவ்வாறாயிற்று இதேபோல எம்மில் பலருடைய செயற்பாடுகள் அமைந்திருப்பதை ஆழ்ந்து நோக்கினால் புரிந்து கொள்ளலாம். ஓரிடத்தில் தொண்டு செய்கிறோம். என வைத்துக்கொண்டால் அரசியல் ரீதியாக சமூதாயரீதியாக, மதரீதியாக செயற்பாடு தோன்றினாலுங்கூட அதன் உள்ளே சுயநலம் நோக்கம் பெருகிநிற்குமானால் அந்தக் தொண்டினால் கிடைக்கும் பயன்தான் என்ன? இந்த வேடுவன் சாம்பலான கதை போலவே ஆகிவிடும்.

எங்களுடைய அந்தர் முகமில்லாத - சுத்தியில்லாத செயல்கள், வெளிப்பார்வைக்கு எத்தனை தர்ம நிஷ்டையோடு தோன்றினாலும் அச்செயல் இறுதியில் எமது வாழ்க்கைக்கும் உயிருக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடிய ஒன்றாகத்தான் இருக்கும்.

எந்தச் செயல் சுயநலம் அற்றதாக பரோபகாரம் உடையதாக - அடுத்தவருக்குச் சுகங் கொடுக்கக் கூடியதாக அமைகிறதோ. அத்தகைய கருமத்தினால் மாத்திரமே எமக்கு நல்ல சுகமும் சாசுவதமான சாந்தியும் இடைக்கும் எங்கள் கர்மவினைகள் தீரும் முறையில் களங்கங்கள் நீங்கும் வகையில் நன்மைகள் எமக்குக் கிடைக்கும் இன்றைய சமூதாயத்தில் காணப்படும் தோஷம் தான் இது நாம் விரும்புவது என்னவென்றால் பத்தாயிரத்தில் பத்துப்பேராவது தங்கள் சொந்தக் கருமமானாலும் சமூதாயத்திற்கு ஆற்றுகிற சேவையானாலும், அக்கருமம் எதுவானாலும். அதனை அந்தரங்க சுத்தியோடு செய்ய வேண்டும். என்பதாகும்.

எங்கள் செயல்கள் மற்றவர்களுக்கு விளங்காத பட்சத்தில் புகழ்ச்சியும் வரலாம். இகழ்ச்சியும் வரலாம் அங்கே நோக்கம் சுத்தமானதாக - சுயநலமற்றதாக - அந்தரங்க சுத்தி யோடு கூடியிருக்கும் பட்சத்தில் இந்தப் பத்துப்பேருடைய நற்செயல்கள் மாத்திரம் போது மானவை: அவை பத்தாயிரம் பேருடைய உயர்வுக்கும், சுகத்துக்கும் காரணமாய் அமைந்திடும்.

புராண இதிகாசங்கள், எத்தனையோ, நன்நெறி ஊட்டும் சிறுகதைகள் பலவற்றைக் கொண்டுள்ளன. கிளிப்பிள்ளைப் பாடம் படிப்பவர்கள், இத்தகைய நூல்கள் எவ்வாறு கற் றாலும் பயனடைய முடியாது அக்கதைகள் கொண்டுள்ள உட்பொருளை நாம் ஆழ்ந்து படித்து உணரவேண்டும்.

மனம் உணர்ந்தால் மட்டும் போதாது; புத்தி உணர்ந்தால் போதாது எங்களுடைய எழுபத்தாயிரம் நாடி நரம்புகளுக்கூடாக அவை உணரப்பட வேண்டும் எமது சொல், செயல் ஜெபதியானம் எதுவாயினும் அதை நன்றாகப் பொருளுணர்வுடன் கூடிச் செய்ய வேண்டும். அரைகுறையாய் நாம் கருமம்செய்தால் பலனும் அவ்வாறே குறைவுடையதாக இருக்கும். இறைவன் நாமத்தைப் பொருளுணர்வோடு கூடி, செறிவோடு கூடி ஒரு தடவை சொல்லும் பட்சத்தில் அது எமக்கு ஓராண்டு முழுவதும் நலம் செய்யவல்ல பலனை உண்டாக்கும்.

மாயை என்பது தாய், தந்தை, சகோரத, சகோதரிகள் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் முதலியவர் களிடம் ஒருவனுக்கு உண்டாகும் பாசமாகும். எல்லா உயிர்களிடமும் சமமாகப் பரவும் அன்புக்குத் தயை என்று கூறுவர்.

- இராமகிருஷ்ண பரமஹம்சர் -

# விநாயகர் வழிபாடு

பிரதேச கல்வி அலுவலகம்
ஈச்சிலம்பற்று.

சைவப்புலவர்
**அ. பரசுராமன்**
உதவிக்கல்விப்பணிப்பாளர்

**"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு'**

இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கும் போதும், முதலில் விநாயகரை வணங்குவர் விநாயகர் என்றால் வி + நாயகர் என விரியும். "வி" என்பது இல்லை நாயகர் தலைவன், ஆகவே விநாயகர் என்று கூறும் போது தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத ஏகநாயகன் எனப் பொருள்படும், சிவகணங்களுக்கெல்லாம் முதல்வன் கணநாதன், சிவனுக்கும், உமைக்கும் விவாகம் நடந்தபோது, விநாயகரைச் சாட்சி வைத்தே திருக்கல்யாணத்தைச் செய்தனர் என வேதங்கள் கூறுகின்றன.

விநாயகர் ஆதி, அநாதியான பிரணவ வடிவினர், அகார, உகார, மகார ஒலிகளில் வரிவடிவமான "ஓம்" என்பதே பிரணவம். சிவத்திலிருந்து நாதமும், சக்தியிலிருந்து விந்துவும் சேர்ந்ததே விநாயகர். நாதத்தின் வடிவம் நீளமான தடி போன்றது. விந்து வட்ட வடிவமானது இவை இரண்டும் சேர்ந்தே "உ" பிள்ளையார் சுழி இதனை நம் அருணகிரிநாதரும் "நாதவிந்து கணாதி நமோநம" என்றார். அநாதியானதும் உலக உற்பத்திக்கு மூல காரணமுமான பிரண வத்தைக் குறிப்பிட்டார். விநாயகரின் வடிவம் ஆணும் பெண்ணும் சேர்ந்த வடிவம் கொம்பு உள்ள இடப்பக்கம் ஆண், கொம்பில்லாத வலப்பக்கம் பெண் இன்றும், விநாயகர் நம் உடம்பிலுள்ள ஆறு ஆதாரத் தானங்களில் மூலாதாரத்தில் ஆனந்த மயகோச அதிபதியாக விளங்குகின்றார்.

விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரனுக்கு யானைமுகம், ஒரு கொம்பு, இரண்டு செவி, மூன்று விழி, நான்கு புயம், ஐந்து கரம், பரஞானம், அபர ஞானம் என்னும் இருபாதங்கள் பிரணவப் பொருள் அவருடைய பெரிய வயிற்றில் அண்டசராசரங்களும் அடங்கியிருக்கின்றன இவர் தன் ஐந்து கரங்களாலும் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பஞ்ச கிருத்தியங் களையும் செய்கின்றார். விநாயகர் வெல்வினையை வேரொடு அறுத்துவிடுவார் என்பதை "விநாயகனே வெல் வினையை வேரறுக்க வல்லான் - விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே விண்ணுக்கும், மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினால் கண்ணிற் பணியின் கனிந்து."

என்னும் கபில தேவரின் மேற்படி பாடலின் மூலம் அறிகின்றோம்.

மேலும் பிள்ளையாருக்கு கணபதி விக்னேஸ்வரர், விநாயகர் போன்ற மறு பெயர் களும் உண்டு விநாயகர் மூலாதார சக்தி உருவினர் என்றும், பிரணவம் என்ற ஓங்கார வடிவினர் என்றும், அவருடைய துதிக்கை ஓங்காரத்தையே குறிக்கும். துதிக்கையை அவருடைய ஐந்தாவது கையெனக் கொள்வதனால் அவரை ஐங்கரன் என்று கூறுவர். கணபதி அறிவுக்கும், வீடுபேற்றுக்கும், உரிய கடவுள் எனப்படுவர். பதினெட்டுக் கணங்களுக்குத் தலைவர் கணபதி என்று கூறுவதுமுண்டு விநாயகர் என்பது தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாத பரம்பொருள் என்கின்ற "விநாயகர்" என்னும் இப்பெயர் அவருக்கே சிறப்பாக உரியதொன்றகும்.

மேலும் கணபதிக்கு ஏகதந்தன் என்ற ஒரு பெயரும் உண்டு. ஒன்றைக் கொம்பன் என்பது அதன் கருத்து. வியாச முனிவர் பாரதத்தைச் சொல்லிக்கொண்டு போக கணபதி அதை எழுதினார். இடையில் எழுத்தாணி உடைந்து விட்டது. ஆனால் கணபதி எழுதுவதை நிறுத்தவில்லை. தனது தந்தத்தில் ஒன்றை ஒடித்து அதனை தொடர்ந்து எழுதி முடித்தார். முறித்தெடுத்த தந்தத்தை வலது கரத்தில் பிடித்துள்ளார். ஒரு நல்ல காரியத்தைச் செய் வதற்காகத் தம்மிடமுளள சிறந்த ஒன்றைத் தியாகம் செய்தார் தியாகத்தின் மூலமே செயற் கரியதைச் செய்து சாதிக்கமுடியும் தியாம் செய்யாது யாரும் மேலோர் ஆனது கிடையாது ஓர் உயர்ந்த காரியத்தின் பொருட்டு ஏகதந்தன் ஆனார் கணபதி

விநாயகர் அறிவின் இருப்பிடம் அவரை வழிபட்டால் ஞானம் உண்டாகும். அவர் எங்கும் எழுந்தருளி இருப்பவர் அவரை வழிபடுதல் இலகு அவரை மரத்தடியிலும் குளக் கரையிலும், ஆற்றங்கரையிலும் மூலைமுடுக்குகளிலும் வழிபடலாம். மஞ்சள் மாவினாலேனும், சாணத்தினாலேனும் சிறிதாக லிங்கம்போல உருட்டி வைத்து எல்லாக்கிரியைகளாலும் நாம் வணங்குகின்றோம். புராணங்கள், சாத்திரங்கள் முதலிய நூல்களில் விநாயகர் வணக்கம் முதலில் கூறப்பெற்றிருப்பதை நாம் அறிகின்றோம். மற்றும் மார்கழி மாதத்தில் வீட்டு வாசலிற் பிள்ளையாரை மஞ்சளினால் அல்லது சாணத்தினால் பிடித்து சிறப்பாக பூசணிப்பூ வைத்து வணங்குவதைக் காணலாம். பிள்ளையார் பிடிப்பதற்கு எப்பொழுதும் இல்லாத பொழுது அறுகம் புல்லை அவருக்கு அறிகுறியாக வைத்து வணங்குவார்கள். இவ்வாறாக விநாயகர் வழிபாடு எல்லோருக்கும் எளிதாக அமைகிறது.

விநாயகப் பெருமானின் அருட்செயல்கள் பலவற்றைப் புராணங்கள் கூறுகின்றன. அகத்தியரது கமண்டலநீரைக் காகவடிவில் வந்து கவிழ்த்துக் காவேரி நதியை உண்டாக் கினார். அம்மை அப்பனை வலம் வந்து மாங்கனி பெற்றார். கயமுகன் என்னும் அசுரனைக் கொன்று அவனைத் தம் வாகனம் ஆக்கினார். திருமாலுக்கு உண்டான சாபத்தைப் போக்கி யருளினார். ஒளவையாரை "விநாயகர் அகவல்" பாடச்செய்து கயிலை சேர்ப்பித்தார். இன்னும் தக்கன், இந்திரன், மன்மதன், சந்திரன், இராவணன், பாண்டவர்கள், விக்கிரமாதித்தன், மனைவி இலக்கண சுந்தரி, மெய்கண்ட தேவர், நம்பியாண்டார் நம்பி முதலியோர் அவரை வழிபட்டு இட்ட சித்திகளைப் பெற்றனர்.

கணபதி பற்றிய புராணக் கதைகள் பல உண்டு அவற்றுள் ஒன்றினை இங்கு தருகின் றேன். ஆதியில் கஜமுகாசுரன் என்பவன் இறவாவரம் பெற்று தேவர்களை எல்லாம் அடக்கி ஒடுக்கித் துன்புறுத்தினான். தினமும் ஒவ்வொரு நாளும் காலை, மதியம், இரவு மூன்று வேளை யும் தனித்தனி ஆயிரத்தெட்டுத் தோப்புக்கரணம் போடும்படி பணித்தான் இதனால் வேதனை யடைந்த தேவர்கள் சிவபெருமானை வேண்டுதல் செய்தனர் . அவரும் பிரணவப் பொருளான விநாயகரைத் தோற்றுவித்தார். விநாயகர் கஜமுகனை எதிர்த்தார். அவன் விட்ட ஆயுதங்களை யெல்லாம் அழித்ததார். அவர் விட்ட படைக் கணங்களும் அவனை ஒன்றும் செய்யவில்லை. அவன் சாகாவரம் பெற்றவன். உடனே விநாயகர் தனது தந்தத்தை முறித்து கஜமுகாசுரன் மேல் ஏவினார். அவன் பயந்து நடுங்கி ஓர் சிறிய மூஷிகம் (எலி) ஆனார். விநாயகரும் அவ் எலியின் மேல் அமர்ந்து அதை அடக்கித் தனக்கு வாகனமாக்கி " ஆகுவாகனர்" என்னும் பெயரையும் பெற்றார்.

தேவர்கள் " மூஷிக வாகன மோதக அஸ்த " என வணங்கினர். விநாயகர் மகிழ்ந்தார். தாங்கள் கஜமுகாசுரனுக்குப் போட்ட தோப்புக்கரணத்தை விநாயகப் பெருமானுக்குப் போட விரும்பினர். அவரும் மூன்று முறை தோப்புக்கரணமிட்டால் போதும், என்று கூறினார். அவர்களும் அவ்வாறு செய்து அவர் அருளைப் பெற்றனர். நாமும் விநாயகருக்கு மூன்று முறை தோப்புக் கரணம் போட்டு வணங்க வேண்டும். அவர் அருளைப் பெற வேண்டும்.

வியாச முனிவருக்கு பிரமதேவன் பாரதக்கதையை அறிவித்து அதை மகா மேரு மலையில் எழுதும்படி கூறினார். வியாச முனிவரும் விநாயகரை வணங்கினார். அவர் அருள் கிடைத்தது. வியாசமுனிவரும் பாரதக்கதையைக் கூற, விநாயகப் பெருமானும் தான் கஜ முகாசுரனை வதைக்க முறித்த தந்தத்தினால் மகாமேரு மலையில் எழுதி உதவினார்.

பெரிய முனிவர்களுக்கும், விநாயகர் அருள் புரிந்தார். தேவர்களுக்கும் உதவினார். தான் வளர்த்த மலர்க்கா மழையின்றி வாடியதால் இந்திரன் விநாயகரை வழிபட்டான் அவரும் அவர் மேல் இரக்கம் கொண்டு, காக்கை வடிவாகச் சென்று அகத்தியர் கமண்டலத்தில் கொண்டு வந்த கங்கை நீரைத் தன் அலகினால் கவிழ்த்துக் காவேரி நதியை உண்டாக்கி இந்திரனது பூஞ்சோலைக்கு நீர் பெருகச் செய்தார் விநாயகர்.

சிவபெருமான் முப்புர அசுரர்களை அழிக்கப் புறப்பட்ட போது, அவர் விநாயகப் பெருமானை நினைக்காதபடியினால் அவர் ஏறிய தேரில் அச்சையே முறியச் செய்தார். பின் சிவபெருமான் பிரணவப் பொருளான ஐங்கரனை வணங்கித் தேரில் ஏறி முப்புரத்தை அழித்தார்.

இதை நம் அருணகிரிநாதரும் தனது திருப்புகழில் ,

"முப்புரமெரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிவீரா" என்று விநாயகப் பெருமானின் வீரத்தின் பெருமையை விளக்கினார்.

ஔவைப் பிராட்டியாரை விநாயகப் பெருமான் கைலாயம் அனுப்பியபோது யானையிலும், குதிரையிலும் முறையே ஏறிவந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமான் நாயனாரும் தங்களுக்குப் பின் புறப்பட்ட ஔவையார், தங்களுக்கு முன் கைலாயம் வந்து சேர்ந்த அதிசயத்தைக் கண்டு வியந்த பொழுது ஔவைப்பிராட்டியாரும் விநாயகப் பெருமானை அன்போடு வழிபட்டார். இதனால் எல்லோருக்கும் எல்லா அருளும் கிடைக்கும்.

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானை வழிபட்டால் எல்லா நன்மையும் உண்டாகும். நாமும் அவரைத் திரிகரண சுத்தியோடு வழிபட்டு அருள் பெறுவோமாக.

"மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எழுதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்"

# மனம் கவர்ந்த மூன்று ஒளிகளின் மூன்று பொன்மொழிகள்

**மா. சி. சிவதாசன்**
ஆசிரியர்
இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



<u>ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்</u>

அறிவோடு, அன்போடு "உன்னிடம் சரணாகதி செய்கின்ற பான்மையைத்தா" என்று இடைவிடாது தேவியிடம் பிரார்த்திக்க வேண்டும் பிரார்த்தனையின் மூலம் முதலில் உருவும் குணமும் பெற்றவர்களான என் அம்பிகையை அடைய முயல்.க பிரார்த்தனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்தால், சிறிது கால தாமதமாயினும் சரி அம்மா நிச்சயம் அருள் பாலிப்பாள். நான் உறுதி கூறுகிறேன்.

<u>தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி</u>

உலக ஆசைகள் மனத்தை மேக மூட்கமாகக் கவ்வுவது உண்மை. ஆனால் மேகத்தை அடித்து விரட்டும் காற்று ஒன்று உண்டு. பகவான் நாமமே அந்த காற்று .

<u>சுவாமி விவேகானந்தர்</u>

வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதை விடத்தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் குறிப்பாக மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்து போவது மிகவும் நல்லது.

# பிள்ளையார்

செல்வன் - சந்திரசேகரம். மயூரேசன்

அம்மையப்பனின் மூத்த மைந்தன் கணபதி, தன் சிறு பராயத்தில் பெண் பூனை ஒன்றைத் துரத்திப் பிடித்து விளையாடியபோது, பூனையின் முகத்தில் காயம் ஒன்று உண்டாயிற்று. இக்காயம், பெண் உலகம் அனைத்தும் தன் வடிவமாகக் கொண்ட அவனது அன்னை உமாதேவியின் முகத்தில் ஏற்பட்டிருப்பதைக் கண்டு உண்மையை அறிந்து கொண்ட கணபதி, தான் என்றும் பிரமச்சாரியாகவே இருக்கத் தீர்மானித்தான். அதற்கேற்ப அவன் என்றும் அம்மையப்பனின் பிள்ளையாகவே இருப்பதனால், அவனுக்குப் பின்னையார் என்னும் பெயர் உண்டாயிற்று.

மற்றய தெய்வங்களுக்கு ஏற்ற சக்தி சொரூபம் அமைவது போன்று பிள்ளையாருக்குப் பெண்பாகம் இல்லை. சித்தி, புத்தி என்ற இரண்டு சக்திகளை அவனோடு இணைத்துக் கூறுவது, அவன் மகிமையை விளக்குவதாகும். வாழ்க்கையில் விநாயக தத்துவத்தை அனுட்டித்து வருபவர் எடுத்த கருமமெல்லாம் சித்தி பெறுவார்கள், இலாபம் உண்டாகும், அவர்களுக்கு புத்தி வளர்ந்து கொண்டிருக்கும் இதுவே அங்கு விளக்கப்படும் தத்துவம்.

## எலியின் மேல் பிள்ளையார்

ஆத்மா, பெரியதிலெல்லாம் மிகப்பெரியது மட்டுமல்ல, நுண்ணியதிலெல்லாம் அது மிக நுண்ணியதுமாகும். ஆத்மா வடிவங்களில் கட்டுப்படுவதில்லை சிறிய உடலில் இருப்பது சிறிய ஆத்மா வென்றும், பெரிய உடலில் இருப்பது பெரிய ஆத்மாவென்றும் எண்ணுவது தவறு அறிவு வளர்வதால் மூளைக்கோ அல்லது உடலுக்கோ பாரம் அதிகரிப்பதில்லை ஆத்ம சொரூபத்தில் ஒவ்வொரு ஜீவனும் அளப்பரிய பெரிய பொருள் ஆகும். தன்மையது. இக் கோட்பாட்டை பெருச்சாளி வாகனன் புகட்டுகின்றான்.

## யானை முகம்

யானையின் காது, தலை, துதிக்கை, ஆகிய மூன்றும் சேர்ந்து "ஓம்" என்பதன் பொது இயல்பாகிறது. எனவே யானை முகத்துடைய கணபதி ஓம்கார மூர்த்தியாகத் திகழ்கிறான்.

## ஐந்து கரம்

பொதுவாகத் தெய்வ சொரூபங்களுக்கு நான்குகரங்களைச் சிருஷ்டித்து, அவை மானுடரைவிட எதிலும் மிக்கார் என்பதைக் காட்டியுள்ளார்கள். கணபதி ஐந்து கரங்களைப் பெற்று ஏனைய தெய்வங்களிலும் மிக்கான் ஆகுகின்றான்.

## அவன் கரங்களில் காணப்படுவனவும் விளக்கமும்

| | | |
|---|---|---|
| அங்குசம் | - | ஜீவர்களை நல்வழியில் நடாத்தும் கருவி |
| பாசம் | - | தீவினையாளரைப் பாசத்தில் வீழ்த்தித் துன்பத்தில் ஆழ்த்துவது |
| தந்தம் | - | எழுத்தாணி - கல்வி கற்றல் |
| ஜபமாலை | - | சிந்தனை சக்தியை வளர்த்தல் |
| மோதகம் | - | உயிர்வாழ உணவு |

## விரித்து வைத்த அகன்ற காதுகள்

பேசுவதைக் குறைத்துக் கேட்பதை அதிகப்படுத்தி நல்லறிவை வளர்க்க வேண்டிய அவசியத்தைக் காட்டி நிற்கின்றன.

## ஒற்றைக் கொம்பு (ஏகதந்தன்)

ஒடித்து எழுத்தாணியாக உபயோகிக்கப்பட்டது. ஒரு நல்ல காரியத்தின் பொருட்டு தன்னிடம் இருக்கும் சிறந்த ஒன்றைத் தியாகம் செய்து மேலோர் ஆகவேண்டும் என்பதை இது விளக்குகின்றது.

## உச்சிஷ்ட கணபதி

எச்சில் இலை எறியப்படும் இடத்தில் எழுந்தருளி இருப்பவன் இவன். சுத்தம் அசுத்தம் ஆகிய இரண்டு நிலைகளையும் கடந்த நிலைக்குப் போவது நமது குறிக்கோள். இதனையே உச்சிஷ்ட கணபதி உபாசனை நமக்குப் புகட்டுகிறது.

இங்கு புறம் காட்டித் தோப்புக்கரணம் போடப்படுகிறது. நீக்கமற எங்கும் நிறைந்துள்ள பொருளுக்கு முன்புறம், பின்புறம் என்பன இல்லை என்பதனை உணர்ந்து அவ் உயர்நிலைக்கு நமது மனத்தை உயர்த்துவதற்கே இவ்விதம் புறம் காட்டி வணங்கப் படுகின்றது இவ்வழிபாடு இன்றும் இந்தியாவில் இருந்து வருகிறது.

இவ்விதம் பிள்ளையாரின் வெவ்வேறு வடிவங்களும், வெவ்வேறு தத்துவங்கள் மூலம், எம்மை நல் வாழ்வு வாழவைத்து, ஆத்ம ஈடேற்றத்துக்கே வழி வகுத்து நிற்கின்றன.



# இசையும் கலையும்



**செல்வி நகுலேஸ்வரி நற்குணம்**

சிறந்த கலைகளாகிய லலிதகலைகளில் மிகவும் மேன்மையானது இசைக்கலை. இந்த இசையானது மனதை இளகச் செய்கிறது; கல்லைக் கனியாக்குகிறது. தாலாட்டுப் பாடல் பாடினால் தூக்கம் வருகிறது. சோக கீதம் பாடினால் அழுகை வருகிறது. கடவுள் பக்திப் பாடலில் நெஞ்சம் நெகிழ்கிறது.

நமது கடவுள் வடிவங்கள் அனைத்துக்குமே இசை ஆதார வடிவமாக நிற்கிறது. வீணை இல்லாத கலைமகளா? மத்தளம் இல்லாத நந்தியா, புல்லாங்குழல் இல்லாத கிருஷ்ணனா? நாட்டியம் ஆடாத நடராஜனா? விஞ்ஞானத்தில் கூட சிலவகையான அலைகள் உடம்பை ஆட்டிப்படைக்கின்றன. என ஒரு உண்மை உண்டு பிராமணர்கள் நான்கு வேதங்களையும் ஓதும் போது நான்கு வகையாக ஓதுகிறார்கள். அந்த ஒலி அலைகள் வான வெளியையும் சுவாசிக்கின்ற காற்றையும் சுத்தப்படுத்துகின்றன. ஓம் என்ற பிரணவ மந்திரத்தை கூட்டாக உச்சரிக்கும் போது அந்த ஒலி இயற்கையில் எதிரொலிக்கிறது. இடைவிடாத கோயில் மணி ஓசையில் காற்றே சங்கீத மயமாகி விடுகிறது.

இன்னும் வீணை, வயலின், சித்தார் போன்ற நரம்புக் கருவிகளில் பிறக்கும் இசை காது நரம்புகளைச் சுத்தப்படுத்தி இதயத்தை மென்மையாக்குகிறது. பூபாளம் பாடிக்கொண்டே பொழுது விடிகிறது. ஆனந்த பைரவி பாடிக்கொண்டே உலகம் இயங்குகிறது. நீலாம்பரி பாடிக்கொண்டே தூக்கம் போகிறது. அமிர்தவர்ஷினி பாடினால் மழை பொழிகிறது, புன்னாகராளி பாடினால் பாம்பு கூட படம் எடுத்து ஆடுகிறது அறிவற்ற ஜந்துக்களையும், அசையாப் பொருள்களையும் கூட இசை தன் வசப்படுத்திக் கொள்கிறது. அந்த இசையின் மூலமும் நாட்டியத்தின் மூலமும் இயற்கையாகவே ஒரு நிம்மதியை மனிதர்கள் பெற முடியும். ஆனால் இசையின் சுருதிசுத்தமாக இருக்க வேண்டும்.

இசையானது கடவுள் வழிபாடு செய்வதற்கும் கடவுளை அறிவதற்கும் முக்கிய சாதனமாக விளங்குகிறது கடவுள் வடிவங்கள் அனைத்துக்கும் இசை ஆதார வடிவாக நிற்பதை பார்க்கும் பொழுது இசைக்கலையானது தெய்வீகமானது என்பது தெளிவாகின்றது. பண்ணென்ற இசை பாடும் அடியார்கள் என்று சம்பந்தர், தமிழோடிசை பாடல் மறந்தறியேன் என்று அப்பர், ஏழிசை இனும் பயனாய் என்று சுந்தரர், நாதவிந்து கலாநிதி நமோநம" என்று அருணகிரி நாதர் போன்றோர் இயற்றிய பாடல்கள் இறைவன் இசைவடிவினன் என்பதையும் இசைப்பிரியன் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

இசை பயிலுவதினால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன இன்னும் அறிவு புத்திக் கூர்மை, கற்பனாசக்தி, ஞாபக சக்தி நல்லொழுக்கம் முதலியவைகளும், இசையை பயிலுவதானால் பல தேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கும் படியான சக்தி அதாவது உலக ஐக்கிய பாவத்தை உண்டாக்கும் சக்தி நம் இசைக்கு உண்டு. அதனை யாரும் மறுக்கவோ மறக்கவோ மு டியாது

அடுத்து இசையில் அடங்கும் சில ராகங்களை எடுத்து நோக்கின், திருமண வீட்டில் தாலி கட்டும் போது வாசிக்கப்படுவது ஆனந்த பைரவி . அந்த நேரத்திற்கு அது எவ்வளவு பொருத்தமான ராகம் அந்த ராகம் காதில் விழும்போதே கவலைகள் மறந்து விடுகின்றன மேல் நாட்டு இசை என்ற பெயரில் டபரா டம்ளர்களைப் போட்டு அடித்து உயிரை வாங்குகிறார் கள். இப்போது வாத்தியங்களில் கூட அமங்கல வாத்தியங்கள் உண்டு. அவை தாரை, தம்பட்டை, கொம்பு முதலியன. அவை போர் வீரனையும் யானைகளையும் கிளப்பி விடவே அந்நாளில் அவை பயன்படுத்தப்பட்டன. ஊதுவத்தி வாசனையில் கூட மங்கலம், அமங்கலம் என்ற இரண்டு வகை உண்டு. ஒரு வகையான ஊதுவத்தி இறந்து போனவர்களின் சடலத் தில் அருகே வைக்கப்படுவது. மற்றொன்று சுபகாரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவது முகாரி ராகம் கேட்பவனுக:கு நாளைய பொழுதைப் பற்றிய கவலையை எழுப்புகிறது. இன்ப ராகங் கள் நம்பிக்கையை உண்டாக்குகின்றன.

இன்னும் ஆழ்ந்த கவலையுடனும் துக்கத்துடனும் நாளாந்தம் அல்லல்பட்டு கிடக்கும் ஒருவனுக்கு இசைப்பாடல்கள் பக்திப்பாடல்களைக் கேட்கும் பொழுது சுகமான சங்கீதம் சுகமான பாடல் நெஞ்சுக்கு நிம்மதியைத் தருகிறது. இவ்விதமான வல்லமை கொண்ட இந்த தெய்வீக கலையை நாம் பயன்பெற்று வையகப் பயன்பெற முயற்சிப்போமாக.

# கருணை தாராய்

**த. ஜெயகாந்த்**
ஆண்டு - 09 சி

திருமலை நகரில் இன்று
திறம்பட வடித்தெடுத்த
சிலவகை கோயில் தன்னுள்
சீரிய எங்கள் கோயில்

பள்ளிக்குள் தனையடக்கி
பணிவுள்ள மாணவர் முன்
கருணையே புரிந்து நிற்கும்
கற்பக தருவே கோயில்

பண்புள சிறுவர் தன்னை
பரீட்சையில் சித்தி காண
வைத்தது கோயில் ஒன்றே
சித்தி விநாயகர் கோயில்

பரீட்சையில் சித்தி பெற்று
பலதுயர் அகலவெண்ணி
பெரியோரால் அமைக்கப் பெற்ற
பெரும் விநாயகரின் கோயில்

கல்வி நற் பள்ளிதன்னில்
கலையழகுடைய கோயில்
விருப்போடு வணங்கும் நாங்கள்
மேம்படக் கருணை தாராய் !

# காணாபத்தியம்

**சிவபாலன் சிவதுஷாந்தன்**
ஆண்டு - 10 ட

இந்து சமயத்தவர் அறுவகைப்படுவர். அவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவர்கள், சக்தியைக் கொண்ட சாக்தர்கள், பாற்கடலில் பள்ளி கொள்ளும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவர், விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்ட காணபத்தியர், முருகனை முழுமுதலாகக் கொண்ட கௌமாரர், சூரியனை முழுமுதலாகக் கொண்ட சௌரர்கள் ஆகியோரே அவர்கள். இவற்றுள் காணபத்தியத்தை நாம் நோக்குவோம்.

கணபதியை முழுமுதலாகக் கொண்ட சமயம் காணபத்தியம் என்பதாகும். கணங்களின் தலைவனாகிய கணபதியை வழிபடும்போது, தோப்புக்கரணம் இடப்பட்டுத், தலையில் மூன்று முறை குட்டி வழிபாடு இயற்றப்படுகிறது. இவ் வழிபாட்டுக்குப் புராணக் கதை ஒன்றும் உண்டு. கஜமுகாசுரன் மக்களைத் துன்புறுத்தி வந்தான். தனக்கு முன் மக்கள் தங்கள் தலையில் குட்ட வேண்டும். தோப்புக்கரணம் இடவேண்டும். என்றெல்லாம் கூறி வந்தான். அவனது கர்வத்தைப் பொறுக்காத கணபதி அவனைப் பெருச்சாளி ஆக்கித் மக்களுக்கு வாழ்வு அளித்தார். இதனால் மக்கள் தாமாகவே விரும்பி தமது விருப்பத்துக்குரிய விநாயகப் பெருமானுக்குத் தோப்புக்கரணம் இட்டும், சிரசில் குட்டியும் வழிபாடு செய்கின்றனர். விநாயகர் வீற்றிருக்கும் இடங்களில் சிதறு தேங்காய் அடித்து வழிபடுகின்ற முறையும் காணப்படுகிறது. சிதறு தேங்காய் அடிக்கும் போது எமது தீய பண்புகள் விடை பெறட்டும் என்று உள்ளத்தில் எண்ணிச் சிதறுதேங்காய் அடிப்போரும் உள்ளனர்.

மேலும் ஆகம முறைப்படி கோயில்கள் கட்டுவது, நித்திய நைமித்திய பூசைகள் செய்வது என்பன கணபதித் தெய்வத்துக்கும் நிகழ்கின்றன. இத் தெய்வத்துக்கு விழாக்களும் விரதங்களும் கொண்டாடப்படுவதை நன்கு அறியலாம். விநாயக சதுர்த்தி, விநாயக ஷஷ்டி என்பன குறிப்பிடத் தக்கன. கணபதி விரதங்களிலே, திருவெம்பாவையின் ஆரம்ப காலத்தையொட்டி நிறைவேறும் பெருங்கதையும் முக்கியமான விரதமாகும். ஓம் என்ற பிரணவ மந்திரம் விநாயகனின் மந்திரமாகும். இக் கடவுளுக்குப் படைக்கும் நிவேதனமாக கடலை, மோதகம், கரும்பு, வெல்லம், ஆகியன காணப்படுகின்றன. குறிப்பாக விநாயகக் கடவுளை ஆகமம் சாராத முறையிலும் மக்கள் வழிபடுகின்றனர்.

விநாயகருக்குப் பற்பல பெயர்கள் மக்களால் வழங்கப்பட்டு வருகின்றன. தும்பிக்கை நீங்கலாக நாற்கரன் எனவும் தும்பிக்கையுடன் ஐங்கரன் எனவும் அழைக்கப்படுவதுடன், வினைகளை நீக்குவதால் விக்கினேஸ்வரன் என்றும், கணங்களுக்குத் தலைவன் என்பதால் கணபதி என்றும், பிள்ளைகளுக்கு உரியவன் என்பதால் பிள்ளையார் என்றும், பெரிய வயிற்றினையுடையவன் என்பதால் தொப்பையப்பன் எனவும் அழைக்கப்பட்டு வழிபடப் பெறுகின்றார்.

எக் காரியத்துக்கும் முன்னிற்பவர் என்ற நம்பிக்கை இம் மதப் பிரிவினரிடையே காணப்படுகிறது. இதன் விளைவாகவே இன்று கூட தெருவோரங்களில் உள்ள ஆலமரத்தின் கீழ் கணபதியை வைத்து வழிபடுகின்றனர். எக் காரியத்தையும் செய்யு முன்னர் விநாயகனை வணங்கி ஆரம்பித்தால் எப்போதும் மங்களம் உண்டாகும்.

கோவில்களில் சிவாச்சாரியார் வழிபாடு ஆரம்பிக்கும் வேளையில் விநாயகருக்குப் பூசை செய்த பின்னரே பூசையை ஆரம்பிக்கிறார். மேலும் சிவாலயங்களில் விநாயகருக்கென தனியாக ஓர் இடம் ஏற்படுத்தி அங்கு அவருக்குப் பூஜை, கிரியை, வழிபாடு நடைபெறுவதைக் காணக் கூடியதாயுள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் பெருந்தொகையான விநாயகர் ஆலயங்கள் அமைந்திருப்பது மக்கள் விநாயகர் பால் கொண்டுள்ள உயர் ஈடுபாட்டினைக் காட்டுவதாக உள்ளது. எல்லாத் தெய்வங்களின் அம்சங்களையும் ஒன்று திரட்டிய வடிவமாக விநாயகன் வடிவம் உள்ளது என்பதும் ஈண்டு நோக்கற் பாலதாகும்.

# விநாயக விரதங்கள்

தர்மராஜா முரளிதரன்
ஆண்டு 10ஊ

சமயங்கள் எல்லாவற்றிலும் கடவுள் வழிபாட்டைச் சிறக்கச் செய்வன விரதங்களே. விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள். சிவபெருமானை குறித்து அனுஷ்டிக்கும் விரதங்கள் பேரின்பம் பயப்பன. உமாதேவியார், பிள்ளையார், முருகன் ஆகிய கடவுளரின் விரதங்கள் உலகியற் சிறப்பினைத் தருவன ஆகும். அத்துடன் இறையருளைப் பெறுவதற்கு எல்லோரும் இலகுவாக கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறையில் சிறந்ததும் விரதமாகும்.

விரதமாவது யாது? மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் மெய் அன்போடு விதிப்படி விதிக்கப்பட்ட விசேட கோட்பாடுகளிற்கு ஏற்ப வழிபடுதலாகும். விரதம் அனுட்டிக்கும் போது மூன்று பொழுதும் உண்ணாது இருத்தல் உபவாசம் எனப்படும். சிந்தனை, சொல் செயல் மூன்றும் தூயனவாய் ஒன்றிணைந்து விரதத்தின் வழி இறை அருளைப் பெறுகின்றோம்.

விரதங்கள் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், கந்த விரதம் என பல வகைப்படும். அவற்றில் விநாயகருக்குரிய விரதங்களை நோக்குவோமாயின், அவையாவன விநாயக சதுர்த்தி, சித்தி விநாயக விரதம், சங்கஷ்டஹர சதுர்த்தி, தூர்வா கணபதி விரதம் என்பனவாகும்.

முதலில் விநாயக சதுர்த்தியை நோக்குவோமாயின், ஆவணி என்றதும் முதலில் வருவது விநாயக சதுர்த்தியாகும். இந்துக்களிற்கு விநாயக பூசை எவ்வளவு முக்கியமோ, அந்தளவிற்கு சரிசமனாக ஆவணி மாதத்தில் சுக்கில பட்சத்தில வரும் சதுர்த்தி தினம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. சதுர்த்தி அன்று கணபதிக்கு இரட்டை அறுகம் புல்லாற் பூசை செய்தல் சிறப்பு. இவ்விரதத்தை அனுட்டிப்பவர் பகலிலே ஒரே ஒரு பொழுதை தவிர வேறு தருணத்தில் போசனம் செய்வது தகாத செயலாகும்.

இரண்டாவதாக சித்தியைத் தரும் சித்தி விநாயகர் விரதத்தை எடுப்போமாயின், இவ்விரதமாவது காரிய சித்தியைப் பெறவும், அவர்க்கோ அல்லது அவரின் பரம்பரைக்கோ ஏற்பட்ட அடாப்பழியை நீக்குவதற்காகவும் இவ் சித்தி விநாயக விரதம் நோக்கப்படுகிறது. கிருஷ்ண பகவான் இவ்விரதத்தை நோற்று பிரசனசித்தைக் கொன்றுசிய மந்தக மணியைத் திருடிக் கொண்டதாக நேர்ந்த பழியினின்று விடுபெற்றார். இவ் சித்தி விநாயக விரதம் அன்று களி மண்ணால் உருவம் செய்து, பிராணப் பிரதிஷ்டை முதலியன செய்து இருபத்தொரு வகை இலைகளாலும், இருபத்தொரு வகை பூக்களாலும், ஒற்றைப்படை அலகுள்ள இருபத்தொரு அறுகம் புற்களாலும் பூசித்து, இருபத்தொரு கொழுக்கட்டைகளை நிவேதனம் செய்வர். இரவில் சந்திரனுக்குப் பூசையும், அருக்கியமும் கொடுத்து விநாயகரின் அருளைப் பெறுவர்.

சங்கஷ்டஹர சதுர்த்தி விரதமானது சிறப்பாக நோய், கடன், சிறைவாசம் எனும் மகா கொடிய சித்திரவதை போன்ற அம்சங்களில் இருந்தும், வனவாசம் என்பனவற்றிலிருந்தும் தம்மை நிரந்தரமாக காத்துக் கொள்ள வேண்டி அனுஷ்டிப்பர். இதனைக் கிருஷ்ணர் தருமருக்கும், அவரது நான்கு அருமந்த தம்பியர்களுக்கும் வனவாச காலத்தில் அவர்கள் ஆற்றொணா துன்பம் அடைந்த காலத்தில் உபதேசித்ததாய் மகா பாரத வரலாறு கூறுகிறது. இப்பூசையானது கிருஷ்ண பட்ச சதுர்தி தினத்தன்று இரவில் சந்திரன் வான் வீதியில் உலாவர உதயமானவுடன் செய்யப்பெறும். ஆவணி மாதத் தேய்பிறைச் சதுர்த்தி இதற்கு மிகச் சிறந்ததாகையால் அன்றாவது பூசை செய்து வேண்டிய வரங்களைப் பெற்று வாழ்க்கையில் சிறப்படைவர்.

தூர்வா கணபதி விரதம் வளர்பிறைச் சதுர்தியில் சிறப்பாக ஆவணி மாதச் சதுர்த்தியிலோ, கார்த்திகை மாதச் சதுர்த்தியிலோ மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் அனுஷ்டிக்கப்படும். இவ்விரதத்தைச் சிறப்பாக சந்ததியை அடைவதற்கும், செல்வத்தைத் பெறுவதற்கும் நோற்பர்.

# சொல்லாததும் இல்லை! இல்லாமலும் இல்லை!

ஸ்ரீ வாகீசன்
ஆண்டு 12ஏ கணிதம்

எமது இந்து மதம் தோன்றிய காலமோ, தோற்றுவித்தவர்கள் யார் என்பதோ எமக்குத் தெரியாது. இதுவே எமது இந்து மதத்தின் பெருமை தரும் விடயமாகும். காலத்துக்குக் காலம் தோன்றிய பெரியோர்கள், இறைவனால் தமக்கு உணர்த்தப்பட்ட விடயங்களை மேலும் மேலும் இந்து சமயத்தில் இணைத்துக் கொள்வதும் ஒரு விசேட அம்சமாகும். எனின் அந்த இணைப்புகள் மிக அதிகமானவை என்பதல்ல.

எமது மதத்தை இந்துமதம் அல்லது இந்து சமயம் என அழைக்கின்றோம். ஆனால் எமது சமயத்தின் பண்டைக்காலப் பெயர் சனாதன தர்மம் - வைதீக மதம் என்பதே, தொன்மைச் சிறப்பானது; இறைவனால் உணர்த்தப்பட்டது என்றெல்லாம் உணர்த்தி நிற்கின்றது. இதனால் தான் எமது மதத்தை இறைவன் ஆன்மாக்களுக்கு அருளிய ஓர் ஆன்மீக வழிகாட்டியாகக் கருதுகின்றோம். இறைவனை நாம் பல பெயர்களால் அழைத்தாலும், இறைவன் ஒருவனே! நாம் வழிபடும் வடிவங்களில் வந்து இறைவன் எமக்கு அருள் புரிகின்றான். இறுதியாக நாம் ஒரேயொரு மூலப்பொருளிடமே வந்து சேர்கின்றோம் என உபநிடதங்கள் கூறுகின்றன.

எமது மதத்திற்கு வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் என்பவை மூலாதார மானவை. இவற்றை இறைவனே நேரடியாக ஆன்மாக்களுக்கு அருளினார். மற்றும் இந்து மதம் உருவ வழிபாட்டையே முக்கியமாகக் கொண்டுள்ளது. முன்பு இயற்கைத் தெய்வங் களை அக்கினி வளர்த்து ஹோமம் (ஓமம்), வேள்வி செய்வதே வழிபாடாகும். இந்துமதம் மனிதனின் வாழ்க்கை முறைகளைக் கூறி, அவற்றின் கடமைகளையும் கூறுகின்றது. பிரம்மச் சரியம், கிருகஸ்தம், சந்நியாசம், வானப்பிரஸ்தம் என்பன வாழ்க்கை முறைகளாகும். மனித னின் ஆன்மீக உணர்வுகளைச் சீர்படுத்தி அவன் சரியான பாதையில் செல்ல வழிவகுப்பது இந்து மதமாகும். மனிதனின் முத்திப்பேற்றை விட சமயத்தை அவன் வளர்த்துக் கொண்டு உலகிலே சிறப்பாக வாழ வழி வகுப்பது இந்துமதம் என்பது சாலப் பொருந்தும்.

மனிதன் அழியக் கூடிய பொருள்களில் நம்பிக்கை வைப்பதைத் திருத்திப் பரம் பொருள் மீது நம்பிக்கை அதாவது பக்தி வைக்க வேண்டியது அவன் கடமை என்று இந்து மதம் கூறுகின்றது. இப் பக்தி வழிக்கு அடிப்படையே நம்பிக்கைதான். பக்தி நெறியில் வாழ்பவன் மன அமைதி, மன ஒருமைப்பாடு, ஒழுக்கம் என்பவற்றை வளர்ப்பவன் என்பது பெரியார்களின் கருத்து.

மனிதன் தான் முற்பிறப்பில் செய்த கர்ம வினைகளால், நன்மை தீமைகளை அனு பவிக்கின்றான். இறைவன் பாதங்களைப் பற்றுதற்குச் சைவசமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களை வகுத்துள்ளது. இறைவன் - உலகம் - உயிர்கள் தொடர் பினைப் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் வெளிப்படுத்துகின்றன.


ஒவ்வொரு சமயமும் கூறும் உண்மைகள் முரண்பாடுள்ளனவாய் இருக்கின்றன. இருந்தும் தமது சமயமே உண்மையானவை என்று வாதாடுகின்றன. ஆனால் இந்து மதமோ எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, ஒற்றுமை காண முயல்கின்றது.

"அன்பே சிவம்" என்று திருமூலர் திருமந்திரம் கூறும். சைவசமயமும் இதையே கூறுகின்றது. நாம் இறைவனின் அருளைப் பெறுவதற்கு பிற உயிர்களிடத்தில் பலனை எதிர் பாராமல் அன்பு செலுத்த வேண்டும். இதுவே சைவ சமயத்தின் மேலான கோட்பாடாகும்.

வாழ்க்கையைப் பாழடிக்கும் வரட்டுத் தத்துவங்களை இந்துமதம் வரவேற்கவில்லை. மனிதனின் மிதமிஞ்சிய உணர்வுகளில் இருந்து விடுபட்டு இறைவனை அடைய வேண்டும் என்பதற்காக இந்துமதம் வாழ்க்கையைச் சாஸ்திரம், சம்பிரதாயம், சடங்கு, புராணநீதி, அவதாரக்கதைகள் எனப் பல்வேறுபட்ட சாதனங்கள் மூலம் மேம்படுத்துவதுடன், குடும் பத்தைக் கோயிலாக்கிப் பெற்றோரைத் தெய்வமாக்கி, குழந்தைகளைச் செல்வமாக்கி, கல்வியை ஒழுக்க நெறியாகக் காட்டுகின்றது.

பெண்மை உயர்வானது என இந்துமதம் கொள்கின்றது. காவிரி, கோதாவரி, கங்கை, யமுனை என்பவற்றை விசேட கிரியைகளுக்காக உச்சரிக்கும்போது பெண்மையாகவே கொள்ளப்படுகின்றன. கல்வி, செல்வம், வீரம் என்பனவும் பெண்மை அலைகளாகவே நவராத் திரி காலத்தில் போற்றப்படுகின்றன. உலகின் ஒவ்வொரு உயிரையும் புரிந்து கொண்டு மனிதன் வாழவேண்டும் என்பதற்கான மகத்தான வாழ்க்கை முறைகள் இந்து மதத்தில் காட்டப்பட்டுள்ளன.

"இந்துமதம் சொல்லாதது எதுவும் இல்லை"



"எந்த நாட்டு வீதிகளில் ஒரு பெண் தனித்து அச்சமின்றிப் போய்வர முடியுமோ அந்த நாட்டில்தான் உண்மையான சுதந்திரம் நிலவுகிறது."

-மகாத்மா காந்தி-

# இறைவன் இசை ஆலயம்

**திருமதி. தேவிகாராணி முருகுப்பிள்ளை**

உதவிக் கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்)

திருக்கோணமலை.

ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டுவது, இந் நாட்டின் நுண்கலைகளிலேயே தங்கியுள்ளது. கலைவளம் திகழாத எந்த ஒரு நாடும் சுபீட்சமாக இருக்க முடியாது. இக்கலைகளுள் முதன்மையானது இசைக்கலை. இசையினால், அகிம்சா தர்மம், சமாதானம், சாந்திநிலை, சமயம் போன்றவை ஒருங்கே வளர முடியும். சகல ஜீவராசிகளும் இசையினால் இன்புறுகின்றன. இறைவனை இசைய வைக்கும் அருஞ்சாதனம் இசை. பண்டைத் தமிழர், இசைக்கலையைத் தம்முயிரிலும் மேலாகப் போற்றி சுப, அசுப கருமங்களிலும் தேவாலயங்களிலும் விதிமுறைக்கேற்ப இடங் கொடுத்தனர்.

நாதத்தை அடிப்படையாகக் கொண்ட இசைக்கலை வேதங்கள் இசையுடன் பாடப்பட்ட கால முதல் வளர்ச்சியடைந்த வந்துள்ளது. இறைவன் இசை வடிவமாக இருக்கின்றான். என்பது ஒரு முதுமொழி. இறைவனை இசையினால் வழிபட்டனர் நம் முன்னோர்கள்..அன்பு பெருகி இதயம் நெகிழப் பாடும் இசைக்கு இறைவன் மிகவும் சமீபம். இசைத் தளையால்தான் இறைவனைக் கட்ட முடியும். இவ்வுண்மையை எமது புராணங்கள் எடுத்தியம்புகின்றன. அக்கால அரசர்களும் கூட இசை விற்பன்னர்களாக, நீதி வழுவா நெறி முறையில் மக்களைக் காத்து வந்தனர். இறைவனும் இவர்கட்கு மந்திரி போல் ஆங்காங்கு நீதிகளைக் கற்பித்தார் என வரலாறுகள் கூறுகின்றன.

இசையின்பத்தால் சகல சம்பத்துகளையும் பெற்றவன் இராவணன். இறைவனிடம் எவரும் பெற்றிராத ஈஸ்வரப்பட்டம், மந்திரவாள் என்பனவற்றையும் பெற்றான். இராவணாஸ்தம் என்ற யாழினால் எல்லோரையும் தான் இருக்குமிடம் தேடி வரச் செய்தவன். வேய்ங்குழலால் கண்ணன் மந்தைகளைக் கட்டுப்படுத்தினான். உதயணன் மதயானையை யாழ் வாசித்து அடக்கினான். வண்டிகளை இழுப்போரும், உழவர்களும், படகோட்டிகளும், வேறுவேலை செய்வோரும் இசையைப் பாடித்தம் வேலைகளைக் களைப்பேற்படாதவாறு செய்து வருகின்றனர்.

இசையால் எரித்தார்கள், மலையை உருக்கினார்கள், கர்வங்களைப் போக்கினார்கள், பட்ட மரங்களைப் பசுந்தளிராக்கினார்கள். தேவாரம் பாடிய நாயன்மார்கள் எலும்பைப் பெண்ணாக்கினர். விடம் செறிந்த பிள்ளைளை உயிர் பெறச் செய்தனர். சூலை நோயைப் போக்கினர். இறைவனைத் தூது விட்டனர். ஆற்றிலே எதிரேற ஏடு விட்டனர். இவ்வளவு அற்புதங்களும் இசையால் ஏற்பட்டன. கலாசாரம் வளர, வளர, இசையிலும் பாரிய வளர்ச்சி ஏற்பட்டதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இறைவன் நாத வடிவானன் அல்லவா? இறைவனை இசைப் பாடல்களால் துதித்தவர்கள் இதனையே வலியுறுத்தினார்கள். "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்று பாடிப் பரவுகிறார். சுந்தரர். "ஓசை ஒலியெலாம் ஆனாய் நியே" என்று அப்பர் உள்ளம் உருகுகின்றார் "வண்ணமர் வீணையினால்" என்று சம்பந்தர் வருணிக்கின்றார். இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை நாம் உணர்வதால் இசையைத் தெய்வீகக் கலை என்கிறோம்.

நாகரீகம் வளர முற்பட்ட காலத்தில் பலவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களையும் அறிந்திருந்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் குமரனை நினைத்துக் குரவைக் கூத்தாடிக் குதூ கலித்தனர். கற்கோயில், மரக்கோயில் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் கடவுளை நம்பிப் பக்தர்களாகி பக்திப் பரவசத்தில் பலவகைப் பாடல்களைப் பாடியும், வாத்தியங்களை மீட்டியும் பரவச நிலையில் ஆடியும், பாடியும் தங்களது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.

"தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க
தொம் தொம் என நந்தி மத்தளம் கொட்ட"

என்பதற்கு அமைய ஓவிய சிற்பங்களை ஆலயங்களில் நிறுவினர்.

ஆலயங்களில் ஓவியங்கள், சிற்பங்களை நிறுவியது மட்டுமன்றி, புராண வாயிலாக மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களை கோயில்களில் நடித்துக் காட்டுவதற்கென்றே இசைக் கலைஞர்கள் இருந்தனர்

இறைவனை வழிபடும்போது, பலவகையான மங்கள ஒலிகளை எழுப்பிச் சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம், ஆகிய வாத்தியங்களை ஒலிக்க நாட்டிய வனிதையர் நடன மாட அவைகளைத் தொடர்ந்து மங்கள வாத்தியக்காரர் மங்கள ஒலிகளை எழுப்பி இறை வழிபாட்டிற்கு மெருகூட்டினர். ஆலயங்களையும் இசையையும் பற்றி நினைக்கையில், நாயன் மார்களுடைய மகத்தான பணி நினைவுக்கு வருகின்றது.

ஆலயங்கள் தோன்றிய காலத்திலிருந்தே, யாழ், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார் ஆகியோர் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். உற்சவ காலங்களில் இவர்கள் ஆலய முன்றலில் ஒன்றுகூடித் தம் திறமையை வெளிக் காட்டுவர். ஆலயங்களில் இசைக்கப்பட்ட இசைக் கருவிகளுள் யாழ், நாதஸ்வரம், முரசுவாத்தியங்கள், கொம்புவாத்தி யங்கள், சுத்தமேளம் கொத்துமணி, சங்கு ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

ஆலய உற்சவ காலங்களில் நவசந்திப் பண் ஓதும் முறை இடம் பெற்றிருந்தது. இன்றும் இவ்வழக்கம் ஆலயங்களில் உண்டு.

இறைவனது ஐந்து திருமுகங்களை உருவகித்து, பஞ்சமுக வாத்தியம் என்னும் ஓர் முரசுவாத்தியம், ஆலயங்களில் வாசிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது தனித்தும் சுத்த மத்தளத்தோடும் வாசிக்கப்படும். இன்றும் திருவாரூர் கோயிலில் இசைக்கப்படுகிறது.

தேவார காலத்திலிருந்தே கூட்டுப்பாடல் முறை வந்தது. அப்பரும், சம்பந்தரும் அடி யவர்களுடன் தேவார திருப்பதிகங்களைக் கூட்டுப் பிரார்த்தனையாகப் பாடினார் என பெரிய புராணம், இயம்புகிறது. பேரிகை முழங்குதல், நிருத்தம், சுத்தநிருத்தம் பற்றித் தனித்தனி யாகக் கூறப்படுகின்றது. அதிகாலையில் காந்தாரப் பண்ணையும், உச்சிக் காலத்தில் நட்ட பின்கௌசிகத்தையும், மாலைச்சந்தியில் இந்தளம் என்ற பண்ணையும் பாடிப் பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறியபடி சந்திகளில் நிருத்தம் செய்ய வேண்டுமெனக் கூறுகின்றனர்.

ஆலயங்களில் இன்றும் ஆலய பூஜை ஆசீர்வாதம் நிறைவு பெற்றதும் பஞ்ச புராணம் ஓதும் மரபு வழக்கத்தில் உள்ளதை நாம் காணலாம்.

பண் பொருந்தும் பாடல்களைப் பரிசாகப் பெறுவதில் பெருவிருப்புடைய நாதரூப மாம் இறைவனை இசையால் துதித்துப் பாடவும், சமய அறிவை வளர்க்கவும் இசையறிவை மக்களுக்கு ஊட்டவும் உறுதுணையாய் நிற்கும் ஆலயங்கள் போற்றுதற்குரியன. வியந்து பாராட்டுதற்குரியன. இறைவனும், இசையும், ஆலயங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது.

"பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி"

# பழந்தமிழ் பண்பாட்டைப் பறைசாற்றும் நடுகல் வழிபாடு

**துரைராஜா - பிரசாந்தன்**
13A வருடம்
வர்த்தகப் பிரிவு

"கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி"

என்று தமிழர் வீரச்சிறப்பின் பழமையினைப் "புறப்பொருள் வெண்பாமாலை" பாராட்டும். உலகில் மனித வாழ்வு இரு பிரிவுகளாக அமைவதனைக் கண்ட பழந்தமிழர், தமது வாழ்வு முறையை அகம், புறம் என இரண்டாக வகுத்தனர். "அகம்" என்று மனைக்குரிய காதல் வாழ்வினையும் "புறம்" என்று வெளி உலக வாழ்வையும் குறித்தனர். அகப் பண்பாடும், புறப் பண்பாடும் ஒன்றில் ஒன்று உறவு உடையன என்பது தொல்காப்பியரின் உறுதியான எண்ணமாகும்.

பழந்தமிழர்கள் காதலை எவ்வாறு தமது கண்களில் ஒன்றாகப் போற்றினார்களோ, அதே போன்று மறு கண்ணாக வீரத்தைப் போற்றினார்கள். சமர்க்களத்திலே சளைக்காது சமர் செய்து விழுப்புண் பெற்று இறப்பதையே ஒவ்வொரு தமிழ்மகனும் விரும்பினான். இவ்வாறு வீரத்தைத் தமது கண்ணாகப் போற்றிய மக்கள் சமரிலே இறந்த வீரர்களுக்கு செய்த வழிபாட்டு முறையே "நடுகல்வழிபாடு" ஆகும்.

ஆராய்ச்சிகளின்படி நடுகல் வழிபாட்டுமுறையானது, சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட ஒன்றென அறியக் கிடக்கிறது. இதன் வழியாக பின்னர் சங்க காலத்தில் இவ் வழிபாட்டு முறை சிறந்து காணப்பட்டது. பொதுவாக வீரர்களுக்குச் செய்யும் வழிபாட்டு முறையாகவே காணப்பட்ட இது, தமிழகத்தில் வீர வணக்கமாகவே கொள்ளப்பட்டது. இந் நடுகல் வழிபாட்டு முறையானது, சங்க இலக்கிய நூல்களின் பாடல்கள் வாயிலாக எடுத்தியம்பப் படுவதைக் காணலாம்.

புறநானூற்றுக் காலத்தில் வாழ்ந்தவர்கள் "ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமருதல்" (வருந்துதல்) மிகவும் இழிவானதென்று கருதினார்கள். (புறம் 51) சமர் புரிந்து வாழும் வீர வாழ்க்கையே வாழ்வென்று கொண்டவர்கள் அவர்கள். "வீரனுக்கே பேரழகி உரியவள்" என்ற கொள்கையும் அன்றிருந்தது.

"திருநயத் தக்க பண்பின் நலனே

பெரு நர்க்கல்லது பிறர்க்கு ஆகாதே" (புறம் 342) என்ற அடிகளால் இதை உணரலாம். குணத்திலோ செயலிலோ ஒருவன் மேம்பட்டு நிற்பானாகில், அவனை இறைத் தன்மைக்கு உயர்த்துதல் உலக வழக்கு.

"வீரநிலைக் காலத்துத் துறக்கம் எய்தல் வீரர்களுக்கு மட்டுமே எளிது; பிறர்க்கு அரிது" என்ற கருத்து பழந் தமிழரிடையே காணப்பட்டது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே;
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
தண்ணடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;
ஒளிருவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக்கடனே" (புறம் 321)

என்ற வரிகளிற்கிணங்க சமரில் உயிர் பிரியும் வீரரின் நினைவுக்காக நடுகல்கள் நடப்பட்டன; வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஊரின் ஒதுக்குப் புறமான பகுதிகளிலே பெரும்பாலும் நடுகல்லை வைத்ததோடு, நின்று விடாது நடுகற்களை நீராட்டி, நெய் சொரிந்து, நாட்பலி ஊட்டிக் காலை வேளையில் வழிபட்டார்கள். இந் நடுகல்லுக்கு மயிலின் தோகையைச் சார்த்தியும், அதற் கருகே கேடயங்கள், ஈட்டிகளை வைத்தும், வழிபடும் முறை காணப்பட்டது.

குற்றமில்லாத சிறப்பினையுடைய மறவரின் அம்பினால் இறந்த வீரரின் பெயர் நடுகல் லில் பொறிக்கப்பட்டது. (பட்டினப்பாலை 78 : 79)

இவ்வாறு வீரரது பெரியனையும் சிறப்பையும் பொறித்து வழிதோறும் மயிற்றோகை அணிந்து விளங்கும் நடுகற்களைப் பற்றி அகநானூறும் புறநானூறும் பல இடங்களில் குறிப் பிடுகின்றன. (அகம் : 67 : 8 -11, புறம் 264 : 1 -4)

"விழுப்புண் படாதநாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து" (திருக்குறள் 775)

என்ற கொள்கையுடைய பழந்தமிழர்கள் அமர்க்களத்தில் இறந்தாலே துறக்கத்திற்கு செல்ல முடியும் என்ற உறுதியான எண்ணங் கொண்டிருந்தனர். விழுப்புண் உடைய வீரர், மிகச் சிறந்த வீரர் என்ற எண்ணம் பழந் தமிழர் வீரநிலைக் காலத்தில் மேலோங்கியிருந்தது.

ஆரம்ப காலத்தில் வீரர்களைப் புதைத்து அவ் இடங்களில் வட்டவடிவ அமைப்பில் கற்களை வைத்துக் கட்டினார்கள். பிற்காலத்தில் இவை சதுர வடிவிலும் கட்டப்பட்டன. சிறு தெய்வ வழிபாட்டிற்கு அடிப்படை நடுகல் வழிபாட்டு முறையே என ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர். சிறு தெய்வம் என்னும் போது ஐயனார், கறுப்பன், மதுரைவீரன் போன்ற தெய் வங்களைக் குறப்பிடலாம். உலகெங்கினும் பல சமுதாயங்களில் வீரர் வழிபாடும் வணக்கமும் காணப்படுவதாகக் கூறும் (Muno Chadwick) "சாட்விக்" என்ற அறிஞர் "வீரர் நிலைக் காலச் சமயம்" என்ற தலைப்பில் நடுகல் வழிபாட்டு முறையைக் கூறுகிறார்.

பண்டைக காலத் தமிழர் பண்பாட்டின் ஒரு கூறாகிய நடுகல் வழிபாட்டின் எச்சசொச்ச மாக, இறந்தவர் நினைவாஞ்சலியாகப் பாடும் "கல்வெட்டு" காணப்படுகிறது..." என்று பேராசி ரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் கூறுவதும் ஈண்டு நோக்கத்தக்கது.

இந் நடுகல் வழிபாட்டு முறை மூலம் நாடு வளம் பெறும் என்றும் குடிமக்கள் சிறப் பெய்துவர் என்றும் மக்கள் கருதுகின்றனர். நாட்டில் மழை வேண்டி இன்றும் நடுகல் வழி பாட்டை மேற்கொள்வதைக் காணலாம். இன்று தமிழ்நாட்டில் வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி முதலிய மாவட்டங்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட நடுகற்கள் காணப்படுகின்றன. இந் நடுகற்கள் "வேடியப்பன்" என்றும், அவை அமைந்திருக்கும் இடம் "வேடியப்பன்" கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. நடுகல் வழிபாட்டு முறையானது இன்றைய மரபாக வழங்கி வரும் ஒரு வழிபாட்டு முறையாகக் காணப்படுகிறது எனலாம்.

உசாத்துணை :- (1) பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்க வெளியீடு "இந்து தர்மம் (1992 -93)

(2) தமிழர் பண்பாடு - பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

(3) எல்லா நதிகளிலும் என் ஓடம் - கவியரசு வைரமுத்து

(4) புறநானூற்று விளக்கவுரை.

# அன்பு வழி காட்டுவனவே எங்கள் சமயங்கள்

**திருமதி. அஜந்தா கார்த்திகேயன்**

"அன்பே சிவம்" என்று கூறுவது எமது சமயம். அன்பினால் இறைவனை அடையும் முறையினைச் சைவம் விளங்குகின்றது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

என்கிறார் திருவள்ளுவர். அன்பின் அடிப்படையில் உருவான அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது பௌத்தமாகும். அகிம்சை என்பது உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காதிருப்பதாகும். கிறிஸ்தவமும் இறைவன் அன்புமயமானவன் என்கிறது. "நீ உன்னை நேசிப்பது போல அயலவனையும் நேசி" என வலியுறுத்திக் கூறுகிறது. இஸ்லாமிய நெறியும்" அல்லாஃ கருணை வடிவானவர் என விதந்தோதுகிறது. இவ்வாறே ஏனைய சமயங்களும் அன்புடைமையைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

மாணிக்க வாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் அன்பினை ஊடுபொருளாகக் கொண்ட தத்துவக் கருத்துகளைத் தாங்கியுள்ளன. "உடையாள் உன்றன் நடுவிருக்கும்" என்ற பாடலில் மணிவாசகர் ஈசனும், தேவியும் மேற் கொண்டொழுகும் அன்பு வாழ்க்கையை உணர்த்துகின்றார். "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என்ற தேவாரத்தில் உடலை கோயிலாகவும், மனத்தினை இலிங்கமாகவும் உருவகித்து, நேசத்தினால் இறைவனை அபிடேகஞ் செய்து பூசை புரிவதாக மேற்போந்த தேவாரம் குறிப்பிடுகின்றது.

சைவ சமயத்தின் நாற்பாதங்களைப் பார்த்தால், இந் நான்கு மார்க்கங்களும் சரியை எனப்படும் சரீரத்தால் செய்யப்படும் தொண்டுகளும், உயர்ந்த உள்ளம் கொண்டு செய்யும் பூசை எனப்படும் கிரியை முறைகளும், இறைவனை நண்பனாகக் கொண்டு நெருக்கமடையும் யோக முறைமையும், இறைவனை உணர்ந்து அறிந்து வழிபாடியற்றும் ஞான முறையுமாகும். இவை அனைத்தும் அன்பின் வெவ்வேறு பட்ட நிலைகளைக் காட்டுகின்றன. இந்த அன்பு நிலைகள் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளைப் பெற்றுத் தருகின்றன. சரியை முறையில் தாசனாகவும், கிரியை முறையில் சற்புத்திரனாகவும், யோக முறையில் தோழனாகவும், பக்தன் செயற்படுவது குறிப்பிடற்குரியது.

**நல்ல சிவ தன்மத்தால் நல்ல சிவயோகத்தால்**
**நல்ல சிவஞானத்தால் நானழிய - வல்லதனால்**
**ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுவ காண்**
**ஆரேனும் காணுமரன்"**

என்பது திருக்களிற்றுப்படியார்.

ஆகவே அன்பு நெறியில் வாழ அன்புதான் முக்கியமானது. நமது வாழ்க்கையிலும், சயம தத்துவங்களிலும் அன்பின் பங்கு மகத்தானதாகும்.

# விரதம் என்பது மனக்கட்டுப்பாடே!

**நிரஞ்சன் இராஜ்சங்கர்**
**ஆண்டு 9 பி.**

தேவாரம், திருவாசகம் ஆகியவை இறைவனை மனக்கண் முன்னே வரச் செய்து தொழவும், மனதைத் தூய்மையாக வைத்திருக்கவும் உதவும். நியாயமான குறை, பேரவா இல்லாத தேவை என்பவற்றை நீக்கச் சாதாரண மாணவர்களுக்கு விரதமே உகந்தது. விரதத்தைப் பூரணமாக்கத் தேவாரம் தியானம் உதவும். "நேரா நோன்பு சீராகாது" என்பது பழமொழி. விரதகாலத்தில் உபவாசமாகப் பகல் முழுவதும் இருக்க வேண்டும். ஆனால் வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளர்கள் மட்டும், பிரார்த்தனையின் பின் உணவு உண்ண தப்பட்டது. விநாயகர்விரதம், சத்திய நாராயண விரதம் போன்ற விரதங்களை முறையாக அனுட்டிக்காததால் கெடுதி ஏற்பட்டதாகக் கதைகள் உள்ளன.

"உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின் ஒண்மலர் அடியல்லால்
உரைக்காது என் நா"

என்கிறார் திருஞானசம்பந்தர். அதாவது துன்பங்களின் போதும், மனதை ஒரு நிலைப் படுத்தத் தன்னால் முடியும் என்கின்றார் சம்பந்தர். உள்ளத்தைப் பட்டினி போடவே உடற் பட்டினி என்று நம் ஆன்றோர் கூறியிருக்க வேண்டும். நாம் உடலை மட்டும் பட்டினி போடும் விரதத்தையே செய்கின்றோம். தீய அல்லது பாவச் செயல்களில் ஈடுபடாதிருக்கவே விரதம் ஒரு நேரமும் உண்ணாது விடுவது விரதமல்ல, என்று விளக்கவும் ஒரு கதை உண்டு.

துருபத முனிவர் மிகுந்த கோபக்காரர். தன்னைக் கவனிக்காது, துஷ்யந்தனை நினைத்துக் கொண்டிருந்த சகுந்தலையை துஷ்யந்தன் மறக்கும் வண்ணம் சாபம் இட்டவர். அப்பெண்கள் திரும்பவந்து முனிவரிடம் கூறிய போது இப்படியான முனிவருக்கு பெண்கள் வீடு திரும்பும் வழியில் ஆறு பெருக்கெடுத்தது. "திருவாசி உபவாசி என்றால் வழிவிடு", என்று ஆற்றுக்குக் கூறும்படி முனிவர் கூறினார். அப்போதுதான் உணவு உண்டவர் எப்படி உபவாசி யானார் என்று அப்பெண்கள் நினைத்தாலும், கோபத்துக்குப் பயந்து கேட்கவில்லை. ஆனால் அந்த வாக்கியத்தைக் கூறியபோது, ஆறு இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. இங்கு உண்பது, உண்ணாதது பிரச்சனை அல்ல தூயமனநிலையே தேவையானது என்று இக் கதை கற்பிக் கிறது. உடலை அல்ல, உள்ளத்தைப் பட்டினி போடுவதே தேவையானது எனவே விரதம் என்பது மனக்கட்டுப்பாடே.

---

**சிதறடையும் சிந்தையுடைய யோகி ஒருவன் மலைக்குகையில் தியானம் பழகுகிறான் என வைத்துக் கொள்வோம். செருப்புத் தைப்பவன் கடைத்தெருவில் அமர்ந்து ஒருமை மனத்துடன் தொழில் செய்கிறான் என வைத்துக்கொள்வோம். இங்கே மலபரிபாகத்தில், அல்லது கருமயோகத்தில் தொழிலாளியே சிறந்தவனாகிறான்.**

- ராமகிருஷ்ணர் -

---

# பாடசாலைகளிற் சமயக் கல்வி

**சித்திரவேல் ரஞ்சித்**
**ஆண்டு - 10 ஏ**

உலகம் நாகரீகத்தின் உச்சநிலையை எட்டிப் பிடிக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே, விஞ்ஞான விநோதங்களால் கடவுள் இல்லையெனச் சண்டப் பிரசண்டம் செய்யும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே, கோள்களை ஆராயச் செய்மதிகளை அனுப்பும் இந்த நூற்றாண்டிலே சமயக் கல்வியின்றேல் உலகம் உய்யாது எனக் கருதுவதால் சமயக் கல்வியின் சக்தியை நாம் உணர முடிகின்றது.

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்னும் பொய்யாமொழியின் குறட்பாவை நாம் எடுத்து ஆராய்ந்து பார்ப்பின், நிறைந்த அறிவுடையவன் கடவுளின் பாதத்தை வணங்காவிடின் அவன் படித்ததால் உள்ள பயன் ஒன்றுமில்லை என்பது தெளிவாகிறது. பகுத்தறிவு உள்ள மனிதனை மிருகத் தன்மை யான செயல்களிலிருந்து காத்து, அவனுடைய ஆசாபாச இச்சையிலிருந்து காத்துப் பிறவித் தொடர்பால் ஏற்பட்ட துர்க்குணங்களிலிருந்து காத்து அவனைப் புனிதத் தன்மை அடைய வழிகாட்டுவதாகச் சமயக்கல்வி அமைய வேண்டும்.

சில கட்டுப்பாடுகளுடன் உருவாகிய சமயம் சமூகத்தைப் புனிதப்படுத்தும். மனிதன் தன் பிற்கால வாழ்க்கையைச் செவ்வனே நடத்தத் தன் சிறு வயதில் பாடசாலை சென்று கற்கின்றான். இப் பாடசாலைகள் வெறும் நூற்கல்வியை மட்டும் அவனுக்கு ஊட்டினால் போதாது. எந்தக் கல்வித் திட்டமும் எந்தக் கல்விக் கொள்கையும் சமயத்தின் அடிப்படையில் உருவாக்கப்படாவிட்டால் நாட்டுக்கு நன்மை பயக்கும் சந்ததியைத் தரமாட்டாது. ஏதாவது ஒரு சமயத்துக்கு இசைந்தவனாகத் தெய்வத்துக்குப் பயந்தவனாக மாணவன் காணப்பட வேண்டும். இல்லாவிடின் இம்மை மறுமை இரண்டிலும் அவன் கஷ்டப்பட நேரும்.

நிரம்பிய நூலறிவு உள்ள ஒருவரிடம் ஒழுக்கமும், சமயப்பற்றும் இல்லாவிடின் இவரிடம் நற் செய்கைகள் உருவாக முடியாது. மண்ணுலகமும் விண்ணுலகமும் இவரை மனதார வெறுக்கும். இவர் கற்ற கல்வியால் இவரும் கெட்டு ஏனையோரும் கெடக் காரணமாகிறார்.

சமயங்கள் சமூகத்தைத் திருத்தும் கொடைகள் மனிதனை அன்பு, தியாகம், பிறர் சிநேகம், சந்தோஷம், மனச்சாட்சி, மனஅமைதியுடன் வாழப்பண்ணும் அரிய சாதனமே சமயம். எந்த உயிர்களிலும் அன்பும், எந்த உயிரையும் தன்னுயிர் போல் காக்கும் பண்பும், பெருந்தன்மையும் கொண்டன சமயங்கள் புத்தர், யேசுநாதர், முகம்மதுநபிகள் போன்றோரின் கொள்கைகள் அச் சமயங்களைச் சார்ந்தவர்களுக்குப் பெரும் நன்மைகளை அளிப்பதைக் காண முடிகிறது.

சமய பாடப் புத்தகங்களில் பின்னிணைப்பாக ஏனைய சமயங்களைப் பற்றிய விடயங்களும் அமைந்துள்ளமை எமது சமயக் கல்வியின் நல்ல அம்சமாகும். பல சமயத் தலைவர்களும் ஒரே மேடையில் தோன்றிப் பேசுதல் மாணவரிடையே பிற மத நேசத்தை உருவாக்கும். நமது நாடு வருங்காலத்தில் அன்பு, தியாகம், பொறுமை, அஹிம்சை நிறைந்த நாடாகத் திகழ எமது சமயக் கல்வி உதவி புரிவதாக.

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை
தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

**- சுவாமிவிவேகானந்தர் -**

அன்பளிப்பு



# இந்து மதத்தில் நாகரிகம்

திருமதி. [illegible]. வன்னியகுலம்

அரசியல், அறிவியல் பொருளியல், சமூகவியல் முதலான சகல துறைகளிலும் மனிதன் வியக்கத் தக்க சாதனைகளைச் சாதித்துக் கொண்டிருக்கின்றான். மேலை நாட்டு வருகையினால்தான் கீழை நாட்டு மக்களும் நாகரீக மனிதர்களாக மாறியுள்ளனர் என்று பலர் கருதிக்கொண்டிருக்கின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்து மத மூல நூல்களிலும், வழி நூல்களிலும் நாகரீகம் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மனிதர்களின் நற்பழக்கங்கள் சமூக வழக்கங்களாகி, அவை பூண்பாடு அல்லது நாகரீகமாகின்றன. எமது திருமுறைகளிலும், பிரபந்தங்களிலும் எமது நாகரீகப் பண்புகள் பரவிக் கிடக்கின்றன. வேதாந்த தத்துவமாகவே வாழ்ந்து காட்டிய சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர், "அன்பு வடிவமே இறைவன்" எனத் தன் சீடர்களிடம் திருவாய் மலர்ந்ததாக அறியக் கிடக்கின்றது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாவரும் அறிகிலர்"

எனத் திருமூலர் வாயிலாக, சைவசமயம் "அன்புதான் சிவம்" எனக் கூறிவைத்துள்ளது. எந்த மனிதரிடமும் இன்சொல்லும், இனிய முகமும் காட்டுதல் இந்துமதம் என்றோ காட்டிய நாகரீகமாகும். எமது மனத்தில் பொறாமை, கோபம், அகங்காரம், புறங்கூறல் முதலான பல அழுக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இத்தகைய அழுக்குகளை இறை நினைவுடன் அகற்றி அன்புள்ளத்தோடு செயற்படுகின்றபோது, எமது முகமும் உடலும் புதுப்பொலிவு பெற்று அழகாகத் தோற்றமளிக்கும் என்பது இந்து மதம் என்றோ காட்டிய நாகரீகமாகும்.

சுவாமி விவேகானந்தர் உலகம் போற்றும் உத்தமராகவும், ஒளிபடைத்த வசீகரத் தோற்றத்தைக் கொண்டவராயும் திகழ்ந்தமைக்கு மன அழுக்குகளை நீக்கியமையே காரணமாக அமைந்தது எனலாம்.

மனித நாகரிகத்தில் ஈதல் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. "ஈவது விலக்கேல்" எனச் செப்புகிறது ஆத்திசூடி. ஈதலுக்குப் பெரும்பொருள் தேவையில்லை. "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" எனும் திரு மூல நாயனாரின் நெறிப்படி வாழ்ந்தாலே ஈதலைச் செய்தவர்களாவோம்.

மனிதர்களாகிய நாம் நன்றிக்கடன் தீர்ப்பதும் நாகரீகமாகும். கச்சயப்பசிவாச்சாரியாரால் அருளப்பட்ட கந்த புராணம், செய்ந்நன்றி மறத்தலால் ஏற்படும் தீங்குகளை எமக்கு இடித்துரைக்கின்றது. வள்ளுவப் பெருந்தகை,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்கிறார்.

இந்துமதப் பண்பாட்டில் பெருமை கொள்கின்ற நாம், அதன் வழிஒழுகுவோமாயின், அதுவே இந்து மதத்துக்கு நாம் செய்யும் அளப்பரிய தொண்டாகும்.

சுபம்

# சைவ சமய சின்னங்கள்

சித்திரவேல் சஞ்ஜித்,
ஆண்டு 11"D"

உடலை இயக்குவது உயிர் உயிரை இயக்குபவர் இறைவன் இதனை நினைவூட்டுவதே சிவசின்னங்களாகும். இதில் விபூதி மிக முக்கியமாகும். ஆகவே விபூதி பற்றி சிறு குறிப்பு கீழே தரப்படுகின்றது.

## விபூதி

விபூதி அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை தருவதால் அப்பெயர் பெற்றது. பெரிய புராணத்தை கற்கும் போது இது எமக்கு புலப்படும்.

சேக்கிழார் பெருமான் திருக்கூட்டச் சிறப்பு செய்யுளில்
"மாசிலாதமணி திகழ் மேனி - மேல்
பூசி நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

## விபூதி தயாரிக்கும் முறை

விபூதியானது குற்ற மற்ற பசுவின் சாணத்தைக் எடுத்து அதில் மேலும் கீழும் நீக்கி நடுப் பகுதியை எடுத்து வெயிலில் காயவைத்து நெற்சப்பட்டையால் மூடி எரித்து நீறாகியவுடன் அதனைப் புதுப்பானையிலும் (சம்புடம்) பட்டுத் துணியிலும் எடுத்து மல்லிகை, முல்லை முதலியநறு மலர்கள் இட்டு மூடிவைக்க வேண்டும்.

## விபூதி தரிக்கும் முறைகள்

விபூதியை உத்தூளனம், திரிபுண்டரம் ஆகிய இரு முறைகளில் தரிக்கலாப் சிவதீட்சை பெற்றோர் திரிபுண்டரலமாகவும். சிவதீட்சை பெறாதோர் உத்தூளனமாகவும் தரிப்பர். தரிக்கும் பொழுது நிலத்திலே சிந்தாமல் அண்ணாந்து வடக்குகோ கிழக்குகோ நோக்கி சிவ சிவ என்று செபித்து அணிதல் வேண்டும்.

## விபூதியின் மகிமை

அழகே மயமானது வெண்ணீறு. வணங்கி மகிழும் பெருமைக்குரியதுமான திருநீறு திருலாலவாயனின் அருள் கூறி நிற்கின்றது. இதை வலியுறுத்தும் வகையில் "நீறில்லா நெற்றி பாழ்" என ஔவைப்பிராட்டியார் வலிறுத்துகின்றார். திருநீற்றின் மகிமையை திருஞான சம்பந்தர் திருநீற்றுப்பதிகத்திற் பாடியுள்ளார். பாண்டியனின் வெப்பு நோயை தீர்க்க சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் பதிகத்தைப்பாடி நோயை தீர்த்தார். எங்களின் மனம், மொழி, மெய், ஆகிய மூன்றையும் தூய்மையாக்கும் கருவி இது. மாணிக்கவாசகர் "தொழுதெழுவார் வினைவளம் நீறென நீறணியம் பலவன்" என புகழ்ந்து பாடியுள்ளார். எனவே ஆதி சிவன் தாழ் அடையும் நாம் நம்பி அணிவோம்

# சந்ததமும் நினைந்து பணிவோம்!

அழகு மிளிர் தாமரையில் அமர்ந்து அருள் புரியவென
ஐங்கரன் சித்தமானான்
பழகு தமிழ் கலை கல்வி பண்பெழுத வந்தவன்
பார்வை ஒரு கோடி தந்தான்
பிழையாத அவனாட்சிப் பெருமையினால் பல காணும்
பேரறிஞர் வரிசை தொடரும்
மழை வெயில் மாருதமும் மால் மருகன் அண்ணனிடம்
வந்தாணை கேட்கும்! என்போம்

காலமகள் மனஅரங்கம் கட்டிடங்கள் தேவையெனின்
கண்ஜாடை காட்டி நிற்பாள்!
ஞாலவலம் எனச் சொல்லி தாய் தந்தை வலம் வந்தே
நல்லறிவு தந்து நிற்பாய்!
நீலமயிலோன் அண்ணன் நின்னுடைய சிறுகூடம்
நீண்டுயர நிலை மாற்றமே
ஆலமுண்டோன் மைந்த! இன்றெங்கள் விளையாட்டு
அருங்கூடம்! அமர்ந்த இடம் நீ!

காந்தி ஐயாத் துணைவி இராஜநாயகி அன்னை
களிப்பின் வழிபாடு செய்வார்
மாந்தி அருட் பிரவாகம் வடிவேல் ஐயா அவர்கள்
வற்றாத கலைகள் தொடுப்பார்
மேற்தலைச் சிறப்பினைச் சிவலோகநாதன் தர
வித்திட்ட விநாயகன் நீ
ஏந்தல் தண்டாயுத பாணி அவர் எண்ணமதில்
எப்படி ஏணை அமைத்தாய்.

இயற்கை எழில் முக்கற்கள் இவற்றிலே ஒன்றுதான்
எங்கள் சித்தி விநாயகன் நீ
தயக்கமேன் இரு புறமும் சாரதையும் இலக்குமியும்
சார்ந்திருக்கும் உரிமை அழகோ
பயமின்றி உயர் பணிகள் ஆற்றிடுக எனக் கூறும்
பக்குவத் தெய்வமகன் நீ
அயராத கடமைகளே அவைதானே தெய்வீகம்
அள்ளி வரும் நறுஞ் செய்திதான்

ஆன்மகனா நந்தாஜி அவர்கள் தொண்ணூ ற்றைந்தில்
அச் சுபநாள் அத்திவாரம்
ஏனிந்தத் திருக்கற்கள் சாரதை கதாதரன்
இளைய விவே கானந்தனோ!
தேனான நினைவெல்லாம் சித்தி விநாயகன்தானே
திரிகற்கள் அவன் அவையேதான்
கானமுற மகிழ்கின்ற கமலத்து ஐங்கரனை
கண் வைத்துக் கலையில் மகிழ்வோம்.

முத்தான யோகியரின் சித்தான எண்ணமது
முகை மலரும் கோயில் வரைவோ
அத் தூது திரு விநாயக சோதி குறளமுதம்
அழகெழுதும் கரத்தின் அசைவோ
சித்த மினிதாகவே கந்த ரவீந்திராஜா
தீட்டிய சீர்த் தெய்வ உலகம்
பக்தி செயத் தான் நேரம் பல கோடி தரவேண்டும்
பங்கயப் பிள்ளை நீயே!

வவுனியாச் சிலையாக வந்து ஸ்ரீ காலிகையின்
வான்வீடு பள்ளி அருளோ
தவமே நம் ரவிச்சந்திர குருக்களின் தலைமையில்
சார்ந்து அருள் தரும் வருகையோ
புவி நாமே பயணங்கள் புறப்படும் வேளைகள்
புத்தருள் நீ தருகின்றாய்
நவநாளே! ஈசுர ஆவணி குட முழுக்கிலே
நல்ல அரவிந்த மலர்த் தேன்.

சண்முக வடிவேலன் சாதனையின் வடிவமே
சந்தனம் கமழ் நாயகா!
எண்ணத்தை இனிதெழுதும் பரமகுருநாதன் அணி
இயல்பான உயர் வடிவங்கள்
அண்ணலே கனகசபா பதி சர்மா பூஜையில்
அன்பின் சௌந்தர ராஜனும்
கண்ணியத் திரு நாட்கள் கலைஞான எதிர்காலம்
காணக் கண் கோடி வேண்டும்.

தாழ்வாரம் அமர்ந்த அருள் தகுந்த கலைக்கூடத்தில்
சாரும் ஈசுர ஆவணி
வாழ்நாளில் உயர் நாட்கள் வருகின்ற தொடர்காலம்
மாண்பு அடி முன் ஆறுதான்
ஏழ்ஸ்வரங்கள் எழிற் கலைகள் எதிர் காலத் தொழில் நுட்பம்
இவை யாவும் நினக்கு அர்ப்பணம்
போழ்தெல்லாம் உன்னோடு புகன்றிருக்கும் வருங்காலம்
பொன் எழுதும் உயர் நாட்களே!

தூய விபுலாநந்த சுவாமிகளின் பூஜனையில்
சுடர்ந்த விநாயகனே வருக!
ஆய கலை அருள் வெள்ளம் அனைவர்க்கும் பாலிக்க
அமையும் ராமகிருஷ்ண வருக!
நாயனார் காலமென நல்லநெறி இங்கெழுத
நாடி வரும் பதமே! வருக!
தாயன்பு பொழிய வரு சக்தி விக்னேஸ்வரர்
சந்ததமும் நினைந்து பணிவோம்!

**- ரீ. என். தவபாலன் -**

# எமது நன்றிகளை.....

- ஆசியுரை நல்கிய மதிப்பிற்குரிய கொழும்பு இராமகிருஷ்ண சங்க சுவாமி ஸ்ரீமத் ஆத்மகானந்தா அவர்கட்கும், ஆலய பிரதிஷ்டாகுரு வேதாகம மாமணி" சோ. இரவிச்சந்திரக்குருக்கள் அவர்கட்கும்,
- வாழ்த்துரை தந்து எமக்கு இனிய நல்வழிகாட்டிய எமது அதிபர், பிரதேச கல்விப்பணிப்பாளர், திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் ஆகியோருக்கும்,
- எமது பணிகளில் அயராது உழைத்த அன்பிற்குரிய பொறுப்பாசிரியருக்கும்.
- இதழின் சிறப்பிற்காக தமது மேலான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரியின் பிரதி அதிபர்களுக்கும், மன்றத்தின் ஏனைய ஆசிரியர்களுக்கும்
- கருத்துக்கள் நிரம்பிய கட்டுரைகள், மற்றும் ஆக்கங்கள்ளக் தந்துதவிய அறிஞர் குழாத்திற்கும், ஆசிரிய மாணிகளுக்கும் மாணவச் செல்வங்களுக்கும்
- புகைப்படங்களை எடுத்துதவிய. புகைப்பட பிடிப்பாளர்களுக்கும்
- இதழின் அட்டையை சிறப்புற வடிவமைத்த போகன்விலா அச்சகத்தினருக்கும்,
- எமக்கு பல வழிகளில் உதவிய முன்னைய 'சாரதை' நூலின் இதழாசிரியருக்கும்
- விளம்பரங்களை தந்துதவிய நிறை உள்ளம் படைத்த வர்த்தகர்களுக்கும்
- மலரை சிறப்புடன் அச்சிட்டு உதவிய ஸ்ரீ கணேச அச்சகத்தினருக்கும்

# ......நவில்கின்றோம்.

**இந்து மாணவர் மன்றம்**
**இ. கி. ச. ஸ்ரீ. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,**
திருக்கோணமலை.
1997 – 09 – 22

விநாயகர் அருள் பெற வாழ்த்துக்கள்

# Dr. K. V. Rajaah

403, POWER HOUSE ROAD,
TRINCOMALEE.

T. P. 22736

எமது வாழ்த்துக்கள்

# GAYATHRI VINAYAHAR CENTRES

169/3, Thirugnanasampanthar Street,
Trincomalee.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- பட்டு வகைகள்
- சில்வர் பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- **Fancy** பொருட்கள்

என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்கள்.
**M. சந்திரலிங்கம்**
**M. இந்திரலிங்கம்**

*With Best Compliments from*

# R. R. Group (PVT) Ltd.

## Civil Engineers, Merchants and General Contractors

- ★ Transport Agent.
- ★ Manufactures of Cement Hollw Blocks
- ★ Distributors of C. I. C Paints
- ★ Authorised B. M. C. Dealers
- ★ Hardware Merchants

Office and Hard Ware Stores

71, Thirugnanasampanthar Street,
Trincomalee.

Tel: 026 - 22046 - Fax: 026 - 22043

**Work Shop**

159, Seaview Road.
Trincomalee.

*With Best Compliments from:*

# THASSIM JEWELLERS

Specialist in Gems, Gold Jewellery, Antiques, Curios Batiks & Manufacturing Jewellers

*(Fully Airconditioned Show Room)*

76, Dockyard Road,
Trincomalee.
Sri Lanka.
Phone : 026-22007
Res : 21077
Fax : 0094-26-21188

*Branch :*

**HOTEL BLAUER OCEAN**

Uppuveli, Trincomalee.
Sri Lanka.

விநாயகர் அருள் யாவர்க்கும் கிட்டுவதாக வாழ்த்துகின்றோம்.

For Modern and Distinctive Jewellery

# R. V. R. JEWELLERY

167, Main Street,

Trincomalee.

With Best Compliments from :

# EASTERN LANKA ENTERPRISE

**63, MAIN STREET,**

**HERO HONDA / TVS / ANKUR**



மொபைட் சைக்கிள்
சுசுக்கி மோட்டார் லங்கா லிமிட்டெட்
ஏக வினியோகஸ்தர்கள்
திருக்கோணமலை.

Prop : S. Balasubramaniam ☎ 026-20210

With Best Compliments from :

# ST. ANTHONY'S CONSOLIDATED LTD.

*Office :*
76, Post Office Road,
Trincomalee.
T. P. 026-22117

*Head Office :*
516, Sri Sangaraja Mawatha,
Colombo - 10.
T. P. 324261 - 5 Lines.

**Telex : 22684 - Sancon Ce.**
**Fax : 94 - 1 - 446554**

*With Best Compliments from:-*

# ELECTROLANKA

IMPORTERS & DEALERS IN ALL KINDS OF ELECTRICAL
LIGHT FITTINGS, ELECTRICAL APPLIANCES,
REFRIGERATORS AND DEEP FREEZERS

293, 295, COURT ROAD,
TRINCOMALEE.
SRI LANKA.

T. P:- 026 - 22112

FAX:- 20341

Branch:-
**Electro Lanka,**
**N. C. Road,**
**Trincomalee.**
**T. P. 21343**

Head Office:-
**Colombo.**
**T. P. 01 - 438243**

*West Best Compliments from :*

# HILL PHARM

***FOR BEST MEDICAL SERVICE,***

419, Thirugnanasampanthar Street,

Trincomalee.

☎ 026- 22157
21570

Dr. N. Ravichandran

*With Best Compliments From:-*

# K. K. NITHY TRADERS

**General Merchants and Commission Agents**

250 - 252, CENTRAL ROAD,

TRINCOMALEE.

T. P. 026 - 20847

With Best Compliments from :

# BARAKATH TRADERS

WHOLESALE AND RETAIL DEALERS OF CEMENT
HARDWARE AND FERTILIZER

**AMPARAI ROAD,**
**MAVADIPPALLI,**
**KARAITHIVU**

Prop : *M. I. A. Muthalif*

*With Best Compliments from:*

For all your requirements in

22Ct. Gold Jewellery

# PRAGASH JEWELLERS

327, Court Road,

Trincomalee.

☎ 026-22852

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக
பணிக்கு எமது வாழ்த்துக்கள்

# R.T. Kanth Tailoring

Prop : *R. Ragunathan*

No. 84, Thirugnanasampanthar Street,
Trincomalee.

இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின்

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய

# கும்பாபிஷேகம் சிறப்புற

எமது வாழ்த்துக்கள்

# சனச வங்கி

With Best Compliments from :

Sairam

## MAJOORANS BOOK CENTRE

Prop : *V. Rasakkoone*

**101, VIDYALAYAM ROAD,**

**TRINCOMALEE.**

விநாயகர் அருளட்டும்

# Maheswari Hardware Stores

DEALERS IN HARDWARE GOODS

52, Thirugnanasampanthar Street,

Trincomalee.

Prop : A. Arumuganainar

*With Best Compliments from :*

# Jeganathan Shipping Ltd.

**268, Inner Harbour Road,**

**Trincomalee.**

☎ 026- 22208
22732

**எமது வாழ்த்துக்கள்:-**

- தரமான வீடியோ தொடர் நாடகங்கள்
- பட்டிமன்றங்கள்
- பழைய புதிய வீடியோ திரைப்படங்கள்
- உங்கள் எல்லா வைபவங்களையும் வீடியோவில் ஒளிப்பதிவு செய்தல்

*ஆகிய சகல விடயங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்*

# குமரன் வீடியோ மூவீஸ்

**361 – A கோட்றோட்,**

**திருகோணமலை.**

எமது வாழ்த்துக்கள்:-

- சகல வித கலர் புகைப்படங்கள்
- உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல வைபவங்கள்
- பாடசாலை நிகழ்ச்சிகள்
- கறுப்பு வெள்ளை, கலர் படங்களை பெருப்பித்தல்
- விஷேடமாக கலர் பாஸ்போட் புகைப்படங்கள்

ஆகியவற்றை மலிவாகவும், விரைவாகவும் தரமாகவும் செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய திருமலையில் உள்ள ஒரே ஸ்தாபனம்.

# வீ. எம். கே. கலர் லாப்

**361 - B கோட்றோட்.**

**திருக்கோணமலை.**

With Best Compliments From:-

# CENTRAL TEA STORES

தரமான தேயிலை, பலசரக்குப் பொருட்கள் என்பவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**166, CENTRAL ROAD,**

**TRINCOMALEE.**

With Best Compliments From:-

# GNANAM MEDICALS & CLINIC

Authorised Distributors for:-

- Astron Pharmaceutical Ltd.
- Hemas Marketing (Pvt) Ltd.
- Burns Philp Lanka (Pvt) Ltd.
- Kodak Products & Processing printing of all Kind of Film Rolls.
- Transport Services
- Van Hiring

Head Office:-

169, Main Street,
Trincomalee.
T. P. 026 - 22750

Branch:-

217, Thirugnanasampanther Street,
Trincomalee.

With Best Compliments from :

# NEW AMBAL CAFE

**79, Post Office Road,**
**Trincomalee.**

Prop : R. Kajendran ☎ 026-21089

நல்வாழ்த்துக்களுடன்

# டில்கா கிறீம் ஹவுஸ்

விநியோகஸ்தர்கள்

எலிபன்ட் ஹவுஸ் ஐஸ் கிறீம்
மற்றும் செய்திப் பத்திரிகைகள்

**இல. 66, 68, திருஞானசம்பந்தர் வீதி**
**திருக்கோணமலை.**

தொலைபேசி: 026 - 22709

உரிமையாளர்: **எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா**

With Best Compliments from :

# SELVASANNITHI STORES

prop:- M. Veluppillai

**58, Sea View Road**

**Trincomalee.**

With Best Compliments From:-

# CORONATION STORE

Dealers in:-

Fancy Goods, Wall Clocks
Guft Items, Electrical Goods,
and
Baby Items

172, Ahambaram Road,
Trincomalee.

**T. P. 026 - 22445**

*With Best Compliments from:*

# KANNAS STORES

**Dealers :-** Rahino Roofing Asbestos Sheets
and
Hardware Goods

T. P. 026 - 22401
Grams: Kannas

**166/1, Main Street,**
**Trincomalee.**

ந ஊக்கமளித்த இவர்களுக்கும்........

EVAN VIDEO MOVIES

A FARM HOUSE

AN SALOON

AMMIE ENTERPRISE
A. P. O.

LIHAI TRADE CENTRE

. எமது நன்றிகள்

எமது அடுத்த இதழுக்காக வாசகர்கள், அறிஞர்களிடம் இருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவை ஆன்மீகம் தொடர்பானவையாக இருத்தல் வேண்டும்

அனுப்பவேண்டிய முகவரி :

**இதழாசிரியர்**
**" சாரதை "**
**தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா**
**இந்துக்கல்லூரி**
**திருக்கோணமலை.**

தி/ஸ்ரீ கணேச அச்சகம் தொலைபேசி: 026 - 22617

*Best Wishes :*

# New Gopalan Company

** 28, Sea View Road, Trincomalee. **

*Distributors :-*

Kelani Cables Ltd.

Central Industries Ltd.

Jinasena Ltd. & C. I. C. Paints

*Dealers :-* L. P. Gas, General Hardware & Building Materials

*

*

*

Show Room

207, Main Street, Trincomalee.
T: Phone : 026 - 22407, 026 - 22013
026 - 22405

இராம கிருஷ்ண சங்க

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

**அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய**

**மகா கும்பாபிஷேகம்**

சிறப்புற

எமது வாழ்த்துக்கள்

இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

கூட்டுறவுச்சங்கம் (வ - து)

*எம்மிடம்*

- *பாடசாலை உபகரணங்கள்*
- *அப்பியாசக் கொப்பிகள்*
- *எழுது கருவிகள்*

*என்பவற்றை சகாய விலையில்*

*பெற்றுக் கொள்ளலாம்.*

Bougainvilla Printers, Colombo - 14. Fax : 590943